


கல்கி
LKI
.1963
30
காசு



ஆதரவுடன் சீராட்டி
ஆஸ்டர்மில்க்
பாலூட்டி...
உங்கள் ஆசைக் கண்மணியின்
பாக்கியம்: ஆஸ்டர்மில்க் அளிக்கும்
ஆரோக்கியம். காரணம், தாய்ப்பாலுக்கு
நிகரானது ஆஸ்டர்மில்க். பரிசுத்தமான
பாலிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள
ஆஸ்டர்மில்க், பாப்பாவின் பசிக்கும் ஜீரண
சக்திக்கேற்பப் பிரத்தியேகமாகப்
பக்குவப்படுத்தப்பட்டுள்ளது. தவிர,
பற்களும், எலும்புகளும் திடவளர்ச்சி
பெறுவதற்கான வைட்டமின் 'டி'யும்
இரத்த சோகை தட்டாமல்
காப்பதற்கான அயச்
சத்தும் அதில் சிறப்புறச்
சேர்க்கப்பட்டுள்ளன.
OSTERMILK
...தாய்ப்பாலுக்கு நிகரானது.
இலவசம்: 'ஆஸ்டர் மில்க் புத்தகம்' (ஆங்கிலப் பிரதி)...
விரிவுமிக்க, குழந்தைப் பராமரிப்பு நூல்... தபால் செலவுக்காக 50 ந.
பைசா தபால் வில்லைகள் இணைத்து எழுதுக: ஆஸ்டர்மில்க்'
தபால் பெட்டி எண் 2420, சென்னை-2.
OS.9-X51-M. TM

பொருளடக்கம்



பட விளக்கம் 21ம் பக்கம் பார்க்க

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே

சோபகிருது, வைகாசி 19உ
ஜூன், 2உ 1963

நன்றி கூறுகிறோம் உமது நல்லாதரவுக்கு!



தரத்தையும் தன்னகத்துப் பற்றையும் பெரிதெனக்கருதி, தாய்நாட்டுத் தயாரிப்பாகிய எமது ரகத்தையே தேர்ந்தெடுத்தது தங்கள் கரம். வற்புறுத்தலோ, கண்டனமோ எந்நிலையிலும் விரும்பிய ரகத்தை விடாது பெருமையோடும் துணிவோடும் பிடித்துவருகிறீர்கள்.

தந்திரமான பிரசாரங்களால் மதிமயங்கி-விடவில்லை தாங்கள். இந் நாட்டில் தயாரிக்-கப்படும் சிகரெட்டுக்கள் சில, வேற்றுநாட்டு ரகங்களோ என்று தவறுக் கருதப்படு-கின்றன; அவற்றின் விலை உயர்வாக இருப்பதுபோல தரமும் உயர்வாக இருந்து விடுவதில்லை என்பதை உணர்ந்துள்ளீர்கள். தரமான சிகரெட்டுக்களை—ஆம், இன்றி யமையாத அயல்நாட்டு நாணயமாற்றினைக் காப்பாற்றித் தர உதவும் அசல் இந்திய சிகரெட்டுக்களை - உற்பத்தி செய்வதற்கான ஆள்பலம், நிதி, பொருள்வளம் யாவும் படைத்ததே நம் நாடு என்பதை நன்கறிந்துள்ளீர்கள்.

நீங்கள் காட்டும் வழியையும், புகை பிடிப்பதிலே உங்களைப் பின்பற்றிப் பெருகி வரும் மக்கட் திரளையும் பொறுத்துள்ளது இவ் இளம் தொழிலின் வருங்காலம்.

அதிலே எமது பங்கை உணர்ந்து, செவ்வனே தங்களுக்குப் பணிபுரிவதன்மூலம் தாயகத்தின் தொழில்வளத்தை மேம்படுத்துங் கடமையிலே எம்மை அர்ப்பணித்துக் கொள்கின்றோம்.



கோல்டன் டுபாக்கோ கம்பெனி லி., பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT 61 TAM.



மலர் 22

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

இதழ் 44

சத்தியமேவ ஜயதே!

'சத்தியமேவ ஜயதே' என்ற வாக்கில் கடந்த சிலகாலமாக நமக்கு அடிக்கடி நம்பிக்கை குன்றி வந்திருக்கிறது. நம் நாட்டுப் பொதுத் தேர்தல்களில் சத்தியம் ஜயிப்பது சாத்தியமே இல்லை என்றுகூட எண்ணி யிருக்கிறோம்.

ஆட்சியாளர்கள் தமக்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்கும் யாரையும் கொடுமைப் படுத்தவும், தமக்கு அநுசரணையாகக் கருத்துத் தெரிவிக்கும் யாருக்கும் விசேஷ சலுகை அளிக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். பண வசதியும் படைத்திருக்கிறார்கள். எனவே ஆளும் கட்சிக்கு எதிராக வாக்களிக்கும் வாய்ப்புக்கள் மிகமிக நலிகின்றன.

இந்த நிலையைக் கண்டு, 'உண்மையே வெல்லும்' என்ற உயர்மொழியில் அவ நம்பிக்கை கொண்டவர்களுக்கெல்லாம் காரிருளில் மின்னல்போல, அம்ரோஹா, ஃபரூகாபாத் ஆகிய இடங்களின் உபதேர்தல் முடிவுகள் வந்துள்ளன. இவ்விரு தொகுதி களிலும் ஆசாரிய கிருபளானி, டாக்டர் ராம் மனோஹர் லோஹியா ஆகிய இருபெரும் எதிர்க்கட்சித் தலைவர்கள் இரு பிரபல காங்கிரஸ் தலைவர்களை அரை லட்சம் வாக்குகள் வித்தியாசத்துக்குமேல் பெற்று வெற்றி கண்டிருக்கின்றனர். அவர்கள் வென்றதாகக் கூறுவதைவிட, பிரதமரின் மாநிலத்திலேயே நிகழ்ந்துள்ள இத்தேர்தல் முடிவுகளை நேருஜியின் தோல்வி எனக் குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும். வென்ற தலைவர்களின் அரசியல் கோட்பாடு எதுவாயினும் ராஜாஜி கூறியிருப்பது போல், 'இருவருமே காங்கிரஸ் கொள்கைகளிலுள்ள தவறுகளையும், பெர்மிட் - லைசென்ஸ் - கோட்டா ராஜ்யத்தின் எதிர் விளைவான லஞ்ச ஊழலையும் அயர்வின்றிப் பகிரங்கப்படுத்தும் இரு பலசாலிகளாவர்.'

ஆசாரிய கிருபளானி அவர்களைத் தோல்வியுறச் செய்வதற்காகக் காங்கிரஸ் செய்த பித்தலாட்டமும், தகிடுதத்தமும் கொஞ்சநஞ்சமல்ல. ராஜ்ய சபையில் அங்கத்தினராக உள்ள மத்திய மந்திரி ஒருவரைக் கடைசி நிமிஷத்தில் தங்கள் அபேட்சகராக நிறுத்தி வைத்து வகுப்புவாதப் பேய்க்குக் கள் வார்த்தார்கள்; அதிகார பலத்தைக் காட்டி அச்சுறுத்தினார்கள். இவ்வளவுக்கும் பின்னர் கிருபளானி அவர்கள் வெற்றி வாகை சூடினார் என்றால் அதற்குக் காரணம் அவரது தேச சேவையும், அரசியல் அறிவும் மட்டுமல்ல; காங்கிரஸ் திட்டத்தில் மக்களுக்கு நம்பிக்கையில்லை என்பது உண்மை யாகி விட்டது.

காங்கிரஸ் எங்கேனும் வெற்றிகண்டது என்றால் அதனால் மக்கள் அதன் கொள் கைகளில் நம்பிக்கை வைப்பதாகச் சொல்ல முடியாது. வரி உயர்வையும், தங்கக் கட்டுப் பாட்டையும், பட்சபாதச் சட்டங்களையும், உளுத்துப்போன கூட்டுச்சேராக் கொள்கையையும் மக்கள் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டார்கள். காங்கிரஸின் பணபலமும், அதிகார பலமுமே அதன் வெற்றிக்குக் காரணம். அவ்வாறிருந்தும் அது எங்கேனும் தோல்வியுற்றதென்றால் மக்கள் அதன் கொள்கைகளை நிச்சயமாக ஒப்பவில்லை என்றுதான் அர்த்தம்.

ராஜ்ய சபை அங்கத்தினரான ஹபீஸ் முகம்மது இப்ராஹிம் அவர்கள் இப்போது மந்திரி பதவியை ராஜிநாமா செய்யவேண்டுமா; செய்ய வேண்டாமா என்றெல்லாம் கேட்கப் படுகிறது. சட்டப்படி எது சரியானாலும் மக்கள் மந்திரியைத் தேர்ந்தெடுக்கவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. அம்ரோஹாத் தொகுதி மக்களைப் போலவே நாட்டு வாக்காளர் யாவரும் தங்கள் சத்திய உணர்வைப் போற்றிக் காப்பார்களாக!

என்ன சேதி?

தமாஷா வரி

சர்க்கார் வரிபோட்டு மக்களைக் கொடுமைப்படுத்துவதை ஒரு தமாஷாகக் கருதியிருக்கிறார்கள் என்பதைப் பட்ஜெட்டுகளைப் பார்த்த நேயர்கள் உணர்ந்திருப்பார்கள். இந்தத் தமாஷின் காரணமாக ஜூன் 1-ம் தேதி முதல் சினிமா போகும் நேயர்கள் மிக அதிகமான கட்டணம் செலுத்திப் பார்க்க வேண்டியதாகும். ரூ. 2.62 டிக்கெட் ரூ. 3·37 ஆகவும் 2 ரூபாய் டிக்கெட் ரூ. 2.50 ஆகவும் ரூ. 1.33 டிக்கெட் ரூ. 1.66 ஆகவும், 67 ந.பை. டிக்கெட் 87 ந.பை.யாகவும் 41 ந.பை. டிக்கெட் 51 ந.பை.யாகவும் உயருகின்றன. அதாவது தமாஷா வரியில் நூறு சதவிகிதம் உயர்த்தியதால் இப்படிக் கட்டணங்கள் எக்கச்சக்கமாக உயர்கின்றன. இந்தத் தமாஷா வரியில் வரும் தொகையில் சென்னை நகர மன்றம் எழுபத்தைந்து சதவிகிதமும், சென்னை அரசாங்கம் இருபத்தைந்து சதவிகிதமும் எடுத்துக் கொள்கின்றன. சென்னை நகரவாசிகள் நல்ல சாலைகளும் குடி தண்ணீர் வசதியும் இல்லாமல் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். இந்தத் தமாஷா வரி மூலம் கிடைக்கும் தொகையை மக்களின் இந்த அத்தியாவசியத் தேவைக்குச் செலவழிப்பார்கள் என்று எதிர்பார்ப்போமாக.

ஆத்ம ஞானிக்கு அபசாரம்

அறிவுக் கனலாய்த் திகழ்ந்த ஆன்ம வீரர் விவேகாநந்தரின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படும் இந்தச் சமயத்தில் உள்ளம் குமுறச் செய்யும் ஒரு செய்தி கன்யாகுமரியிலிருந்து வருகிறது. குமரிக் கடலில் விவேகாநந்தர் தவமியற்றி வெளியுலகிலே பாரத நாட்டின் பெருமையை நிலைநாட்டப் பெரும் ஆத்ம பலத்தைப் பெற்ற அந்தக் கற்பாறையிலே இந்த அரிய நிகழ்ச்சிக்கு ஞாபகார்த்தமாகப் பதிக்கப்பட்ட சலவைக் கல்லை யாரோ சில விஷமிகள் தகர்த்துச் சின்னபின்னம் செய்துவிட்டார்களாம். இந்த விஷமிகள் எந்த மதத்தினராயினும் தங்களுக்காவது, தங்கள் மதத்துக்காவது நன்மை செய்தவர்களாக மாட்டார்கள். ஸ்வாமி விவேகாநந்தர் சர்வ மத சமரச ஞானி. வேதாந்த சமயம் உலகுக்கெல்லாம் பொதுவானது; எம்மதத்தைச் சேர்ந்தவர்களும் அதனைப் பின்பற்றலாம் என நிலைநாட்டிய மகான். அப்படிப்பட்டவர் அருள் ஒளி பெற்ற இடம் எம்மதத்தினருக்குமே புனித உணர்வை யூட்டுவதாகும். விரைவில் அன்பர்களும் சர்க்காரும் இடிபாடுகளை அப்புறப்படுத்தித் தக்க நினைவுச் சின்னம் எழுப்ப முயற்சி எடுத்துக்கொள்வார்களென்று நம்புகிறோம்.

அம்ரோஹா தேர்தல்



போகிற போக்கில்...!

சிட்டுக் குருவி

டாக்டர் சுகர்ணோ இந்தோனேஷியாவின் 'ஆயுட்கால பிரஸிடெண்ட்' ஆகி விட்டார். கிராம முனிசிப்புக்கள் பதவி வகிப்பது மாதிரி கடைசி வரை பதவியிலிருக்கச் சட்டம் போட்டாகி விட்டது. ஒரு சிறு சந்தேகம். கிராம முனிசிப்புக்களுக்கு வாரிசு உரிமை உண்டு. இந்த உரிமை சுகர்ணோவுக்கு இருக்கிறதா என்று தெரியவில்லை. ஒருவேளை இல்லை என்றால், ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரும்படி செய்ய வேண்டும். இப்படிச் சட்டத்துக்கு இடம் தருவார்களா என்று கேட்க வேண்டாம். சோஷலிஸ்ட் அமைப்பில் இது என்ன, எது வேண்டுமானாலும் நடக்கும்.

டாக்டர் சுகர்ணோவைக் காணும் பாரத நாட்டுக் காங்கிரஸாருக்குப் பொறுமை ஏற்படுவதாக வதந்தி. பிறந்தால் இந்தோனேஷியாவில் பிறக்க வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்களாம். ஏனெனில் பிறகு தேர்தல் தொல்லையே இருக்காதல்லவா?

ஃ ஃ ஃ

அம்ரோஹாவில் ஜாதி வெறி தூண்டி விடப்பட்டதாம். இதோடு முழு மூச்சில் காங்கிரஸார் ஸ்ரீ கிருபளானியை எதிர்த்திருக்கிறார்கள். "இந்த வேகத்தை எதிரி சீனாவிடம் காட்டக் கூடாதா?" என்று கிருபளானி கேட்டிருக்கிறார்.

திரு கிருபளானி கேட்பது மாதிரி காங்கிரஸார் செய்து விடக் கூடாது. ஏனெனில் சீனப்போரில் 'அம்ரோஹா முடிவு' ஏற்பட்டால் தேசத்துக்கே ஆபத்தல்லவா?

ஃ ஃ ஃ

பிரதமர் நேரு வீட்டு வாசலில் 2500 பொற்கொல்லர்கள் ஆர்ப்பாட்டம் செய்து மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து நேரு, "பொறுமையாக இருங்கள் — தியாக மனப்பான்மையில் இருங்கள்" என்று கூறினாராம்!

இந்தப் பேச்சைக் கேட்ட பொற்கொல்லர்கள் "நேரு ஜிந்தாபாத்" எனக் கோஷம் போட்டார்களாம். பிறகு அதே மூச்சில் தேசாயைக் கண்டித்துக் கோஷம் போட்டார்கள் எனச் செய்திகள் வந்திருக்கின்றன.


பொற்கொல்லர்கள் மகஜரை நிதி மந்திரியின் இலாகாவுக்கு அனுப்பி வைப்பதாக நேரு கூறியிருக்கிறார். இந்த இலாகாவுக்கு மகஜர் போனால் என்ன ஆகும்? ஒரு மாமாங்கம் வரை தூங்கும். பிறகு அனுப்பிய ஆளின் அட்ரஸ் இருந்தால் 'கவனிக்கிறோம்' எனப் பதில் வரும். பதில் பெறுவதற்காக இருந்த ஆள் பரலோகம் போயிருந்தால் பிறகு எல்லாமே தீர்ந்ததாகி விடும்!

ஃ ஃ ஃ

தங்கக் கட்டுப்பாட்டு உத்தரவு வந்ததற்குப் பிறகு ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பொற்கொல்லர்கள் 'தற்கொலை' செய்து கொண்டிருப்பதாகப் பொற்கொல்லர் சங்கம் அறிக்கை விடுத்திருக்கிறது. சோஷலிஸ ஆட்சியில் இதென்ன பெரிய தொகை என்று சோஷலிஸ்டுபாணியினர் கூறுகிறார்களாம்! அதிசயபுரியில் இதைவிடப் பலமடங்கு அதிகமாகத் தற்கொலைகள் நடந்ததாகக் கூறி அவர்கள் புள்ளி விவரங்கள் தருவதாகக் கேள்வி!


ஊசிக் காதுவழியே ஒட்டகம் வருமா?














1. செங்கற்பட்டு மாவட்டத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முதலாவது மகாநாடு சமீபத்தில் பல்லாவரத்தில் சிறப்பாக நடந்தேறியது. இம் மகாநாட்டில் சென்னை முதன் மந்திரி திரு காமராஜ், தாரண துரைக்கண்ணன் அவர்களுக்கும், கா. ஸ்ரீ. ஸ்ரீ. அவர்களுக்கும் கேடயம் வழங்கினார்.

2. இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் பிரசுரிக்கும் புதிய பொருளாதார விமரிசனப் பத்திரிகையைத் தொழில் மந்திரி திரு வேங்கடராமன் வெளியிட்டார். பாங்கின் சேர்மன் திரு எம். சிடி. முத்தையா அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

3. சென்னைக்குச் சமீபத்தில் உள்ள வால்மீகி வசித்த தலமான கோயம்பேடு குருங்காளீஸ்வரர் ஆலயத்தில் நவக்கிரக பிரதிஷ்டை செய்வதற்காக சிம்ஸன் குருப் கம்பெனி சிப்பந்திகளும், தொழிலாளர்களும் ஐந்நூறு ரூபாய் வழங்கியுள்ளனர். இந்த நிதியைத் திரு கிருஷ்ண மேனன் கோவில் டிரஸ்டியிடம் வழங்குகிறார்.

4. சென்னை ரோட்டரி கிளப்பினர் லேடி வெல்லிங்டன் அய்யர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி எஸ். செல்லம் அவர்களுக்குக் கௌரவப் பரிசு வழங்கிப் பாராட்டினர்.

5. சென்னை ராஜாஜி ஹாலில் குழந்தை எழுத்தாளர் சங்க விழாவை உதவி ஜனாதிபதி ஜாகிர் ஹுசைன் ஆரம்பித்து வைத்தார். அமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலம் புத்தகக் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்.

முதல்ழ்வர்



ராஜாஜி-சோமு

8

ஆழ்வார் தாம் ஞானம் அடைந்த வியப்பை எண்ணிப் பாடுகிறார். கடற் சேற்றில் அழுந்தி மறைந்து போய் நின்ற பூமியைப் பகவான் அந்த இடருக்குத் தகுந்த அவதாரம் எடுத்து, வராகமூர்த்தியாகிச் சேற்றிலிருந்து நெம்பி எடுத்தவாறு, இருள் நிறைந்த என் உடலில் பகவானே புகுந்து, உள்ளத்தை அறியாமைச் சேற்றிலிருந்து நெம்பி எடுத்து ஞான விளக்கை ஏற்றினான், என்கிறார்.

ஒருவனுக்கு ஞானம் ஏற்பட்டால் அந்த ஞானத்துக்குக் காரணகர்த்தா ஆண்டவனே. இந்த உடம்பினை புகுந்து ஞான விளக்கை ஏற்றிவைக்கிறவன் இறைவன். கடலுக்குள்ளிருந்து உலகை மீட்டியருளிய வராக மூர்த்தி அவன். அவனை நான்தோறும் நினையாதவர்க்கு நற்கதி ஏது?

ஊனக் குரம்பையின்
உள்புக்கு

[ஊனக் குரம்பை — ஊனினால் ஆகிய குடிசை. உள்புக்கு—நுழைந்து.]

இந்த உடம்பாகிய தசைக் குடிசையினுள் புகுந்தது. அரசன் புகுவதற்கு அருகதையற்ற இழிந்த ஒரு குடிசையிலே அவன் புகுந்து விளக்கேற்றித் தந்தவாறு!

பகவானுடைய காருண்யத்தை இப்படி வர்ணிக்கிறார்.

ஊனக் குரம்பையின்
உள்புக்கு இருள்நீக்கி
ஞானச் சுடர் கொளீஇ

[கொளீஇ—கொளுத்தி, பற்றவைத்து.]

இந்த இருள்மயமான அஞ்ஞான சரீரக் குடிசையிலே புகுந்து, அறியாமையாகிற இருளை அகற்றி, ஞானச் சுடர் விளக்கை ஏற்றி வைத்தான் எம்பெருமான்.

நான்தோறும்—ஏனத்து
உருவாய் உலகுஇடந்த
ஊழியான் பாதம்
மருவாதார்க்கு உண்டாமோ
வான்

[ஏனத்து உருவாய்—வராக அவதாரம் எடுத்து. உலகு இடந்த—உலகை நெம்பி வெளியே எடுத்துக் கொண்டு வந்த. ஊழியான்—காலக் கணக்கையெல்லாம் கடந்த நித்தியமூர்த்தியாகிய திருமால். அவனே வந்து எனக்கு ஞானம் தந்தான். அப்படித் தந்து என்னை உய்வித்தவனுடைய பாதம்—திருவடிகளை. நான்தோறும்—அனுதினமும். மருவாதார்க்கு—தலையில் தரித்துக் கொள்ளாதவர்க்கு, நன்றியை மறந்த அத்தகையாருக்கு. வான்—நற்கதி. உண்டாமோ—கிட்டுமோ.]

திருமாலுடைய திருவருளே அஞ்ஞான இருளைப் போக்கவல்லது. ஆசைகளிலும் பாபங்களிலும் காலத்தைச் செலவழிக்கிற இந்த வாழ்வில் ஞானம் உண்டானால் அது பகவான் திருவருளே யாகும். உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு வராக உருவம் எடுத்த அந்த மூர்த்தியே இந்த மாமிசக் குடிசைக்குள்ளும் புகுந்து விளக்கை ஏற்றி வைக்கிறான். அவனுடைய கருணை இருந்தவாறு என்னே என்ற ஆழ்வாருடைய களிப்பே, அற்புதப் பாடலாக உருவம் எடுத்தது!

ஊனக் குரம்பையின்
உள்புக்கு இருள்நீக்கி
ஞானச் சுடர்கொளீஇ
நான்தோறும்—ஏனத்து
உருவாய் உலகுஇடந்த
ஊழியான் பாதம்
மருவாதார்க்கு உண்டாமோ
வான்!

மாதச் சம்பளமாக ரூ. 125 லிருந்து ரூ. 300 வரை பெறுவோருக்கு

கட்டாயச் சேமிப்புத் திட்டத்திலிருந்து விதி விலக்கு

நீங்கள்

- மாதமொன்றிற்கு ரூ. 125 லிருந்து ரூ. 250 வரை சம்பளம் பெறுபவராக யிருந்து, திருமணமாகாதவராக இருந்தாலும் அல்லது மணமானவராக இருந்தாலும்;
- மாதமொன்றிற்கு ரூ. 125 லிருந்து ரூ. 275 வரை சம்பளம் பெறுபவராக இருந்து திருமணமாகி, ஒரு குழந்தையுடன் இருந்தால்;
- மாதமொன்றிற்கு ரூ. 125 லிருந்து ரூ. 300 வரை சம்பளம் பெறுபவராக இருந்து, திருமணமாகி ஒன்றிற்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால்

கட்டாயச் சேமிப்புத் திட்டத்திலிருந்து விதி விலக்கு
அரசாங்கம் அமுலாக்கியுள்ள கட்டாயச் சேமிப்புத் திட்டத்திலிருந்து விதி விலக்கு பாதுகாப்பு,
பெறலாம். ஆனால், பிராவிடெண்ட் நிதி, ஆயுள் இன்சூரன்ஸ் பாதுகாப்பு, ஆகிய திட்டங்
கூட்டுக்கால டிபாசிட்டுகள் (CUMULATIVE TIME DEPOSITS) ஆகிய திட்டங் 11% சேமிப்பவராக
களின் மூலம் ஏற்கனவே உங்கள் சம்பளத்தில் நீங்கள் 11% சேமிப்பவராக
இருக்க வேண்டும்.

இந்தத் திட்டங்களின் மூலம் நீங்கள் இன்று எவ்வளவு சேமிக்கிறீர்கள்? உங்கள் சம்பளத்தில்
சேமிப்பு ஒன்றும் இல்லை என்றாலோ, அல்லது சேமிப்பு உங்கள் சம்பளத்தில் செய்ய ஓர்
11%க்கு குறைவாக யிருந்தாலோ, சேமிப்புக் குறையை நிறைவு செய்ய ஓர் கட்டாயச் சேமிப்புத்
ஆயுள் இன்சூரன்ஸ் பாலிஸி எடுத்துக் கொள்ளுங்கள். இது, கட்டாயச் சேமிப்புத்
திட்டத்திலிருந்து விதி விலக்குப் பெற, வழி செய்யும்.


ஆயுள் இன்சூரன்சு துறையில் முதலீடு செய்வதன் மூலம்

- நீங்கள் சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறீர்கள்
- நீங்கள் உங்களுக்கென ஓர் முதலீட்டை உருவாக்கிக் கொள்கிறீர்கள்
- நீங்கள் உங்கள் குடும்பத்தினரின் பாதுகாப்பிற்கு வழி வகை செய்து தருகிறீர்கள்

உங்கள் கவலைகளைப் போக்குவது இன்சூரன்ஸ் ஏற்பாட்டின் பொறுப்பாகும்.
பாலிஸி அமுலில் இருக்கும்போது உங்களுக்கு ஏதாவது நேர்ந்தால், உங்கள் குடும்
பத்தினருக்கு வகையான வருமானம் கிடைக்க உறுதியளிக்கிறது ஆயுள் இன்சூரன்ஸ்.

ஒரு ஆயுள் இன்சூரன்ஸ் முகவரை (ஏஜென்டை) நாடுங்கள், அல்லது அண்மையி
லுள்ள ஆயுள் இன்சூரன்ஸ் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா



ஹாஸ்யக் களஞ்சியம்



[தாங்க முடியாத வரிச்சுமைகள், ஆட்சி மொழி விஷயம் அளிக்கும் தலைவலி போன்ற எண்ணற்ற துன்பங்களுக்கிடையில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நாம் அநீதிகளை எதிர்த்துப் போராடுவதில் தீவிரமாய் இருக்கிறோம். என்றாலும் சற்று நேரமேனும் கவலைகளை மறந்து சிரித்துக் கொண்டிருக்கவும் ஆசைப் படுகிறோம். அதை இப் பகுதி பூர்த்தி செய்யும். — ஆசிரியர்]

தமிழர்கள் நல்ல ஹாஸ்ய உணர்ச்சி உள்ளவர்கள். "இது ஹாஸ்யம்! இங்கே சிரிக்கவும்!" என்று அவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. நுட்பமான ஹாஸ்யத்தைக் கூட இனம் கண்டு அனுபவித்துச் சிரிப்பதில் தமிழர்களுக்கு இணை யாரும் இல்லை. — கல்கி





ஹிந்தி பாஷையில் ஒரு சௌகரியம் உண்டு. வாக்கியத்தின் கடைசி வார்த்தையைக் கொஞ்சம் தூக்கிப் பிடித்து நிறுத்தினால் அது கேள்வியாகி விடும். ஆகையால் ஒருவன் சொல்வதை நாம் திருப்பிச் சொல்லிக் கொண்டே சம்பாஷணையை நடத்திவிடலாம். ....அந்தக் காவலன் ஹிந்தியில் கூறியதற்கு உண்மையான மொழிபெயர்ப்பைக் கேளுங்கள்:

"குதுப்மினார் குத்புதீனினால் கட்டப்பட்டாள் என்பது பொய் வார்த்தையாயிருக்கிறான். அல்டமிஷினால் கட்டப்பட்டாள் என்பதும் பொய் வார்த்தையாயிருக்கிறவனே தான். குதுப் கோபுரம் உண்மையில் பிருதிவிராஜனால் கட்டப்பட்டவர்கள். பிருதிவிராஜனுடைய குமாரியினால் இந்தக் கோபுரம் தினம் தினம் ஏறப்பட்டார்கள். கோபுரத்தின் உச்சியிலிருந்து பிருதிவிராஜனுடைய மகள் யமுனா நதியைத் தரிசனத்திற்கு உள்ளாக்கிய பிறகு அவளால் மத்தியான போஜனம் சாப்பாட்டுக்கு உட்பட்டனர்."

"பிருதிவிராஜனுடைய குமாரி யமுனையைத் தரிசிப்பதோடு திருப்திக்கு உள்ளானாளா அல்லது எப்போதாவது யமுனை நதி அவளால் குளிக்கப்படுவதும் உண்டா?" என்று கேட்டேன்.

"சில சமயம் யமுனை குளிக்கப்படுவதும் உண்டு. வருஷத்துக்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவை யமுனை, ராஜகுமாரியினால் குளித்தல் செய்யப்பட்டாள்."

"யமுனைக்கு இங்கிருந்து ராஜகுமாரி எப்படிப் போவாள்?" என்று கேட்டேன்.

"இல்லை, இல்லை. ராஜகுமாரி போகமாட்டாள். யமுனைதான் இங்கே வருவாள்" என்றான்.

"எப்படி வருவாள்?"

"சில சமயம் நடந்து வருவாள்; சில சமயம் குதிரை மேல் வருவாள்! ராஜகுமாரி குளிப்பதற்கு உள்ளானதும் திரும்பிப் போய் விடுவாள்."


"பிருதிவிராஜனுடைய குமாரி எந்த சோப்பை உபயோகித்தாள் என்று நீ அறிந்திருப்பதுண்டா? 'லக்ஸ்' டாய்லட் சோப்பையா? பிரசித்தி பெற்ற சினிமா நட்சத்திரம் கனகமணி தேவி உபயோகிக்கும் 'ஹமாம்' சோப்பையா?"

"அவள் இமயமலையின் உறைந்த பனிக்கட்டியை உபயோகிப்பாள்!"

"பனிக்கட்டி இங்கே எப்படி வரும்?"

"சில சமயம் ஒட்டகையின் மேல் வரப்படுவாள்; சில சமயம் டோங்கா வண்டியிலும் வருதலை செய்வாள்! ...."


— கல்கி



என்னுடைய மகள் கல்யாணத்துக்கு நடனமும் நாதசுரக் கச்சேரியும் ஏற்பாடு பண்ணியிருந்தது. திருநெல்வேலி பாண்டு வாத்தியக்காரன் தன்னுடைய கச்சேரியையும் கல்யாண வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினான். உடனே நான் கேட்டேன்: "கச்சேரிக்கு ரூபாய் எவ்வளவு" என்று. அவன், "பதினைந்து ரூபாய் போதும்" என்றான். "அப்படியானால் இருபத்தைந்து ரூபாய் தருகிறேன். நீ பாண்டு வாசிக்காமல் மட்டும் இருந்தால் போதும்!" என்றேன்.

— ரசிகமணி டி. கே. சி.





மார்க் ட்வெய்ன் என்பது அவருடைய புனை பெயர். உண்மைப் பெயர் சாமுவெல் லேங் ஹோர்ன் க்ளிமென்ஸ் என்பது. அமெரிக்காவின் தலைசிறந்த ஹாஸ்ய எழுத்தாளர் இவரே என்ற போதிலும் அவர் இறந்த பிறகு இதுவரை பிரசுரிக்கப்படாத சில நூல்கள் அச்சுக்கு வந்ததும் அவரைப் புதிய கோணத்திலே ரசிகர்கள் பார்க்கத் தொடங்கினார்கள். 'மனிதன் என்றால் என்ன' என்ற புத்தகத்தில் துயரக் கடலில், கதிமோட்சமே இல்லாத அடிவாரத்துக்கே சென்று விடுகிறார் ஆசிரியர். என்றாலும் அவருடைய ஹாஸ்யமே அவரைப் பிரபலப்படுத்தியது. ஷாவைப் போல இவரும் வாக்குச் சாதுரியத்துக்காகப் புகழ் பெற்றவர். ஒரு முறை பென்ஜமின் பிராங்க்ளினுடைய சுய சரித நூலை இவரிடம் ஒருவன் கொண்டு வந்து கொடுத்து அதில் கையெழுத்திட்டுத் தர வேண்டுமென்று கோரினான். அவன் விருப்பத்துக்கு இணங்கித் தம் பெயரை முதல் பக்கத்தில் மார்க் ட்வெயின் பதித்துக் கொண்டிருக்கையில் அவன் கேட்டான்: "ஆமாம், பென்ஜமின் பிராங்க்ளின் எப்போது இறந்து போனார்?"

மௌனமாகக் கையிலிருந்த புத்தகத்தின் கடைசிப் பக்கத்தைப் புரட்டிக் கடைசி வரியில் கண்ணோட்டம் செலுத்தினார் மார்க் ட்வெயின். பின்னர் ஒன்று மறியாதவர்போல் முகத்தை வைத்துக் கொண்டு, "இதில் அதைப் பற்றி பென்ஜமின் ஒன்றும் குறிப்பிட வில்லையே!" என்றார்.

ஸ

ஜப்பானியருக்கு ஹாஸ்ய உணர்ச்சி மிகுதி. ஹாஸ்ய உணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே ஜப்பானியரைக் குறிப்பிடுவது வழக்கம். தெய்வங்களெல்லாம் சிரித்ததிலிருந்துதான் ஜப்பானிய சரித்திரமே தொடங்குகிறது.

வலப் பக்கத்திலுள்ளது ஒரு ஜப்பானிய ஹாஸ்யம். நன்முக உற்றுப் பாருங்கள். 'நமக்கு ஜப்பான் மொழி தெரியாதே' என்று கலங்க வேண்டாம். ஆனால் ஓர் எச்சரிக்கை! இதை வலப்புறத்திலிருந்து தொடங்கி மேலிருந்து கீழாகப் பார்க்க வேண்டும்!

ஸ

ஹாஸ்ய

அறிஞர்கள் ஹாஸ்யத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து இலக்கணம் கூட வகுத்திருக்கிறார்கள்! அவற்றில் சிலவற்றைப் பார்க்கலாம்.

1. **எதிர்பாராத சம்பவம்:** வாழைப் பழத் தோலில் ஒருவர் சறுக்கி விழுந்ததும் சுற்றிலுமிருப்போர் சிரித்தல்.

2. **பொருத்தமில்லாத சேர்க்கை:** தெருவில் நாயைப் பார்க்கும் சிறுவன் சிரிக்கிறானா? கிடையாது. அதே நாய் அவனுடைய வகுப்பறைக்குள் நுழைந்து விட்டதும்; அவன் மட்டுமென்ன, வகுப்பில் உள்ள எல்லாப் பிள்ளைகளுமே வயிற்றைப் பிடித்துக் கொண்டு இடி இடியென்று சிரிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

3. **வார்த்தைக் குளறுபடி:** "சீக்கிரம்! சீக்கிரம் வாருங்கள்! பக்கத்து வீட்டுக்காரர் நாயைக் கடித்து விட்டார்!"

4. **சிலேடை:** "உண்மையில் நான் அவனை வருந்தி வருந்தித்தான் அழைத்துக் கொண்டிருந்தேன். பாவி மனுஷன் திடுமென்று ஒரு நாளைக்கு வீட்டுக்கு வந்து தொலைத்து விட்டான்!"

5. **மிகைப்படுத்திக் கூறல்:** வாஷிங்டனின் திருமணம்.



6. **திரும்பத் திரும்பச் சொல்லுதல்:** —இதில் ஒரு சம்பவம் திரும்பத் திரும்ப நடக்கும். கடைசியில் தலைகீழ்ப் பாடமாக மாறிச் சிரிப்பை வரவழைக்கும்—சுற்றுப் பயணத்தின் போது நடு வழியில் காருக்குப் பெட்ரோல் தீர்ந்து போய்விட்டது. டிக்கியிலிருந்து காலி பெட்ரோல் டின்னை எடுத்துக் கொண்டு நடந்தேன். இரண்டு மைல் தூரம். ஒரு பங்க் தென்



பட்டது. என்ன அநியாயம்! அங்கே பெட்ரோல் தீர்ந்து போய்விட்டதாம்! ஆத்திரம் பொங்கியது எனக்கு. இன்னும் இரண்டு மைல் நடந்தால் ஒரு பங்கு இருக்கிறதென்றான் அவன். முணுமுணுத்துக் கொண்டே நடந்தேன், உச்சி வேளையில் கடுமையான வெய்யிலில். இன்னொரு 'பங்க்' தென்பட்டது. அங்கே பெட்ரோலும் இருந்தது. ஆனால்...

''ஆனால் என்ன?'' என்று எரிந்து விழுந்தேன்.

''பம்பு ரிப்பேராகி விட்டது. நீங்கள் இன்னும் மூன்று மைல் போனால்....''

அவன் பேசி முடிக்கு முன்னரே நான் மறுபடியும் நடக்க ஆரம்பித்து விட்டேன். வியர்த்துக் கொட்டி உடலெல்லாம் நனைய உலகத்தையே சபித்துக் கொண்டு நடந்தேன். ஒரு வழியாகப் பங்கும் தென்பட்டது. பங்க் வாசலில் அதன் சொந்தக்காரன் நின்றான். அவனெதிரே பெட்ரோல் டின்னைத் தரையில் ஓங்கி அறைந்தேன்.

''டேய் முட்டாள்! உன்னிடம் பெட்ரோல் இருந்து, பம்பு சரியாக வேலை செய்தாலும் கூட நான் வாங்கிக்கொள்ளத் தயாராக இல்லை போ!'' என்று கோபத்துடன் இரைந்துவிட்டு நடந்தேன்!

7. **மனோதத்துவ ஹாஸ்யம்:** ரகசியத்தை வெளிவிடல் — தன் வீட்டுக்கு விருந்துண்ண வரவேண்டும் என்று முதலாளியை அழைத்தான் மானேஜர் கப்பு.



அவரைக்காக்காய் பிடிக்க வேண்டும் என்ற உள் நோக்கத்தோடுதான் அழைத்தான். ஆனால் அது வெளியே தெரிந்துவிடக் கூடாதே என்ற விசாரம் அவனை ஆட்கொண்டது. விருந்து வைபவத் தினத்தன்றும் இந்தக் கவலையே அவனை அரித்தெடுத்தது. நாம் காக்காய் பிடிப்பதாக முதலாளி முடிவு கட்டிவிடக் கூடாதே என்ற எண்ணத்தோடேயே எல்லா ஏற்பாடுகளையும் செய்தான்.

விருந்தின்போது அவன் மனைவி நெய் பரிமாறினாள். ''அடியே! இன்னொரு முட்டை காக்காய் போடு!'' என்று உபசரித்தான் கப்பு.

8. **இடித்துக் காட்டுதல்** (Satire): மனிதனுடைய குறைபாடுகளைச் சொல்லாமல் சொல்லிச் சிரிக்க வைத்துத் திருந்தச் செய்கிற முயற்சி இது.

9. **பபூனரி** (கோமாளித்தனம்); மிமிக்ரி (ஒருவரைப் போலவே நடித்துப் பேசிக் காட்டுதல் போன்றவை) ஹாஸ்ய வகைகளில் மிகவும் சாதாரணமானவையாகக் கருதப்படுகின்றன.





ஷா ஓர் இலக்கிய மேதை மட்டுமல்ல; அவரது வாக்குச் சாதுர்யமும், மதிப்பு மிகச் செய்கின்ற தோற்றமும் அவரது எழுத்தைப் போலவே அவரது வாழ் நாளிலேயே உலகப் பிரசித்திபெற்றன. அவரது ஒவ்வொரு நடவடிக்கையையும், அவர் பேசுகின்ற ஒவ்வொன்றையும் உலகமே உன்னிப்பாகக் கவனித்து வந்தது.

அவரது நாடகம் ஒன்று அரங்கேறியபோது திரை தூக்கப்படு முன்னர் மக்கள் நாடக ஆசிரியரைப் பார்க்க வேண்டும் என்று கூப்பாடு போட்டனர். ஷா மேடைமேல் ஏறினார். கைதட்டல் அடங்கியதும் ஷா வாய் திறக்கு முன்னால் கூட்டத்தினரில் ஒருவன், 'பூ' என்று ஏளனமாகக் கத்தினான். சத்தம் வந்த திக்கு நோக்கித் திரும்பினார் ஷா. ''அப்பனே! உன்னுடைய கருத்தை நான் முழுமையாக ஒப்புக் கொள்கிறேன். ஆனால் உலகம் முழுமையும் சிதறிக் கிடக்கும் பல்லாயிரக் கணக்கான ஷாவின் ரசிகர்களுக்கு எதிராக நாம் எம்மாத்திரம்?''

அவரைப் பற்றிய இன்னொரு உண்மைக் கதை:

1940ம் வருஷம் பிரிட்டன் ஓர் இக்கட்டான நிலையில் இருந்தது அனைவரும் அறிந்ததே. அப்போது புலால், முட்டை இரண்டுமற்ற ரேஷன்தான் மக்களுக்குக் கிடைத்து வந்தது. அதைப் பற்றிப் பத்திரிகை நிருபர்கள் ஷாவை அபிப்பிராயம் கேட்டார்கள். ''இத்தகைய ரேஷனில் தவறு ஒன்றையும் என்னால் காண முடியவில்லை. உண்மையில் இத்தகைய புலால், முட்டை இரண்டும் கலவாத உணவைத்தான் நான் நீண்ட காலமாகவே புசித்து வருகிறேன். ஆனால் பெர்னார்ட் ஷாக்கள் நிறைந்த தேசமாக இங்கிலாந்து மாறும் என்று நான் உறுதி கூறுவதற்கில்லை! அது மக்களிடம் ரொம்பவும் அதிகமாக எதிர்பார்ப்பதாகும்!'' என்றார் ஷா.

''**நா**ம் மலையுச்சியை அடைந்தாகிவிட்டது. நீங்கள் ஏறுவதை நிறுத்தப்போகிறீர்களா இல்லையா?''

— ஓர் அமெரிக்க ஹாஸ்யம்





ஒரு விண்ணப்பம்

சிரியுங்கள். தயவு செய்து சிரியுங்கள். தாராளமாய்ச் சிரியுங்கள். மனம் விட்டுச் சிரியுங்கள். உடம்புக்கு ரொம்ப நல்லது. நுரையீரல்களுக்கு ரொம்ப ரொம்ப நல்லது. ஆனால் ஒரே ஒரு விண்ணப்பம்.

குழந்தைகளின் குழந்தைத்தனமான காரியங்களைக் கேலி செய்வது போல் மறந்து போய்க் கூடச் சிரித்து விடாதீர்கள். அதைப் போன்ற பாவம் வேறு கிடையாது. ஏனைத்துக்குள்ளான குழந்தையின் பசுமையான மனத்தில்ஆணி அடித்தாற்போல் அந்தக் கொடுமை பதிந்து போகும். அதனால் பின்னால் ஏற்படக் கூடிய விபரீத விளைவுகள் எத்தனை எத்தனையோ!

பையன்: சீக்கிரம் ஓடிப் போய் விடலாம் வாருங்கள்.

— ஒரு ருஷ்யஹாஸ்யம்

மேலேயுள்ளது ஓர் அமெரிக்க ஹாஸ்யம் இதை விளக்க வார்த்தைகள் தேவையில்லை அல்லவா?

★

ஐயா! நான் சென்ற வாரம் என் கதை யொன்றை அனுப்பியிருந்தேன். உங்களைச் சோதனை செய்வதற்காகக் கதையின் 18, 19 20-ம் பக்கங்களை ஒட்டியனுப்பியிருந்தேன் ஒட்டிய பக்கங்கள் ஒட்டியபடியே கதை திரும்பி வந்தது. நீங்கள் கதையைப் படிக்காமலே திருப்பியனுப்புகிறீர்கள் என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி என்ன வேண்டும்?



இப்படிக்கு
கதாசிரியை

அம்மணி! காலை உணவுக்கு இன்று ஒரு முட்டையை உடைத்தேன். அது நன்றாயில்லை என்ற முடிவுக்கு வர அந்த முட்டை முழுவதையும் நான் சாப்பிட வேண்டியிருக்கவில்லை!

இப்படிக்கு
பத்திரிகாசிரியர்

★

நகர சபை அதிகாரி: இந்தத் தெருவில் இதற்கு முந்தி இவ்வளவு காகிதக் குப்பை குவிந்திருந்தது கிடையாது. இப்போது மட்டும் தெரு பூராவும் காகிதக் குப்பை பறக்கக் காரணம் என்ன?

நகரசபை மேஸ்திரி: இந்தத் தெருவிலே குப்பை போடப்படாதுன்னு புதுசா நோட்டீஸ் ஒட்டியிருக்காங்களே, பார்க்கலையா?

★

காந்திஜிக்கு மிகவும் பிடித்தமான மூன்று பொம்மைகள் விளக்கும் கொள்கையைக் கீழேயுள்ள இந்த நாரீமணி இப்படித் தம் கூந்தல் அலங்காரத்தின் மூலம் செயல் படுத்துகிறார்.

— ஒரு தமிழ்நாட்டு ஹாஸ்யம்




சிறையில் கற்றேன்

குற்றம் செய்தவர்களை அடைத்துப் பூட்டி வைக்கும் சிறையில் எதைக் கற்றுக்கொண்டேன் என்று நினைக்கிறீர்கள்?



சுதந்திரம் என்றால் என்ன என்பதைக் கசடறக் கற்றுக் கொண்டு விட்டேன். வெளியே இருக்கும் போது சுதந்திரத்தைப் பற்றிக் கசடறப் புரிந்து கொள்ளவில்லை. இதனால்தான் தேசத் தலைவர்கள் சிறைக்குப் போகிறார்களோ என்னவோ?

— நகைச்சுவை மன்னன் என். எஸ். கே.



Δ இது ஒரு ஜெர்மானியக் கார்ட்டூன். எத்தனை அம்புகள் பாய்ந்தாலும் கலக்க மடையாத யானையாகப் பிரத்தி ஜெறிப்படி புகாலே உருவகப் படுத்தி இருக்கிறார் இந்தக் கார்ட்டூனிஸ்ட்.

அவர் டாக்டர்!

சர்ச்சிலின் பிரத்தியேக வைத்தியரிடம் ஒருவர், சர்ச்சில் இத்தனை வயதிலும் எப்படித் தம் உடம்பைச் செவ்வனே பாதுகாத்து வருகிறார் என்பதைக் கூறிப் பெருமைப்பட்டு விட்டு, ''ஆமாம்! அவர் இவ்வளவு ஆரோக்கியமாக இருக்க நீங்கள் என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''சர்ச்சில் என்னென்ன உணவுகளைச் சாப்பிடுகிறார் என்று உன்னிப்பாகக் கவனித்துக் கொள்வேன்!''

''பிறகு?''

''அவற்றையெல்லாம் என் வீட்டிலும் செய்யச் சொல்லி நான் சாப்பிடு வேன்!'' என்றார் அந்த டாக்டர்.

★



நேர்தலுக்கு அபேட்சகராய் நிற்கும் மணமாகாத ஸ்திரீ அந்த வீட்டுக்காரரை அணுகி, ''என்னை நீங்க ஆதரிக்கணும் என்று கேட்டுக் கொள்கிறதற்காக வந்திருக்கிறேன்!'' என்றாள்.

''மன்னிக்கணும்! நீங்கள் லேட்டா வந்துட்டேள்! எனக்குக் கலியாணமாகி ஐந்து வருஷங்களாகி விட்டன!'' என்று பதில் கிடைத்தது.

★

அவருக்குத் தெரிந்தது!

தந்திகள் அனுப்பும் கருவியைக் கண்டு பிடிப்பதற்கு முன் சாமுவேல் எப். பி. மோர்ஸ் ஒரு புகழ்பெற்ற ஓவியராகத் திகழ்ந்தார். ஒரு தடவை அவர் மரணப் பிடியில் சிக்கிய ஒருவன் எப்படி யிருப்பான் என்பதைச் சித்திரித்திருந்தார். படம் பிரமாதமாக அமைந்து விட்டது என்று மோர்ஸுக்கு மகிழ்ச்சி. அவருக்கு ஒரு டாக்டர் நண்பர். அவரிடம் அந்தப் படத்தைப் பெருமையுடன் காட்டி அபிப்பிராயம் கேட்டார்.

டாக்டர் நண்பர் தம் கண்ணிலிருந்த கண்ணாடியை அகற்றி விட்டு, சர்வ சாதாரணமாக, ''மலேரியா!'' என்றார்.



அமெரிக்க நாவல், சினிமாக்களால் குழந்தைகளின் மனம் கெடுக்கப்படுகிறது என்பதை மிகைப் படுத்திக் காட்டுகிறது சோஞ்சினப் பத்திரிகையில் வெளியாகி யிருக்கும் இந்தக் கேலிச் சித்திரம். >

அறிவைக் கனலே, அருட்புனலே! 17

ரா. கணபதி

விக்ரெகம் வாழ்ந்தது!

கோடானுகோடி அண்ட பகிரண்டங்களை ஈன்ற அம்பிகை அந்த அண்ட பகிரண்டங்களிலுள்ள ஒவ்வோர் அணுவிலும் தான் உயிர் வாழ்கிறாள். ஆனால் அந்த அணுக்குவியல்களைக் காணும் ஜீவராசிகளுக்கும் அந்த அணுக்களுக்குமே தெரியாமல் ரகசியமாக வாழ்கிறாள். அவளே இன்று தக்ஷிணேசுவரத்துக் காளி சிலையில் மட்டும் பிரத்தியக்ஷமாக ஜீவன் ததும்ப வாழ்ந்தாள்!

முன்பு கதாதரர் பூஜிக்கும்போதுமட்டும் சிலை வாழ்ந்தது.

பிறகு அவர் சந்நிதியில் வந்து விட்டாலே, பூஜை செய்யாவிடினும் வாழ்ந்தது. அவர் சம்பிரதாயப்படி பூஜை செய்ய இயலாதவாறு மகனுக்கு அன்னையாக வாழ்ந்தது.

இப்போதோ கதாதரர் தம் அருகில் இல்லாத போதும் கூட அந்தச் சிலையில் பவதாரிணி வாழ்ந்தாள்.

திருவிரலில் சுழலும் மெட்டி 'கிலுங், கிலுங்' என்று கெஞ்ச, வழு வழுத்த முன் கால்களை வருடிக் கொடுக்கும் பாதசரம் 'கிண் கிண்' என்று கொஞ்ச, இடையில் அணிந்த மேகலைக் குஞ்சங்கள் சலசல வென்று வம்பு பேச, கரங்களால் அழகு பெறும் கங்கண, கேயூரங்கள் கலகல வென்று மந்திர உச்சாரணம் செய்ய, திருமேனியில் சரிகிற மணி ஆரங்கள் மணிமொழிகளை மந்தமாகப் பேச, செவியிலிருந்து ஊஞ்சலாடும் குண்டலங்கள் ஜண ஜண என்று வீரநாதம் செய்ய பவதாரிணி மாடிப் படிக்கட்டுக்களில் ஏறும் சப்தம் — சப்த ஸ்வரங்களுக்கும் மேலான சங்கீத நாதம் — தமது அறையில் உட்கார்ந்திருக்கும் கதாதரரின் செவியில் பாயும். கங்கை அலைகளின் மென் ஒலிக்கும், புள்ளினங்களின் இன் ஒலிக்கும் மீதாக இந்த நாதக் கலவை அவரது உள்ளத்தில் புகும். அறையிலிருந்து அவர் வெளியே வந்தால் சாக்ஷாத் சர்வேசுவரி ஆலய உப்பரிகையில் நின்று கொண்டிருப்பதைக் காண்பார். கங்கையில் சுழிகளை ஏற்படுத்தும் காற்று அவளது நெரிசலான குந்தளத்திலும் கொந்தளிப்பை ஏற்படுத்தும். குழற்கற்றைகள் பிரியும். கருநீலக் கடலில் பிறக்கும் உதய சூரியன் போல் அவளது கேச பாரத்தில் ஒளிரும் ரத்தினச் சுட்டியைச் சுற்றிக் கொள்ளும். அவளுடைய வெண்பட்டு உத்தரீயத் தலைப்பு மேனியில் சுற்றிப் படபடக்கும் போது சௌந்தரியம் என்ற துவஜ ஸ்தம்பத்தில் சத்தியம் என்ற கொடி பறப்பதுபோல் இருக்கும்.

குழந்தையின் களிப்பும், தபஸ்வியின் அமைதியும் பின்னிப் பிணைந்த திரு நோக்குடன் அவள் தூரத் தெரியும் கல்கத்தா மாநகர தீபாலங்காரத்தையும், கங்கைப் பிரவாகத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருப்பாள். கதாதரரோ தமது அக திருஷ்டியும், புற திருஷ்டியும் சற்றுக்கூட மாறாமல் அந்த அன்புப் பண்டத்தையே, அழகுப் பிண்டத்தையே உளம் குவிந்து பார்த்துக் கொண்டிருப்பார்.

அந்த அன்பும், அழகும்கூட மற்றவர்களுக்குப் பயமாகத்தான் இருந்தது. யாருடைய ஒரு க்ஷண கால தரிசனத்துக்காகப் பக்தர்கள் ஆண்டாண்டுகளாக ஆத்ம சாதனை புரிகிறார்களோ, அந்தத் தேவியின் சாந்நித்தியம் தக்ஷிணேசுவரத்தில் நிறைந்ததே கோயிலைச் சேர்ந்தவர்களுக்கு அச்சமூட்டியது. அதுவும் கதாதரர் அம்பிகையின் சந்நிதானத்தில் இருக்கிறார் எனில் அந்த இடத்தை நெருங்கவே அவர்கள் கதிகலங்கினர்.



ஹ்ருதயர் மட்டும் மனத்தைக் கெட்டிப்படுத்திக் கொண்டு மாமா அம்பிகையை ஆராதிக்கும் வேளைகளில் ஆலயத்தை நெருங்குவார்.



ஒவ்வொரு முறையும் ஓர் அற்புதத்தைக் கண்டு அதிர்ச்சியடைவார்.

ஒரு முறை அம்பிகைக்கு அளிக்க வேண்டிய அர்க்கியத்தைக் கதாதரர் தமது தலையிலும், மார்பிலும், ஆ! காலிலும்கூட, வைத்துக் கொண்டபின் அதனைத் தேவிக்கு அளித்தார்.

இன்னொரு முறை கதாதரர் தமது ஆசனத்திலிருந்து எழுந்து அம்பிகையின் பீடத்தின் மீதேறி மூர்த்தத்தினிடம் சென்றார். மாந்துளிரால் வெண்ணெயை வருடுவது போல தமது விரல்களால் விக்கிரகத்தின் முகவாயைச் சொகுசாகப் பிடித்துக் கொண்டு பாடினார், சிரித்தார், கேலி செய்தார்.

அம்பாளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு அவளைச் சுற்றிச் சுற்றி அவர் ஆடும் காட்சியை ஹிருதயர் எத்தனையோ முறைகள் கண்டிருக்கிறார்.

குழந்தையானது தாயிடம் என்னவெல்லாம் விளையாடுமோ, சேஷ்டை செய்யுமோ அத்தனையையும் அம்பிகையிடம் செய்தார் கதாதரர்.

கதாதரர் தேவிக்கு நிவேதனம் செய்யும் போது சடேரென்று கையில் ஒரு பிடி அன்னத்தையும் வியஞ்சனங்களையும் எடுத்துக் கொள்வார். ஜகன் மாதாவின் முக கமலத்தருகே அதனைக் கொண்டு செல்வார். ''சாப்பிடு, உம், சாப்பிடு!'' என்று அவளைப் பலவந்தப் படுத்துவார். ''என்ன மாட்டாயா? ஓஹோ! அப்புறம்தான் உண்ணப் போகிறாயா? அதாவது முதலில் நான் உண்ண வேண்டும், பிறகுதான் நீ உண்பேனென்கிறாய்! அப்படித்தானே? சரி, அப்படியே செய்தால் போச்சு'' என்று சொல்லிக் கொண்டு அந்தக் கவளத்தைத் தாம் புசிக்கத் தொடங்குவார். ஹிருதயருக்கு அதைக் காணவே உடம்பு வெட வெடக்கும்.

ஒரு நாள் நிவேதன சமயத்தில் பூனை ஒன்று சந்நிதிக்குள் பிரவேசிப்பதைக் கண்டார் கதாதரர். உடனே நிவேதிக்கப்பட வேண்டிய பக்ஷ்ய போஜ்யங்களை எடுத்துப் பூனைக்குப் பக்தியுடன் ஊட்டத் தொடங்கினார். ''தாயே, இதை ஏற்றுக் கொள்; என் ஈசுவரி, இதை அங்கீகரித்துக் கொள்'' என்று பிரார்த்தித்தபடி பூனைக்கு உணவு படைத்தார்.

அதிகாலையில் எழுந்திருப்பார் கதாதரர். அன்னை காளிக்கு மாலைகள் கட்டுவதற்காகப் புஷ்பங்கள் பறிக்கச் செல்வார். புஷ்பங்களைப் பார்க்கும்தோறும் மகிழ்ந்து அவற்றுடனேயே அளவளாவத் தொடங்கி விடுவார். 'பூக்களால் பூஜை செய்யவாவது? பூக்களே அல்லவா பூஜை பெற வேண்டிய என் சர்வேசுவரி?' என்று எண்ணி அவற்றைத் தொழுவார்.

'பண்ணேன் உனக்கான பூஜை.... பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி அப்பனி மலரெடுக்க மனமும் நண்ணேன்'

என்று தாயுமான சுவாமிகள் பாடிய நிலையில் இருந்தார் கதாதரர்.

அதிகாலையில் எழுந்தவுடன் மலர் சேகரிக்கப் புறப்படுவார் என்றோமல்லவா? அது தவறு என்கிறார் ஹிருதயர். கதாதரர் அதிகாலையில் எழுந்திருக்கவில்லையாம். எப்போதுமே எழுந்திருக்கவில்லையாம். இரவில் தூங்கினால்தானே அவர் எழுந்திருக்க முடியும்?

ஆம், கதாதரர் நித்திரை என்பதைக் கண்டே எத்தனையோ காலமாகி விட்டது. இரவு முழுவதும் அம்பிகையுடன் பாடுவதிலும், பேசுவதிலும், அவள் மறைவதற்காக மனம் குமுறிக் குமுறிக் கதறுவதுமாகவே அவருக்குப் போது சென்றது. நள்ளிரவில் பஞ்சவடிக்குச் சென்று அவர் தியானத்தில் ஆழ்ந்த நாட்கள் பல.

இதையெல்லாம் கண்டுவந்த ஹிருதயருக்கு இனம் தெரியாமல் உள்ளம் 'வெதுக் வெதுக்' கென்று அடித்துக் கொண்டது. அது அச்சமா, துயரமா என்று அவருக்கே தெரியவில்லை. 'மாமா சரியான பிரக்ஞையுடன்தான் இருக்கிறாரா?' என்ற ஐயம் அவரைக் கவ்விக்கொண்டது.

உலக வாழ்வு அவ்வளவும் பைத்தியக்காரத்தனம் என்று கருதும் பக்தர்களின் செய்கைகள் உலகுக்குப் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றுகின்றன! அதனால் என்ன? ஈசுவரனையே பித்தன் என்று தானே சொல்கிறோம்? ஈசுவரனையன்றி வேறு நினைவற்ற நாயகியை நாவுக்கரசரும் 'அவனுக்கே பிச்சியானாள்' என்றுதானே சொல்கிறார்?

ஹிருதயருக்கு இன்று ஏற்பட்ட சந்தேகம் இன்னும் எத்தனையோ பேருக்கு இனி ஏற்படப் போகிறது. விவேகானந்த ஸ்வாமி ஆக இருந்த நரேந்திரரே, ராமகிருஷ்ண தேவரைக் குறித்து, 'இந்தக் கிழவருக்குப் பைத்தியம்தானோ?' என்று எண்ணப் போகிறார்!

ஹிருதயர், மாமாவிடம் தாம் கண்ட விசித்திரச் செயல்களை வேறு யாரிடமும் பிரஸ்தாவம் செய்யவில்லை. காரணம், இவ்விஷயம் வெளியாகி ராஸமணியின் குடும்பத்துக்கு எட்டி விட்டால் அவர்கள் மாமாவைப் பூஜாரி பதவியிலிருந்து நீக்கம் செய்து விடுவார்களோ என்ற பயம்

போன்: 11 தந்தி: "தம்பி"

கலியாண கால விற்பனை!



காஞ்சிபுரம்

உயர்ந்த விலை உள்ள பல ரக

கூறை, பட்டு சேலைகள்

சோளி பீஸ்கள்

•

ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

A. பெரியதம்பி முதலியார் & சன்ஸ்

183-AB, காந்தி ரோடு - - - காஞ்சீபுரம்

ஸ்டாக்கிஸ்டுகள் தேவை

கற்கள் இழைத்த, பளபளக்கும், வசீகரமான காஸ்டியூம் நகைகளுக்கும், நூதனமான அணிகலன்களுக்கும் தென்னிந்தியா பூராவும் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

★

விவரங்களுக்கு எழுதுக:

ஜதின் டைமண்ட் கோ.

19-A, யானைகவுனித் தெரு


சென்னை-1

பம்பாய் ஸன்ஷைன் இன்டஸ்ட்ரீஸின்

பிரத்தியேக விற்பனை ஏஜண்டுகள்

எழுதுவதில்
கவர்ச்சியும்
இன்பமும்
பெறுவதற்கு

Iris INKS



ஐரிஸ் இங்குகள்
5 மங்காத
நிறங்களில்

ரிஸர்ச் கெமிகல் லாபரட்ரீஸ்
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, சென்னை-20
550, எட்டாவது மெயின் ரோடு,
மல்லேஸ்வரம், பெங்களூர்-12



இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை
சித்ரா
கிரௌன்
மகாலட்சுமி
மற்றும்
தென்னிந்தியம்
ஆர்.ஆர்.பிக்சர்ஸ்
பெரிய இடத்துப் பெண்
டைரக்ஷன்:
ராமண்ணா

ஹிருதயர் சொல்லா விடில் என்ன? தக்ஷிணேசுவரத்துக் கோயில் அதிகாரிகள் சிலரே கதாதரரின் விசித்திரச் செயல்களைப் பார்த்து விட்டனர். பூஜையை ஒழுங்காகச் செய்யாத அர்ச்சகரை யார்தான் வைத்துக்கொள்வார்கள்? என்ருலும் ஆலய அதிகாரிகளால் கதாதரரிடம் கடுமையாக நடந்து கொள்ள முடியவில்லை. அவருடன் வாஸ்தவமாகவே பவதாரிணி உரையாடி விளையாடி வருகிருள் என்பதை அறிந்து கொள்ள அவர்களுக்குப் பக்குவமில்லைதான். எனினும் கதாதரருடைய குழந்தை உள்ளமும், அன்புப் பாங்கும், அவர் உண்மையாக அன்னைக்காக ஏங்கி அழும் ஆர்வமும் அவர்களை அவரிடம் மரியாதையுடனே நடக்குமாறு செய்தன. நாளாக ஆக பட்டாசாரியருக்குப் பைத்தியம் பிடிக்கிறது—ஆனல் இது சாதாரணப் பைத்தியமல்ல, தெய்வப் பைத்தியம் என்று நிர்மானித்த அதிகாரிகள் மதுராநாதருக்கு விஷயத்தைத் தெரியப்படுத்தினர்கள்.

பட்டாசாரியர் செய்யும் அமளிதுமளிகளைக் கண்டு 'மதுர் பாபு' அவரை உடனே விரட்டி விடுவார் என்றுதான் அவர்கள் எண்ணினர்கள். முறைப்படி அபிஷேகமும், அர்ச்சனையும், ஆரத்தியும், நிவேதனமும் செய்யாத பூஜகரை எஜமானர்கள் வைத்துக்கொள்ளமாட்டார்கள் என்றே அவர்கள் நினைத்தார்கள். ஆனல் நடந்தது வேறு.

ஒரு நாள் மதுராநாதர் திடுமென தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு வந்து சேர்ந்தார். அப்போது பூஜைக் கால மானபடியால் பவதாரிணியின் சந்நிதிக்குச் சென்ருர். கதாதரர் தேவியின் நினைவிலேயே கிறங்கி அவள் முன் அமர்ந்திருந்தார். மதுராநாதர் அங்கு வந்ததும் அவருக்குத் தெரியவில்லை. கதாதரர் அப்படியே இருந்ததைக் கண்ட மதுராநாதர் அவரது மன ஒருமைப்பாட்டை எண்ணி அதிசயித்தார்.

தியானம் முடிந்ததும் கதாதரர் தேவியிடம் குழந்தையாகக் கொஞ்ச ஆரம்பித்தார்; சண்டித்தனம் செய்தார்; சிரித்து மகிழ்ந்தார்; மாலை மாலையாகக் கண்ணீரை வழிய விட்டுக் கொண்டு விசித்து விசித்து அழுதார். இதையெல்லாம் காணக் காண மதுராநாதருக்கு உடல் புளகமுற்றது. இங்கே தெய்வீகத்தை அப்படியே கையால் தொட்டு விடலாம் போல் அல்லவா இருக்கிறது என்று வியந்தார். அடிநாளிலேயே கதாதரரிடம் ஏதோ ஒரு சிறப்பைக் கண்டு, ராமகுமாரர் இருக்கும்போதே கதாதரரைப் பூஜகராக நியமித்த தம்மையே அவர் பாராட்டிக் கொண்டார்.



படத்தைப் பார்த்தால் ஏதோ ஒரு ரயில் வண்டியைப் பலம் வாய்ந்த 'கிரேன்' உயரே தூக்கிக் கொண்டிருப்பது போலிருக்கிறதல்லவா? ஆனல் இது உண்மையில் கிரேன் தூக்கும் ரயில் வண்டியல்ல. துறைமுகக் கட்டிடத்திலிருந்து கப்பலுக்குச் செல்ல ஒரு வழி. பிரேமர்ஹேவன் என்ற மேற்கு ஜெர்மன் நகரிலுள்ள கொலம்பஸ் துறைமுகத்தில் கட்டிடங்களிலிருந்தே கரையோரமாக இருக்கும் கப்பல்களின் மேல் தளத்திற்குச் செல்ல இரும்புப் பால வழி அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தைக் கப்பல்களின் உயரத்திற்கு ஏற்ப ஏற்றவும் இறக்கவும் முடியும். இந்தப் பால வழி ஏற்பட்டதன் காரணமாகப் பிரயாணிகள் மிகச் சௌகரியத்துடன் கப்பலுக்குச் செல்லவும் கப்பலிலிருந்து வெளிவரவும் முடியும்.

'ஆகா! நம்முடைய குடும்பத்தின் பாக்கியமே பாக்கியம்! இந்த அசட்டு அதிகாரிகள் கதாதரரின் பூஜையை அபசாரம் என்றல்லவோ நினைத்து விட்டார்கள்? இதனல் கோயிலெடுத்த நாங்கள் மன வருத்தம் கொள்வோம் என்றல்லவா நினைந்து விட்டார்கள்? எதற்காக மன வருத்தம்? இந்த நாடு முழுவதிலும் கோயிலெடுத்துள்ள எத்தனையோ மாமன்னர்களுக்கும் கிடைக்காத பேறு அல்லவா எங்களுக்குக் கிடைத்திருக்கிறது? எங்கள் கோயிலில் அகிலாண்ட நாயகியே அல்லவா உயிருடன் வாழ்கிருள்? அன்று தேவி சிலைக்குப் பிராண பிரதிஷ்டை செய்தது உண்மை அல்ல; இன்றுதான் சிலையில் பிராணன் மலர்ந்திருக்கிறது' என்று எண்ணிப் பேருவகை கொண்டார் மதுரா நாதர்.

ஒப்பற்ற பக்தி பூண்ட கதாதரரை வெளியேற்றுவது பற்றி அவர் ஏன் நினைக்கிருர்? மாருக அவர் கதாதரரிடம் மிகவும் அன்புடன் நெருங்கிப் பழக விழைந்தார்.

ஜான் பஜாரில் உள்ள தமது இல்லத்துக்குத் திரும்பிய மதுராநாதர் தாம் கண்ட அற்புதத்தையெல்லாம் ராஸமணியிடம் சொன்னர். ராஸமணிக்கும் எல்லையற்ற ஆனந்தம் உண்டாயிற்று. தானுகக் கனவில் வந்து குடியிருக்க இடம் கேட்ட தேவி இப்போது



"அப்பா! நீங்க வளர்த்த மரத்தை வெட்டியதற்காக என்னைக்கோபித்துக் கொள்கிறீர்களே! ஜார்ஜ் வாஷிங்டன் சின்னப் பையனாக இருந்தபோது அவன் தன் தகப்பனார் ஆசையுடன் வளர்த்த 'செர்ரி' மரத்தை வெட்டியெறிந்தானாம். அதைப் பார்த்த அவன் தகப்பனார் துளிக்கூடக் கோபிக்க வில்லையாம்."

"அட மடையா! அவனுடைய தகப்பனார் அவன் மரம் வெட்டும் போது என் மாதிரி மரத்தின் மேலே இல்லையடா!"

உண்மையாகவே தக்ஷிணேசுவரத்தில் வந்து ஜீவிக்கிறான் என்ற எண்ணத்தில் ஜன்ம சாபல்யமடைந்தாள் ராஸமணி. நந்தோத்ஸவத்தில் ராதா கோவிந்த விக்கிரகத்தின் பாதம் முறிந்த போதே கதாதரரின் புத்தியையும், பக்தியையும் கண்டு ஆச்சரியப்பட்டிருக்கிறாள் அவள். எனவே இப்போது அன்னையிடம் அளப்பரும் அன்பைப் பொழியும் அர்ச்சகரைக் காண அவாக்கொண்டாள் ராணி.

தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு வந்தாள் ராஸமணி. கதாதரரின் இதயம் நிறைந்த ஆராதனையைக் கண்டு பெருங் களிப்புக் கொண்டாள். அவள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, தேவியின் மீது அமுதமாகப் பல கீதங்களைப் பொழிந்தார் கதாதரர். பட்டாசாரியர் பைத்தியக்காரர் என்ற கூற்றை ராணியால் நம்ப முடிய வில்லை. பூரண திருப்தி கொண்டாள் அவள். இதை ஆலயத்திலிருந்த ஏனையோரும் கண்டு கொண்டார்கள்.

அப்போது அவர்கள் எல்லாரும் விலவிலத்துப் போகும் ஒரு காரியத்தைச் செய்து விட்டார் கதாதரர்.

பாடிக் கொண்டே யிருந்த கதாதரர் தம் வயமிழந்து காணப்பட்டார்.

பாட்டு திடீரென நின்றது. "இங்கேயுமா அந்த எண்ணம்?" என்று ராணியிடம் வினவியபடியே சட்டென அவளை ஓங்கி அறைந்து விட்டார் கதாதரர்!

'ஆகா! இத்தனை நேரம் அடங்கிக் கிடந்த பைத்தியம் வெளிப்பட்டு விட்டதே! பாவம், பைத்தியம் என்று ராணி மன்னித்து விடுவாளா? அல்லது இவ்வளவு பேர் முன்னிலையில் தன்னை அவமானப்படுத்தியதற்காக வெகுண்டு எழுவாளா? எப்படியானாலும் இன்றோடு இவருக்குச் சீட்டுக் கிழிந்தது' என்று கூடியிருந்தவர்கள் தீர்மானித்து விட்டார்கள். கோவிலைக் கட்டுவித்த ராணி ராஸமணியை அர்ச்சகர் அடிக்கவாவது?

அதிகாரிகளும், ராணியுடன் வந்த பெண்களும் அவளுடைய மெல்லிய உடலில் அந்த அறை விழுந்தவுடன் கூச்சலிடத் தொடங்கினார்கள். இன்னது செய்கிறோம் என்றறியாத வாயில் காப்போன் கதாதரரைப் பிடித்திழுப்பதற்காக அவரருகே ஓடினான்.

'வேண்டாம்' என்று சமிக்ஞையாலேயே தெரிவித்தாள் ராணி.


முதலில் அவள் முகத்தில் வெட்கம் நிறைந்தது; உடனே அது துயரமாக மாறிக் கண்ணீராக வழிந்தது; பட்டாசாரியரை நோக்கினாள்; உடனே கண்ணீர் நின்றது; எல்லையற்ற சாந்தி கொண்டாள் ராஸமணி.

"அவரை ஒன்றும் செய்யாதீர்கள். அவர் மீது ஏதும் தவறில்லை. தவறு என்னுடையதுதான். பூஜையின்போது தேவியை மட்டுமே நினைக்க வேண்டியதிருக்க, நானோ நீதி மன்றத்தில் விசாரணையாகி வரும் என் வழக்கு ஒன்றைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன். இதற்காகத்தான் பட்டாசாரியர் என்னைக் கண்டித்துத் திருத்தி விட்டார்!" என்றாள்.

முன்பே சொல்லி யிருக்கிறோமல்லவா - 'வாடர் டிவைனர்' போல மக்களின் எண்ணங்களைப் படிக்கும் ஆற்றல் கதாதரருக்கு இருந்தது என்று? இன்று தம்முடைய பரவச நிலையில், உள்ளம் கண்ட காட்சியைச் செயலால் செப்பம் செய்ய முற்பட்டு விட்டார்!


இருந்தாலும் பக்தர் ஒருவர் இவ்வளவு கோபம் கொள்வது தகுமா என்று வாசகர்கள் நினைக்கக் கூடும். இயேசுநாதர் ஜெருஸலத்தில் ஆலயத்துக்குச் சென்றிருந்தபோது, அங்கு தெய்வ நினைவற்றிருந்தோரைக் கண்டு எப்படி இடியாகச் சினத்தைப் பொழிந்தார் என்பதை சாரதாநந்த ஸ்வாமி இவ்விடத்தில் நினைவூட்டுகிறார்.

மகான்களின் செய்கைகளை மட்டும் நாம் பார்க்கலாகாது. யார் விஷயத்தில் அந்தச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும் கவனிக்க வேண்டும். இன்னின்ன வழியினால்தான்



சென்னை, மெஸர்ஸ் சூரி & கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ P. ராமகிருஷ்ணன் அவர்கள் குமாரி சௌபாக்யவதி சீதாலக்ஷ்மிக்கும், சிரஞ்சீவி V. சுப்ரமணியன் அவர்களுக்கும் திருமணம் சமீபத்தில், சென்னையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



"சார்! ஞாபகம் வரமாட்டேங் கறது...உங்க முகத்தை மட்டும் வேறு எங்கோ பார்த்த மாதிரி இருக்கு."

"முகத்தை மட்டுமா? அது என்னை விட்டுத் தனியா எங்கேயும் போன தாக எனக்கு ஞாபகம் இல்லையே!"

இன்னின்னாரைத் திருத்த முடியும் என்றறிந்து பல விதங்களில் பக்தர்களை நல் வழிப்படுத்துவது மகான்களின் இயல்பு. தாம் அடிப்பதை ராணி ராஸமணி தவறாக எடுத்துக் கொள்ள மாட்டாள்; அவ்வளவு கடுமையாக நடந்து கொண்டால்தான் அவள் இனி அந்நியக் கலப்பின்றித் தூய்மையான தெய்வ நினைவு கொள்வாள் என்று கதாதரர் அறிந்திருக்கக் கூடும்!

அன்னையின் சங்கம் அனவரதமும் கிடைத்து வந்தது கதாதரருக்கு. அவ்வளவுக்கவ்வளவு சாஸ்திரியமான பூஜையும் குறைந்து கொண்டே வந்தது.

"வீட்டுக்கு மாற்றுப் பெண் வந்தவுடன் மாமியார்க்காரி அவளிடம் உள்ள வேலையும் வாங்குவாள். ஆனால் மாற்றுப் பெண் வயிற்றில் ஒரு புழு நெளிந்து, மாசங்கள் ஏறி வந்தால் கொஞ்சம் கொஞ்சமாக அவளுடைய வேலைகளைக் குறைத்துவிடுவாள். நிறை கர்ப்பமானால் அவளுக்குப் பரிபூரண மாக ஓய்வு அளித்துவிடுவாள் அல்லவா? இதே போலத்தான்...." என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் அந்த நாட்களில் சிறுகச் சிறுகத் தமது சாஸ்திரீய பூஜையை 'அம்பிகை மாமியார்' குறைத்ததைப் பற்றிச் சொல்வார். கதாதரருக்கு ஞானக் குழந்தை பிறந்த பிற்பாடு அவர் மீண்டும் கட்டுப்பட்டுப் பூஜைகள் செய்யப் போவதையும் நாம் பார்க்கத்தான் போகிறோம்.

தாம் அன்னையுடையவன் என்ற பாவம் மாறி அன்னை தம்முடையவள் என்ற பாவத்தை ரஸித்தார் கதாதரர். அதற்கும் உன்னதமாக, தாமே அன்னை, அன்னையே தாம் என்ற உணர்வையும் அவர் பல முறை பெறலானார். தேவிக்குப் பூசவேண்டிய சந்தனத்தைத் தமக்கே பூசிக்கொள்வார். அவளுக்கு அணிவிக்க வேண்டிய மாலைகளைத் தாமே அணிந்துகொள்வார். வெளியில் கண்ட தேவியை நிதர்சனமாகத் தமக்கு உள்ளும் காணும் ஒப்பற்ற நிலையில் அவர் ஆனந்தக் கடலில் திளைத்து வந்தார்.

அன்னையின் சங்கம் அனவரதமும் கிடைத்த நாட்கள் போய் அவள் அவரைச் சோதித்த நாட்களும் மாறி மாறி வந்தன. அந்தச் சமயங்களில் கதாதரரின் இதயம் எப்படி வெந்து வெதும்பியது என்பது அவருக்குத்தான் தெரியும். தம் தனித் துணையான தேவி நடுக் கடலில் தம்மைக் கைவிட்டுச் சென்றாற்போல அவர் தத்தளித்துத் தடுமாறினார். உன்னத ஆத்மானுபவத்திலிருந்து இந்த நிலைக்கு வரும்போது மலை முகட்டிலிருந்து பூமியில் விழ்ந்தாற்போல, மனசு நொறுங்கி முறிந்து போகப் பேச்சற்று மூச்சற்றுக் கிடப்பார். நீருக்குப் பதிலாக ரத்தத் திவலைகளே அவருடைய உடம்பில் வேர்வையாகத் துளித்தன என்று அவரை நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர். "வருவாய், தரிசனம் தருவாய்!" என்று அம்பாளிடம் கதறிக் கதறி முறையிடுவார். தம் முகத்தைத் தரையிலெல்லாம் தேய்த்துக்கொண்டு விம்முவார். இதனால் அவர் முகமெல்லாம் சிராய்த்து, சிராய்ப்புக்கள் காய்ந்து, வெடித்துக் கிடந்தன. உடம்பெல்லாம் பற்றி எரியக் கங்கையில் மணிக்கணக்காக, மூங்கிக் கிடப்பார். இவரே சில சமயங்களில் நெருப்பை மிதித்தாலும் உஷ்ணம் தெரியாமல், நீரில் நனைந்தாலும் ஈரம் தெரியாமல் அவசமாகத் திரிவார். இவ்வளவெல்லாம் சோதனைக்காளாகியும் அன்னையிடம் அவரது அன்பு மட்டும் லவலேசம்கூடக் குறையவில்லை.

வைத்தியர் ரண சிகித்சை செய்வது போல இத்தனை இன்னல்களையும் அவள் தம்முடைய நன்மைக்கே அளிக்கிறாள் என்று அவரது அகத்தின் அடி ஆழம் சொல்லிற்று.

வாளால் அறுத்துச் சுடினும்
மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல்

என்று குலசேகராழ்வார் பாடினாரல்லவா? அதே போல, தமது மாசுகளைப் பூரணமாகக் களையவே அவ்வாறு தேவி புடம் போட்டு எடுக்கிறாள் என நம்பி அன்பு செய்தார் கதாதரர். **(தொடரும்)**

பாருங்கள்

எப்படி யெல்லாம் பயன்படுகிறது

டாடாவின் ஓ டி கோலான்!



TELY-30 TAM




இவை மட்டுமா? இன்னும் பல வழிகளில் உபயோகிக்கலாம். உங்கள் வீட்டில் எப்பொழுதும் ஒரு சீசா கைவசம் வைத்திருங்கள். டாடாவின் ஓ டி கோலான் வாசனை நாலுவித சைஸ்களில், நல்ல கடைகளில் கிடைக்கின்றன. ஒருமுறை உபயோகித்துப் பார்த்தால் பின் 'இது இல்லாமல் எப்படி இதுவரை இருக்கமுடிந்தது' என்று வியப்படைவீர்கள்.

டாடா தயாரிப்பு




வாழையூருக்குக் கடந்த ஆண்டு வந்ததாகச் சொன்னீர்களே எதற்காக வந்தீர்கள்?
இங்குள்ள நீலன் என்பவரிடம் ஒரு முக்கியமான தஸ்தாவேஜைச் சேர்ப்பிப்பதற்காக...
சந்திரனே சாட்சி
கதை கௌசிகன்
24
சித்திரம்
சேர்ப்பித்தீர்களா?
சென்ற வாரம் வரை உயிலை உரியவரிடம் சேர்ப்பித்ததாகத் தான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் திடீரென்று எனக்குச் சமீபத்தில் ஒரு டெலிபோன் கால் வந்தது. நான் ஏமாற்றப்பட்டதாக அந்த கால் கூறியது.
டெலிபோன் காலா? பேசியது யார் என்று தெரிவித்தார்களா?
நீலன் அவர்களின் வக்கீல் என்று சொன்னார்.
அவர் உங்களிடம் என்ன தெரிவித்தார்?
'வாழையூருக்கு ஏப்ரல் 3-ம் தேதி வந்தீர்களா?' என்று கேட்டார். வந்ததாகச் சொன்னேன். உயிலைத் தவறான நபரிடம் சேர்த்து விட்டதாகச் சொன்னார். உங்களை மட்டும் நான் உண்மையான நபர் என்று எப்படி நம்புவது? அதனால் இனி எதையும் நீதிமன்றத்தில் தான் கூற முடியும் என்று கூறி விட்டேன்.
அப்படியானால் இன்றுவரை இங்கு யாரையும் சந்திக்கவில்லை என்கிறீர்களா?
ஆமாம். என்னை யாரும் சந்திக்கவோ பேசவோ கூடாது என்ற நிபந்தனையுடனேதான் இங்கு வர ஒப்புக் கொண்டேன்.
மிஸ்டர் சந்திரமோகன்! தங்களிடமிருந்து உயிலைப் பெற்றுக் கொண்டவர் இங்கு இந்த நீதிமன்றத்தில் இருக்கிறாரா?
இருக்கிறார். சற்றுமுன்பு சாட்சிக் கூண்டில் நின்றிருந்தாரே அவர்தான். ஆனால் அவர் என்னிடம் தமது பெயர் நீலமேகம் என்று கூறினார்.


பொய், பொய்! முழுப் பொய்! நான் ஸ்டேஷனில் சந்தித்தவரின் பெயர் அத்தாராமன். அவருக்கு இடது கை கிடையாது. அவர் இறந்தும் விட்டார்.
ஆத்திரப் பட வேண்டாம் ஐயா. நீங்கள் பார்க்கும் என் இடது கை நிஜக் கையல்ல. போலிக்கை. இதோ...! என் பெயர் அத்தாராமன். உங்களைச் சந்தித்த நான் உயிரோடுதான் இருக்கிறேன்.
மிஸ்டர் அத்தாராமன், வாழ்வு தாழ்வை நிச்சயிக்கும் முக்கியமான உயிலுடன் வந்த நீங்கள் ஊருக்குள் வராமல் ஸ்டேஷனிலிருந்து டெலிபோன் செய்வானேன்?
குடும்பத்தைப் பிரிந்து பல வருடங்கள் வெளிநாடுகளில் அலைந்த எனக்குச் சீக்கிரம் என் சொந்த ஊர் போக வேண்டும் என்ற துடிப்பு. ஆனால் நீங்கள் அவர்களைச் சந்திக்க வேண்டிய பொறுப்பு. அதுவே ஊருக்குள் வராமல்...
சர்க்கரை நோயுடன் நகருக்குத் தொடர்பில்லை என்பது தங்களுக்குத் தெரியாதா?
தெரியாது. நான் ஐயராமனைச் சந்தித்த அந்த நிலை எதையும் விவரமாகக் கேட்டறிந்து கொள்ளும்படியானதாக இருக்கவில்லை.
ஆனால் அந்த நிலையில் அவரிடமிருந்து உயிலை மட்டும் எழுதி வாங்கிக் கொண்டீர்களாக்கும்!
தவறு. உயிலைப் பற்றிய அக்கறை எதுவும் எனக்குக் கிடையாது. இந்த நீதி மன்றத்தில்தான் அந்த உயிலின் முக்கியத்துவத்தை அறிகிறேன்.
உங்கள் சாமர்த்தியமான பேச்சைப் பாராட்டுகிறேன்!
உங்கள் பாராட்டைப் பெற நான் எதையும் செய்யவில்லை.
ஐயராமனைப் பற்றி எதுவும் தெரியாத நீங்கள் சர்க்கரைத் தொழிற்சாலைக்கு போன் செய்ய மட்டும் அறிந்திருக்கிறீர்கள். போகட்டும்... டெலிபோனில் யாரை அழைத்தீர்கள்?



ஆமாம். அன்று மாலையே எனக்கு இவர் டெலிபோன் செய்து கன்னியின் விலாசத்தைக் கொடுத்தார்.
அதோ..! மோசக்காரன் என்று உங்களால் அழைக்கப்பட்டு, சாட்சிக் கூண்டில் நின்றாரே அவர்தான் நான் சந்தித்தது.
சந்தேகமே இல்லை நீ ஒரு மோசக்காரன்தான்!
தொடரும்...


நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!
புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!
குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!
சார்மிஸ்
உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்!
CHTP. G. 9


"எத்தனையோ நாளாக முயற்சி செய்கிறேன். இன்றும் தப்பாகி விட்டதே."
"இப்பொழுதெல்லாம் என்னால் எதையுமே சரியாகச் செய்ய முடியல்லை. சீக்கிரமே களைத்துப் போகிறேன்."
"கவலையே படாதே, பிரேமா. தினந்தோறும் ரெண்டு கப் போர்ன்-வீடா சாப்பிட்டுப் பார். அது மிகவும் நல்லதென்று எங்க டாக்டர் சொல்கிறார்."
"பிரமாதமான யோசனை! தினசரி இரண்டு கப்—ரொம்ப சீக்கிரத்தில குணம் தெரிகிறதே."
"இவ்வளவு காரியங்களையும் உங்க அம்மா தினசரி எப்படித்தான் செய்கிறாளோ?"
இத்தனை சுறுசுறுப்பாக நான் என்றுமே இருந்ததில்லை
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
சக்திக்கும்
வலிமைக்கும்
BOURN-VITA
தயாரிப்பாளர்கள் :
Cadbury's



புகழ் பெற்ற கடிதங்கள்



பணிய மறுத்த பெண்மணி

கி. பி. மூன்றாவது நூற்றாண்டில் எகிப்து உள்பட ஏறக்குறைய மேற்கு ஆசியா முழுவதும் ஒரு பெண்மணியின் ஆளுகைக்குட்பட்டிருந்ததென்று சொன்னால் நேயர்களில் சிலருக்கு ஆச்சரியமாக இருக்கும். இவள் பெயர் ஜினோபியா; நல்ல அழகி; ஐந்தாறு மொழிகளில் தேர்ச்சி பெற்றவள்; கலை, விஞ்ஞானம் முதலிய துறைகளிலும் புலமை பெற்றிருந்தாள்; எல்லாவற்றுக்கும் மேலாக வீரம்செறிந்த வாழ்க்கையை நடத்திவந்தாள்.

கி. மு. முதல் நூற்றாண்டில் எகிப்தில் ஆண்டு வந்தவளும், அழகிலும் வீரத்திலும் பெயர் பெற்றிருந்தவளுமான கிளியோபாட்ரா என்பவளின் வழித்தோன்றல் என்று தன்னைச் சொல்லிக் கொள்வதில் ஜினோபியா பெருமை கண்டாள்.

கணவன் இறந்துபோன பிறகு ராஜ்ய நிர்வாகம் பூராவையும் ஏற்றுக் கொண்ட இவள், தன் ஆதிக்க எல்லையை விஸ்தரிக்க எண்ணி அநேக போர்களில் ஈடுபட்டாள்; தானே தலைமை தாங்கி, படைகளை நடத்திச் சென்றாள்; வெற்றியும் கண்டு வந்தாள்.

இவளுடைய ராஜ்யத்தின் தலைநகரமாயிருந்தது பால்மைரா என்ற ஊர். இந்த நகரம் இருந்த இடமே இப்பொழுது தெரியவில்லை. தற்போதைய சிரியா நாட்டின் தலைநகரமாகிய டமாஸ்கஸ் என்னும் ஊருக்கு வடமேற்கில் சுமார் நூற்றைம்பது மைல் தொலைவில் இந்த நகரம் இருந்ததாகப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்.

ஜினோபியா ஆண்டு வந்த காலத்தில் ரோம சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக வீற்றிருந்தவன் அரேலியன் என்பவன். இவன் ஜினோபியாவை, ரோம சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ளும்படி செய்ய வெகுவாக முயன்றான். இவள் முடியாதென்று சொல்லி வந்தாள். போர் தொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று தீர்மானித்து, அரேலியன், இவளுக்குக் கடைசித் தடவையாகப் பின்வரும் கடிதத்தை எழுதினான்:

ஜினோபியாவுக்கு,

நான் இப்பொழுது உன்னை என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறேனோ, அதை நீயே வெகு காலத்துக்கு முன்பே செய்திருக்க வேண்டும். அப்படி நீ செய்யவில்லை. இப்பொழுது, பால்மைரா நகரத்தை,

வெ. சாமிநாதசர்மா



என் படைகள் வசம் ஒப்புக் கொடுத்து விடுமாறு இதன் மூலம் உனக்கு ஆணையிடுகிறேன். அப்படிச் செய்வாயானால், உன்னுடையவும் உன்னைச் சேர்ந்தவர்களுடையவும் உயிருக்கு ஆபத்து ஏற்படாதென்று உறுதி கூறுகிறேன். ஆனால் உன் சுதந்திரத்துக்கு உறுதி கூற முடியாது. நானும் ரோம அறிஞர்களடங்கிய சபையும் சேர்ந்து ஆணையிடுகிற இடத்தில் நீயும் உன் குழந்தைகளும் சென்று வசிக்க வேண்டும். அப்படி வசிப்பதோடு நீ திருப்தியடைய வேண்டும். உன்னுடைய நகைகள், தங்கம், வெள்ளி முதலிய சொத்து பற்றுக்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு ரோம அரசாங்கத்தின் பொக்கிஷத்தில் கொண்டு போய்ச் சேர்க்கப்படும். உன்னுடைய பிரஜைகள் மட்டும் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறுவார்கள். அவர்களுக்கு எல்லாச் சலுகைகளும் காட்டப்படும்.

இந்தக் கடிதத்துக்குப் பதிலாக ஜீனோபியா, முகத்தில் அறைந்தாற்போல் பின் வரும் கடிதத்தை எழுதி அனுப்பினாள்:—

அரேலியனுக்கு,

உன்னைப் போல் யாரும் இதுவரையில் என்னை ஆணையிட்டதில்லை. உன்னுடைய வீரத்தினால் மட்டுமே நீ யுத்தத்தில் வெற்றி காண முடியும்; வெற்றியின் பலனையும் அனுபவிக்க முடியும். இந்த உண்மையை நீ முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். எனது முந்திய பரம்பரையைச் சேர்ந்த கிளியோபாட்ரா ஒரு ராணியாக இருந்து மரிக்க விரும்பினாளே தவிர, உனது முந்திய பரம்பரையைச் சேர்ந்த அகஸ்டஸ் மன்னனுடைய அடிமையாக வாழ்ந்து கொண்டிருக்க ஒருப்படவில்லை. இதைத் தெரிந்து கொள்ளாதவன் போல் நீ, பால்மைரா, நகரத்தை உன் படைகள் வசம் ஒப்புக் கொடுத்து விடுமாறு எனக்கு ஆணையிடுகிறாய்.

நாங்கள் பாரசீகர்களுடைய உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். சாரஸேனியர்கள் எங்களுக்காக ஆயுதமெடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அர்மீனியர்கள் எங்களுக்குச் சாதகமாக நிற்க முன்வந்திருக்கிறார்கள். வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் சிலர் ஒன்று சேர்ந்து உன்னுடைய ஒரு பகுதிப் படையைத் தோல்வியுறச் செய்திருக்கிறார்கள். இந்தப் படைகளெல்லாம் ஒன்றுகூடி எங்களுக்கு உதவியாக வருமானால், உனக்கு என்ன கதி ஏற்படும் என்பதை நீயே தெரிந்து கொள். அப்பொழுது உன் அதிகாரத் தொனியை மாற்றிக் கொள்வாய். இந்தப் பூவுலகம், உன் வசத்தில் இருக்கிறதென்றும் அதை உன் இஷ்டம்போல் செய்யலாம் என்றும் தவறாக நினைத்துக் கொண்டு, என்னுடைய பிறப்புரிமையை விட்டுக் கொடுக்குமாறு அதிகாரத் தோரணையில் ஆணையிட மாட்டாய்.

ஜீனோபியாவின் இந்தப் பதில் அரேலியனுக்கு ஆத்திரத்தையே உண்டுபண்ணியது. பெரும் படையுடன் சென்று பால்மைரா நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டு அதனைத் தரையோடு தரையாக்கி விட்டான்.

ஜீனோபியா தன் குழந்தைகளுடன் தப்பிச் செல்ல முயன்றாள். முயலும்போது ரோமாபுரிப் படைகளிடம் சிக்கிக் கொண்டு விட்டாள். அரேலியன் இவளை ரோமாபுரிக்கு அழைத்துச் சென்றான். அவனுடைய வெற்றிக் கோலாகலத்தில் அவளையும் கலந்து கொள்ள வைத்த பிறகு, நகரை விட்டு ஒதுக்குப்புறமான இடத்தில் தனியாக ஒரு மாளிகையில் இறுதிக் காலம்வரை வசிக்கும்படி செய்தான்.

உலக சரித்திரத்தில் இடம் பெற்று விட்ட பெண்மணிகளுள் ஜீனோபியாவைப் போல அழகிலும், வீரத்திலும், பண்பாட்டிலும் சிறந்த ஒருத்தியைக் காண்பது அரிது. விலங்கு பூட்டப் பெற்ற கரங்களுடன் அரண்மனை மேன்மாடத்தில் நின்று கடைசி முறையாகப் பால்மைரா நகரை அரசி ஜீனோபியா வருத்தத்துடனும் வணங்காத தலையுடனும் பார்ப்பதையே இடது பக்கத்தில் காண்கிறீர்கள்.

அடுத்த இதழில்

"புரட்சி"

கி. ராஜேந்திரன்

எழுதும் நெடுங்கதை

★

மறக்க முடியாத திரைப்படங்கள்

கச்ச தேவயானி

★

விசேஷக் கட்டுரை

பெருமாளும் திருநாளும்

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்



இளமையில் வழுக்கை

இக்நிலையை நீங்கள் அனேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மென்ட் K-2 சில்விக்ரீன அட்வைஸரி சர்வீஸ், பீசாம் (இந்தியா) பிரை. லிட்., பீசாம் ஹவுஸ், மாஹிம், பம்பாய்—16.

Silvikrin

சில்விக்ரீன்— கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்



உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீர்படி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது



நாதமலர்

'**ம**லையின் அழகு பெரிதா? மலரின் அழகு பெரிதா? மலை அளிக்கும் ஆனந்தம் பெரிதா? மலர் அளிக்கும் ஆனந்தம் பெரிதா?' என்றெல்லாம் கேட்டால் என்ன விடை சொல்ல முடியும்? 'மலை மலைதான்; மலர் மலர்தான்; இரண்டுக்கும் தனித்தனி அழகுகள் உண்டு; இரண்டும் தனித் தன்மை வாய்ந்த ஆனந்தத்தை அளிப்பவை' என்றுதானே சொல்லக் கூடும்?

சில இதழ்களுக்கு முன் நாம் சந்தித்த ஸ்ரீ எம். டி. ராமநாதன் அவர்களின் இசை மலையின் காம்பீர்யம் கொண்டது. மலரின் மென்மை கொண்ட இசையை வழங்கும் இன்னொரு ராமநாதனை இவ்விதழில் சந்திக்கிறோம். அவர் சங்கீத பூஷணம் என்ற பட்டத்துக்கு உண்மையான தகுதி வாய்ந்த ஸ்ரீ எஸ். ராமநாதன் அவர்கள்.

பூரண சுதந்திரமாக உள்ளம் திறந்து வெள்ளமாகப் பாடும் போதே, அந்த வெள்ளம் தானாக ஓர் ஒழுக்கத்துக்குக் கட்டுப்பட்டிருக்கும் எழிலை ஸ்ரீ எம். டி. ஆரின் கானத்தில் காண்கிறோமெனில், விதரணையாகக் கச்சிதப்படுத்திப் பாடும்போதே ஒரு வித்வான் தமது கற்பனா சக்தியைப் பூரண சுதந்திரத்துடன் புலப்படுத்த முடியும் என்ற உண்மையை ஸ்ரீ எஸ். ராமநாதனின் சங்கீதத்தில் காண்கிறோம். தானாகவே அழகுக்குக் கட்டுப்படுவதுதான் தர்ம வாழ்க்கைக்கு ஆதாரம். இப்படித் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு மனோதர்மத்தைச் சுதந்திரமாகக் காத்து வருகிறார் ஸ்ரீ எஸ். ராமநாதன்.

ஸ்ரீ எஸ். ராமநாதன் அவர்கள் இசைக் கடலில் ஆழ முக்குளித்து அரிய முத்துக்களைத் திரட்டிய ஆராய்ச்சியாளர். முத்தெடுக்கும் தொழிலாளியாக மட்டுமின்றி அவற்றைத் தாமே பாங்குறக் கோத்து ரஸிகர்களுக்கு அளிக்கும் கலைஞராகவும் அவர் இருப்பது விசேஷமாகும்.

சென்ற மாதம் பதினைந்தாம்தேதி பழைய மாம்பலம் சத்குரு கான நிலயத்தில் ஸ்ரீ எஸ். ராமநாதன் தேனாக ஒரு கச்சேரி செய்தார். மோகனமான அவரது மெல்லிய குரல் எடுத்த எடுப்பிலேயே பட்டிழையாக நம் மேல் படிந்து விடுகிறது. சுருதி சுத்தமாக ரவை ஜாதிகளை உதிர்க்கிற சாரீரத்தை 'ஜிம்னாஸ்டிக்ஸ்' செய்ய அநுமதியாமல், அதற்கு ஸ்ரீ ராமநாதன் குழைவையும், இழைப்பையும் ஊட்டி விருப்பது தொடக்கத்திலேயே புரிந்து விடுகிறது.

சாந்தமாக, அடக்கமாகப் பாடியே நம்மைக் கசிய வைக்கிறார். பசும் குழந்தை ஒன்றைத் தொட்டிலில் இட்டுத் தொட்டிலை இழுத்து இழுத்து விடும் போது தொட்டிலின் கனத்துடனேயே குழந்தையின் நயத்தையும் சேர்ந்து அநுபவிப்போமல்லவா? அதே போல இவர் இசைக்கும்போது ஸ்வர ஸ்தானங்கள் பிருகிலேயே நெளிவு தோன்ற விளையாடுகின்றன. வீணையில் வல்லுநரான ஸ்ரீ ராமநாதன் அன்று வாய்ப்பாட்டுக் கச்சேரிதான் செய்தார் எனினும் கேட்போருடைய இதய வீணையின் நரம்புகளை நாலைந்து முறையேனும் சுண்டி விட்டார்!

தியாகையர், தீக்ஷிதர் முதலிய மகான்களின் கிருதிகளில் இசையம்சத்தின் நிட்ப–நுட்பங்களும், அர்த்தபாவத்தின் நிட்ப–நுட்பங்களும் எப்படி ஒன்றாக இசைந்திருக்கின்றன என்பதை ஓரளவுக்குப் புரிய வைக்கிறார் ஸ்ரீ எஸ். ராமநாதன். ஆஹிரி, பௌளி முதலிய சாந்தம் கமழும் ராகங்களில் அவர் தியாகையரின் உத்ஸவ சம்பிரதாயக் கீர்த்தனைகளைப் பாடிய போது இந்த அம்சம் சிறப்பாக ஒளி வீசியது. 'ஸ்ரீ குருணா பாலிதோஸ்மி' என்ற பாடி ராக தீக்ஷிதர் கிருதியைப் பரவசமாகப் பாடிய ராமநாதன், 'நாதாந்த' என்ற இடத்தில் சொக்கி நின்ற போது உண்மையிலேயே அவர் நாதத்தின் அந்தமாகிய ஆனந்தத்தைத் தீண்டியது போலிருந்தது.

பாடி மட்டுமல்ல; அபூர்வ ராகங்கள் பலவற்றை, 'ஆகா, என்ன அபூர்வமாகப் பாடுகிறார்!' என்று வியக்குமாறு அநாயாசமாக, ஆறுதல் மிதமாகப் பாடினார் ஸ்ரீ ராமநாதன்.

இது வரை பூரண சந்திரிகா ராகத்தின் பிறைகளையே கண்டு வந்தவர்கள் அன்று ராமநாதன் 'பலுக வேமி' பாடிய போது பூரண சந்திரிகையையே கண்டார்கள். ராகங்கள் தங்கள் இதயத்தில் பொதிந்து வைத்துக் கொண்டுள்ள இரகசியங்களில் சிலவற்றைப் பாடிப் பரப்புகிற ஆற்றல் இவருக்கு இருக்கிறது.

ஸ்ரீ எஸ். ராமநாதன் ஸ்வரம் பாடுவதில் ஓர்



அலாதியாக இருக்கிறது! பல அம்மானை களை வேறு வேறு திசையில் வீசி எறிந்து லாகவமாகப் பிடிப்பது போல் அவர் ஸ்வரங் களைப் போட்டுப் பிடித்தும், நெசவில் கோத்து வாங்குவது போலவும் காரியம் செய்கிறார். ரம்மியமான அநுபவம்!

ஸ்ரீ எஸ். ராமநாதன் அவர்களுக்குச் சில யோசனைகள்: ஸ்வரப் பிரஸ்தாரத்துக்குத் தரும் முக்கியத்துவத்தை ராக ஆலாபனைக் கும் தர வேண்டும். அபூர்வ ராகங்களோடு நில்லாமல் கன ராகங்களிலும் பாட வேண் டும். இன்னும் சிறிது அப்பியாசம் செய்து தார ஸ்தாயியில் குரல் கம்மிப் போகாமல் காத்துக் கொள்ள வேண்டும். இசை அங் கங்கே வெட்டுப்படாமல் கவனமாகப் பார்த் துக் கொள்ள வேண்டும். இன்று போலவே என்றும் பிர்க்காப் பொழிவை மிதமாக வைத்துக் கொண்டு, கர்நாடக இசையின் கமக எழிலைப் பூரணமாக வெளிப் படுத்த வேண்டும். நாத மலரில் இவ்வா றெல்லாம் மேலும் மணம்பெருக நாதன் அருள்வானாக!

நாகஸ்வரமே தான்!

நாகஸ்வரம் என்பது சரியா, நாதஸ்வரம் என்பது சரியா என்று நிறைய ஆராய்ச்சிகள் நடந்திருக்கின்றன: நாகஸ்வரம் என்ற பெயர்தான் சரி என்பது சென்ற மாதம் பத்தொன்பதாம் தேதி மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸில் நடைபெற்ற ஷேக் சின்னமௌலா ஸாஹேப் அவர்களின் நாயனக் கச்சேரியில் சர்வ நிச்சயமாக நிரூபணமாயிற்று.

நாகத்துக்குப் பாதம் கிடையாது என்பது உலகறிந்த விஷயம். ஆனால் அது எத்தனை சொகுசாகச் சரசர வென்று ஊர்ந்து செல் கிறது? அதனுடைய முதுகெலும்பின் ஆயிரக் கணக்கான பூட்டுக்கள் ஒன்றை யொன்று கவ்விப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. பாம்பு தன்னை உந்திக் கொள்ளும் போது அந்தப் பூட்டுக்கள் ஒன்றோடொன்று நெரிந்தும் விலகியும் இயங்குவதால்தான் அரவத்தி னால் அப்படி வெண்ணெயாக நெளிய முடி கிறது.

பாம்பின் எலும்புப் பூட்டுக்கள் ஒன்றை யொன்று கவ்விக்கொண்டிருப்பது போலவே தான் ஷேக்சின்ன மௌலா ஸாஹேப் அவர் களின் நாயனத்தில் பிறக்கும் ஸ்வரத் தொடுப் புக்களும் ஒன்றை ஒன்று கவ்விப் பிடித்துக் கொண் டிருக்கின்றன. அவருடைய நாத உந்த லுக்கேற்ப அவை கிட் டக் கிட்ட வந்தும், விலகி விலகி ஓடியும் விநோதம் செய்யும் போது சங்கீதமும் வளைந்து வளைந்து ஓடு கிறது. வழு வழுப் பான பன்னகம் விறைப்புடன் படம் எடுப்பது போலவே, சரிந்து விழும் இவரு டைய ஸ்வரக்கோவை கள் கம்பீரமான கார் வையாகப் படமெடுக் கும் போது, இந்த சுத்தமான நாதத் தைப் பாய்ச்சுகிற வாத்தியம் நிச்சயமாக நாகஸ்வரமே தான் எனத் தெளிகிறோம்.

ஓங்கோல் தாலுகாவில் கரவாடி கிரா மத்தைச் சேர்ந்த ஷேக் சின்னமௌலா ஸாஹேப் அவர்கள் சங்கீத மதத்தைச் சேர்ந்த வர்; அதனால்தான் சங்கராபரணத்தையும், காபி நாராயணியையும் இவ்வளவு அழகாகப் புரிந்து கொண்டு இவரால் வாசிக்க முடிகிறது. இவருடைய இசையின் தனிச் சிறப்பு ஒரு சிறிதும் பிசிர் இல்லாத துப்புரவாகும். ஜிலுஜிலு என்று சின்னச் சின்ன பிர்க்காத் துளிகள் இவரது சங்கீதத்தில் குண்டு குண் டாக உருளுகின்றன. அவற்றின் தொடிப்பும், தளுக்கும், ராஜஸமும் இவரது கச்சேரியைக் கேட்பவர்களுக்குத்தான் புரியும்.


ஷேக்சின்ன மௌலா ஸாஹேப் அவர்கள் ரக்தி ராகங்கள் நிறைய வாசிக்க வேண்டும். சவுக்க காலக் கீர்த்தனங்களை விச்ராந்தியாக வாசிக்க வேண்டும். முக்கியமாக, சுருதிக்கு ஒத்து வைத்துக் கொள்ள வேண்டும். எல்லா நாகஸ்வர வித்துவான்களுமே இந்த ஒத்து விஷயத்தில் ஒத்துப் போக வேணும்.

ஒத்து வாசிப்பது ஏதோ அகௌரவமாகக் கருதப்படுகிறது என்று கேள்விப்பட்டேன். இது மிகவும் விசனமான நிலை. சங்கீதத்தின் தாய் சுருதி. இத்தகைய சுருதியில் வித்வா னின் கற்பனை அவ்வப்போது மூங்கி லயமடை யச் செய்வது மிகவும் கௌரவமான கலைப் பணியாகும். மிகவும் பரிசிரமத்துடன் பயில வேண்டிய கருவி நாகஸ்வரம். எவ்வளவு மூச்சைப் பிடித்துக் கொண்டு மூர்ச்சனை களைப் பூர்த்தி செய்ய முயன்றாலும் ஆங் காங்கு கத்திரித்துப் போவது சகஜம். ஒத்து இருந்தால் இந்த நலிவு தெரியாமல் சங்கீ தத்தை 'ஒத்துருவி' விடும். இவ்விஷயத்தை நாகஸ்வர வித்வான் கள் யாவரும் கவ னிக்க வேண்டும். நாய னத்துக்குச் சுருதிப் பெட்டி வேண்டாம்! வைரம் நிறுக்கும் தரா சில் வைரத்தையே எடை போடுவோம். அதில் யானையை ஏற்ற வேண்டாம்! — கன்யா




டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்


பொன் விலங்கு
மணிவண்ணன்



இருபத்தொன்றாம் அத்தியாயம்



நாலைந்து நாட்களாகத் தொடர்ந்து பெய்து கொண்டிருந்ததைப் போலவே அன்றும் பலமான இடிகளோடும், மின்னலோடும் கோடை மழை பெய்து ஓய்ந்திருந்தது. அந்த முன் மாலை நேரத்தில் மழை பெய்து நின்ற நிலையில் கோபுரங்களும் தானுமாக வார்த்தைகளால் இன்னதென வருணிக்க முடியாததொரு பேரழகில் குளித்தெழுந்து ஈரம் புலராத பச்சை வனப்போடு இலங்குவது போல் தோன்றிக் கொண்டிருந்தது மதுரை நகரம். இசை வேளாளர்கள் நிறைந்த சங்கீத விநாயகர் கோயில் தெருவில் ஏதோ ஒரு வீட்டில் யாரோ ஓர் இளம் பருவத்து நாகஸ்வரக் கலைஞர் இந்த உலகத்தின் சகல விதமான அழகுகளையும் ஒலி வடிவமான ஒரே ஓர் இராகத்தில் சொல்லி விட விரும்புவதுபோல் தோடியை வாசித்துக் கொண்டிருந்தார். இன்னொரு வீட்டிலிருந்து தேர்ந்த விரல்கள் நல்ல வீணையின் நரம்புகளில் மிக மேன்மையானதோர் இனிமையைப் பேசிக் கொண்டிருந்தன. தெருவைத் தழுவினாற் போல் நீண்டு செல்லும் மின்சார 'வயரிலும்' தந்திக் கம்பிகளிலும் முத்து முத்தாக மழை நீர் நிற்கவும் மாட்டாமல், சிந்தவும் மாட்டாமல் மனிதனுடைய ஆசைகளைப் போல் அலைபாய்ந்து கொண்டிருந்தது. யாரும் வராத தெருக்கோடியை வெறித்துப் பார்த்தபடி அங்கு யாரோ வேண்டியவர்கள் வரப்போவது போல் கற்பித்துக் கொண்ட ஆர்வத்தோடு வீட்டு வாசலிலிருந்து கவனித்தவண்ணம் இருந்தாள் மோகினி. அங்கிருந்து விடுபட்டு எங்கோ உடனடியாகப் பறந்து போய் விட வேண்டும் போலத் தவித்துக் கொண்டிருந்தது அவள் மனம். உள்ளே அம்மாவும், கண்ணாயிரமும், கண்ணாயிரத்தோடு வந்திருந்த வேறொரு மனிதரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். சிரிப்பும் அரட்டையுமாகக் கண்ணாயிரம் பேசிய விதத்தைப் பார்த்தால் இந்த உலகத்தையே தாம் வம்பளப்பதற்

கென்று சாசனம் செய்து கொடுத்து விட்டது போல் பாவிப்பதாகத் தோன்றியது. அந்த நிலையில் உள்ளே உட்காருவதற்குப் பிடிக்காமல் தான் வாசலுக்கு எழுந்து வந்திருந்தாள் மோகினி. அந்த வீட்டில் அந்தச் சூழ் நிலையில் தன் உடம்பையும் மனத்தை யும் எப்படிப் பரிசுத்தமாகப் பாதுகாத் துக் கொண்டு வாழ்வதற்கு முடியப் போகிறது?' என்று எண்ணித் தவித்த போது எதிர்காலம் இருண்டு தெரிந்தது. 'கேளாதேவந்து கிளைகளாய்த் தோன்றி' என்று ஒரு பழைய பாட்டு ஆரம்ப மாகும். 'இந்த வீட்டைத் தேடி வந்து இந்த அம்மாவுக்குப் பெண்ணாய்ப் பிறந்து இந்தப் பூமியில் இப்படி அவதிப் பட வேண்டும் என்று யார் தவம் இருந் தார்கள்?' என்று எண்ணும்போது அவ ளுக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. செந்தாமரைப் பூக்களாய் மலர்ந்த கைகளும், கால்களும் ஒளிரச் சத்தியமூர்த்தி அந்த வீட்டின் வாயிற் படிகளில் ஏறி வந்த இனிய நாட்கள் அவளுக்கு நினைவு வந்தன. கையில் அவனளித்த மோதிரத்தையும் இதயத் தில் அவனைப் பற்றிய நினைவுகளையும் அணிந்து கொண்டு நேரம் போவது தெரியாமல் தெருக் கோடியை வெறித் துப் பார்த்தபடி நின்றாள் அவள். 'இந்த வழியாகத்தான் அவர் கம்பீரமாக நிமிர்ந்து நடந்து வந்தார்! இந்த வழி யாகத்தான் திரும்பிப் போனார்' என்று வந்த வழியும், போன வழியும் ஞாப கத்தில் இருந்தன. தெருவில் எங் கிருந்தோ நாத வெள்ளமான மதுர அலைகளோடு பொங்கிய நாகஸ்வரக் காரரின் தோடியும், மழை பெய்து நின்றிருந்த சூழ்நிலையும், இசை வண்டு முரல்வது போல் வீணையின் பக்குவமான ஒலியும், அவளை வேறு உலகத்தில் வேறு ஞாபகத்துக்குக் கொண்டு போயிருந்த போது அம்மா வந்து காதருகில் முணு முணுத்து இந்த உலகத்தை ஞாபகப் படுத்தினாள் :

''வீட்டுக் கூடத்திலே பெரிய மனி சங்க.....ரெண்டு பேரு வந்து பேசிக் கிட்டிருக்கிறப்போ, இங்கே தெருவிலே என்ன பாழாப் போறதுன்னு வந்து நின்னுக்கிட்டிருக்கிறே? உன்னையத் தாண்டி கேக்குறேன். உள்ளே வந்து உட்கார்ந்து தொலை. வந்திருக்கிறவங் களுக்கு இதமா ரெண்டு வார்த்தை சிரிச்சுப் பேசு. அதிலே ஒண்ணும் கொறைஞ்சு போயிடாது.''

''நான் என்னம்மா பேசப் போறேன்? எல்லாம் நீயே பார்த்துப் பேசி அனுப்பி விடு!'' என்று அவள் வேண்டா வெறுப் பாகத் தட்டிக் கழிக்க முயன்ற போது அம்மா கோபித்துக் கொண்டு சீறினாள்.

''இப்பிடி 'யாருக்கு வந்த விருந் தோ'ன்னு இருந்திட்டா நாளைப் பின்னே இந்த வீட்டைத் தேடி மனி சான் யாரும் வரமாட்டாங்க. தொழில் பட்டுப் போய் நீயும் நானும் தெரு விலே பிச்சைக்கு நிற்கலாம்டீ....''

''மானங்கெட்டுப் போய் வீட்டுக் குள்ளே நிற்கிறதைவிட மானத்தோடு தெருவில் நிற்கலாம்....''

இந்த வார்த்தைகளை இவ்வளவு துணிவாக அம்மாவிடம் 'வெடுக்' கென்று நேருக்கு நேர் அவள் சொல்லி யிருக்கலாமோ, கூடாதோ? ஆனால் சொல்லியாயிற்று. அம்மா பரபரப் பாக வந்த விதம், 'பெரிய மனி சான்' வந்திருக்காங்க என்று சொல் லியவிதம், எல்லாமே அவள் மனத்தில் வெறுப்பை மூட்டின. அந்த வெறுப்பின் விளைவாகத்தான் அவள் இப்படிப் பேசியிருந்தாள். செட்டி நாட்டுப் பகுதியிலிருந்து செல்வமும் செல்வாக் கும் உள்ளவரான பெரிய தனிகர் ஒரு வரை அழைத்துக் கொண்டு வந்திருந் தார் கண்ணாயிரம். அந்தத் தன வணி கர் வீட்டில் கலியாணமாம். கலியா ணத்தன்று மாலை வரவேற்பின் போது மோகினியின் நாட்டியம் இருந்தால் நல்லதாம். கண்ணாயிரம் அந்தத் தன வணிகரை அழைத்துக் கொண்டு வந்தது, அறிமுகப்படுத்தியது, பேசியது, எல் லாமே, 'நான் ஏற்பாடு செய்கிறேன்' 'நான்தான் இதெல்லாம் ஏற்பாடு செய்ய முடியும்' என்ற திமிர் தெரியும்படி இருந்தன. கண்ணாயிரத்தைப் போல் எந்தத் தகுதியினாலும் கர்வப்பட வழி இல்லாதவர்கள் எதற்காகவோ கர்வப் பட்டுக்கொள்வதை அவள் மனம் பொறுத்துக் கொள்ள முடியாமல் வெறுத்தது. கர்வப்படுவதற்கும் தலை நிமிர்ந்து நடப்பதற்கும் ஏதோ ஒரு சிறப்பான காரணம் உள்ளவர்கள் கர் வப்படுவதையே இந்த உலகம் ஏற்றுக் கொள்வதற்கும், அங்கீகரிப்பதற்கும் தயங்குகிறது. அப்படியிருந்தும் கண் ணாயிரத்தைப் போன்றவர்கள் தங்களைத் தாங்களே கர்வப்படுவதற்குரியவர்க ளாகப் பாவித்துக் கொண்டு திரி வதைச் சமூகமும் பெரிய மனிதர் களும் எப்படி மன்னிக்கிறார்கள்? என்று புரிந்துகொள்ள முடியாமல் மனம் கொதித்தாள் அவள். அந்தக் கொதிப் பினால்தான் அம்மாவுக்குப் பதில் சொல்லும்போது அவ்வளவு கடுமை யான வார்த்தைகளாகச் சொல்லிவிட் டாள். அவளுடைய பதில் வார்த்தை

களைக் கேட்டு அம்மா கோபத்தோடு தோள் பட்டையில் முகத்தை இடித்துக் கொண்டு அழகு காட்டிவிட்டு உள்ளே போயிருந்தாள். வந்தவர்களும், அம்மாவும், கண்ணுயிரமும் எக்கேடும் கெட்டுப் போகட்டுமென்று வாசலிலிருந்தபடியே சிறுவனை அழைத்து, உள்ளே இருந்து தட்டில் பூவும், தேங்காய், பழமும் எடுத்துக்கொண்டு வரச் சொல்லி அவனையும் துணைக்கு அழைத்துக் கொண்டு மீனாட்சி கோவிலுக்குப் புறப்பட்டு விட்டாள் அவள். வடக்குக் கோபுரத்தின் வழியாகக் கோவிலுக்குள் நுழைந்து ஆடி வீதியில் கிழக்கு நோக்கி நடந்து கொண்டிருந்த போது மறுபடியும் மழை பிசுபிசுக்கத் தொடங்கியிருந்தது. அவளும் உடன் வந்திருந்த சிறுவனும் சாமி சந்நிதிக்குள் நுழைவதற்குள் மழை பலமாகவே வந்து விட்டது. கோவிலுக்குள்ளும் கூட்டம் அதிகமாக இருந்தது. சாமி சந்நிதியில் தரிசனத்தை முடித்துக் கொண்டு மோகினி அம்மன் சந்நிதி முகப்புக்கு வந்தபோதில் கூட்டம் உள்ளே நுழைய முடியாதபடி நெருக்கமாக இருந்தது. அர்ச்சனைச் சீட்டு வாங்குவதற்காகப் பையனை வரிசையில் நிற்கச் சொல்லிவிட்டுக் கிளிக் கூட்டு மண்டபத்தை ஒட்டினாற் போல் தயங்கி நின்றாள் அவள். கூட்டிலிருந்த பல கிளிகளில் மிகவும் பெரிதாகிய பஞ்சவர்ணக் கிளி ஒன்று வருகிறவர்கள் சொல்லிச் சொல்லித் தனக்குப் பழக்கப் படுத்திவிட்ட ஒரே ஒரு வார்த்தையாகிய 'மீனாட்சி' 'மீனாட்சி' என்ற பதத்தைக் கிள்ளைப் பேச்சாக மிழற்றிக் கொண்டிருந்தது. கிழக்குப் பக்கம் பொற்றாமரைக் குளத்துக்கு மேலே இறந்த வானம் இடியும் மின்னலுமாக மழைக் கோலம் பூண்டிருந்தது. மழையும் நிற்கிற வழியாயில்லை. பொற்றாமரைக் குளத்தின் படிகளில் தண்ணீர் வடிந்து பாயும் ஓசை ஒரே அளவான சுருதியோடு ஒலித்துக் கொண்டிருந்தது. மிகப் பெரிதாகக் கேட்ட இடி ஓசை ஒன்றின் போது கிளிக் கூட்டு மண்டபத்தில் அடைபட்டிருந்த பஞ்ச வர்ணக் கிளி மேலே பட பட வென்று சிறகடித்துப் பறக்க முயன்று முடியாமல் மறுபடியும் சட்டத்தில் வந்தமர்ந்தது. அப்படிப் பறக்க முயன்று முடியாமற் போய்த் தளர்ந்து மறுபடியும் சட்டத்திலேயே அமர்ந்துவிட்ட அந்தக் கிளியையும் தன்னையும் மனத்தில் ஒப்பிட்டுப் பரிதாபத்தை உணர்ந்தாள் மோகினி. 'நீயும் நானும் கூண்டிலிருந்து பறந்து போய்ச் சுதந்திரமாக வாழ முடியாது கிளியே! காரணம்? நீயும் நானும் பிறருடைய காட்சிக்குப் பண்டமாகிற அளவுக்கு அழகாயிருப்பதுதான். எங்கே இருக்கிறோமோ அங்கிருந்து பறந்து போய்விடத்தான் நீயும் நினைக்கிறாய்; நானும் நினைக்கிறேன். ஆனால் சொல்லிக் கொடுத்தபடி வாழ்ந்து, கட்டுப்படுத்தியபடி கட்டுண்டு முடிய வேண்டுமென்றுதான் உன் தலையிலும் என் தலையிலும் ஒன்றாக எழுதியிருக்கிறது. ஆனால் ஒரே ஒரு வேறுபாடு. நீ இருக்கிற கூட்டை இரும்பு அளியிட்டு மூடியிருக்கிறார்கள். நான் இருக்கிற கூட்டை அப்படி யாரும் மூடிப் பூட்டி வைக்கவில்லை. வாசல், கொல்லை, கூடம், மேசை, நாற்காலி, கட்டில், மெத்தை எல்லாம் இருக்கிற சுகமான கூட்டில் நான் அடைபட்டிருக்கிறேன். என்னுடைய கூட்டில் வாசலும், புறக்கடையும் திறந்தே இருந்தாலும் நான் வெளியேற முடியாது. சொல்லிக் கொடுத்தபடி ஆடவும், அம்மாவுக்குப் பணம் சம்பாதித்துக் கொடுக்கவும் நான் அடைபட்டிருக்கிறேன். சொல்லிப் பழக்கப்படுத்தப்பெற்ற ஒரே வார்த்தையைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு நீயும் அடைபட்டிருக்கிறாய். நீயும், நானும் அழகாயிருக்கிறோம் என்று உலகம் திருப்திப்படலாம். ஆனால் சுதந்திரமாயிருக்க முடியாத வரையில் நாம் திருப்திப்பட என்ன இருக்கிறது?'— என்று இப்படியெல்லாம் நினைத்துப் பெருமூச்சு விட்டாள் மோகினி. அதே மண்டபத்தின் அருகே முன்பு சத்திய மூர்த்தியைச் சந்தித்ததும், திருச்சுற்றில் வலம் வரும்போது அவன் பாதங்களைத் தொட்டு வணங்கியதும் நினைவு வந்து அவளைக் கண் கலங்கச் செய்தன. அந்தக் கணத்தில் அவளுடைய ஞாபகம் தான் தொட்டு வணங்கிய பாதங்களில் போய்ப் பதிந்தது அல்லது அவளுடைய ஞாபகத்தில் அந்தப் பாதங்கள் வந்து பதிந்தன. மீண்டும் மற்றோர் உரத்த இடியோசையில் மருண்ட அந்தக் கிளி

பொன் மொழிகள்

வாழைக்காய்க் குலை முற்றியவுடன் தாறு வெட்டிக் காய்களைச் சுற்றி வேப்பிலைக் கொத்துக்களால் மூடிக் களிமண்ணால் மூட்டம் போட்டுச் சூடும் வெம்மையும் உண்டாக்கிப் பழுக்கச் செய்வார்கள்: அதைப் போல் அந்த வீட்டின் கசப்பினாலும் வெம்மையினாலுமே அவள் மனம் பழுத்து இனிமை கண்டிருந்தது.

மறுபடியும் சிறகடித்துப் பறக்க முயன்று முடியாமல் ஆற்றாமையோடு சட்டத்தில் வந்து அமர்ந்தது. அந்தப் பஞ்ச வர்ணக் கிளியின் வெல்வெட் உடம்பையும் அதில் நிறங்களில் புரண்டெழுந்தாற்போன்ற பளபளப்பையும் பார்த்து 'மீனாட்சி மீனாட்சி' என்று ஒரே வார்த்தையைக் கதறி அதைத் தவிரக் கதறுவதற்கு வேறு பதமும் பறப்பதற்கு வேறு இடமும் கிடைக்காமல் அது தவிப்பதையும் உணர்ந்து, அந்த உணர்ச்சியிலேயே தன் துயரத்தையும் புரிந்துகொண்டவளாய் மலைத்து நின்ருள் மோகினி. தேங்காய், பழமும், பூவும் இருந்த கூடை கீழே விழுந்து விடும்போலக் கைகள் நடுங்கின. மனம் எதையோ எண்ணி யாருடைய ஞாபகத்திலோ பெரிதாகத் தவித்தது. இதற்குள் வரிசையில் நின்றிருந்த சிறுவன் அர்ச்சனைச் சீட்டோடு வந்து சேர்ந்திருந்தான். கூட்டத்தோடு கூட்டமாகக் கோவிலுக்குள் சென்ருள் மோகினி. மீனாட்சி சந்நிதியில் அர்ச்சனை முடிந்து, பிராகாரத்தில் சுற்றிய போது சத்தியமூர்த்தியின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்ட இடத்தில் மேலே நடக்கத் தோன்ருமல் சில விநாடிகள் தயங்கி நின்ருள் அவள். மனமும் கால்களும் அந்த இடத்தை விட்டு நகர முடியாமல் தயங்கின. 'உயிரைக் கொடுத்த தெய்வத்தைத் தரிசிக்க வந்த இடத்தில் உயிரைக் காப்பாற்றிய தெய்வமாகிய உங்களையும் தரிசனம் செய்ய நேர்ந்தது' என்று முன்பு கோவிலில் சந்தித்த போது தான் அவனிடம் கூறியிருந்ததை நினைத்தாள் அவள். கோவிலில் ஒவ்வொரு சந்நிதியிலும் வணங்குவதற்காகக் கையெடுத்தபோதெல்லாம் அவன் அன்போடும் பரிவோடும் தன்னைக் கைப்பற்றி அணிவித்த அந்த மோதிரம் கவனத்தில் பட்டதனுல் வணங்கிக் கொண்டிருந்த தெய்வத்தின் ஞாபகத்தோடு வணங்க வேண்டிய தெய்வத்தின் ஞாபகத்தையும் சேர்த்து உண்டாக்கின. மனத்தில் தனியாக ஓடிக் கொண்டிருந்த நினைப்பைப் போல அல்லது நினைப்பிற்கு ஏற்ருற்போல் புறத்திலும் தனியே ஒதுங்கிப் பிரிந்து நடக்க முடியாமல் மழையின் காரணமாக வந்தவர்கள் எல்லாம் வெளியேற முடியாது போய்க் கோவிலில் கூட்டம் அதிகமாயிருந்தது. மழை நின்று அவள் சிறுவனேடு வீட்டுக்குத் திரும்பிப்போய்ச் சேர்ந்தபோது இரவு ஒன்பது — ஒன்பதரை மணிக்கு மேல் இருக்கும். அப்போதும் கூடக் கண்ணுயிரமும் வந்தவரும் திரும்பிப் போகவில்லை. மேசை நடுவே வெற்றிலைப் பெட்டியைத் திறந்து வைத்துக் கொண்டு வெற்றிலை பாக்கையும் வார்த்தைகளையும் சுவைத்து மென்று தின்று கொண்டிருந்தார்கள், அம்மாவும், கண்ணுயிரமும். கை விரல்களில் நகைக் கடை வைத்த மாதிரி விதம் விதமான கற்களில் மோதிரமும், சரிகைக் கரை மட்டுமே தெரிய மடித்த விசிறி மடிப்புப் பட்டு அங்கவஸ்திரமும், அடிக்கடி தோளில் நிற்காமல் நழுவுகிற அங்கவஸ்திரத்தை எடுத்து மேலே சார்த்திக் கொள்ளும் கையும் தொந்தியும் தொப்பையுமாக வந்தவர் அசடு வழியச் சிரித்துக் கொண்டிருந்தார். அம்பு பாய்வது போல் வீட்டுக்குள் நுழைந்து கூடத்தில் நிற்காமலே விறுவிறுவென்று நடந்து போய் மாடிப் படி ஏறிவிட்டாள் மோகினி. நேரங்கெட்ட நேரத்தில் ஆண் பிள்ளைகளை உட்கார்த்தி வைத்துப் பேசிக்கொண்டு அம்மா கொட்டமடிப்பதை அவள் மனம் வெறுத்தது. பின்னுலேயே அவளைத் தொடர்ந்து அம்மாவும் படியேறி வந்தாள். ''இந்தா பாருடீ! உனக்குத் தான் சொல்றேன். பையனை இட்லி பலகாரம் வாங்கியாறச் சொல்லி அனுப்பு. வந்தவங்களுக்குக் கொடுக்கணும். இந்த நேரத்திலே இங்கே மாடியிலே தனியா என்ன கிழிக்கப் போறே? கீழே வந்து உட்கார்ந்து மனிசாளோட மனிசாளா இரேன்..''

மோகினி பதில் சொல்லாமல் உதட்டைக் கடித்துக் கொண்டு மன அழுத்தத்தோடு இருந்தாள்.

''நீ ஏண்டி இப்பிடி இருக்கே? பணமும் மதிப்பும் உள்ள பெரிய மனிசன் வந்து மணிக் கணக்காக் காத்திருக்காங்க. நான் படிச்சுப் படிச்சுச் சொல்றேன். குத்துக் கல்லாட்டமாச் சும்மா இருக்கியே.. கல்யாணத்துக்கு ஆடணுமின்னு பேசவந்திருக்காரு. முழுசா அஞ்சு நூறு ரூபா நோட்டை எடுத்து 'அட்வான்ஸா வச்சிக்குங்க' ன்னு கொடுத்திருக்கிற மனிசாளிட்டே ரெண்டு வார்த்தை சிரிச்சுப் பேசிட்டாத்தான் என்ன கொறைஞ்சி போவுதாம்?''

செய்ய விருப்பமில்லாத காரியத்தைச் செய்வதற்காகக் கதறி அழுகிற மனத்துடனும் செய்தே தீரவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிற அவசியத்துக்காகக் கீழிறங்கும் கால்களுமாக அம்மாவுடன் படிகளில் இறங்கிளுள் அவள். கண்ணுயிரத்தின் வாழ்க்கையில் பொய் என்பது ஒரு பகுதியாயில்லை. பொய்யின் வாழ்க்கையில் தான் கண்ணுயிரம் ஒரு பகுதியாயிருக்கிருர் என்று மோகினி அறிந்திருந்தாள்.

உங்கள் வீட்டுக் கல்யாணத்தில் தன் பெண்தான் நாட்டியமாடணும்னு முத்தழகம்மாளுக்கு ஆசை' என்று அங்கே கலியாணம் நடக்கிற பிரமுகர் வீட்டில் பேசியிருப்பார். இங்கே வீட்டில் வந்து, 'முத்தழகம்மா! மோகினியோட நாட்டியக் கச்சேரி இருந்தால்தான் இந்தக் கலியாணத்துக்கு நான் சம்மதிக்க முடியும்'னு மாப்பிள்ளைப் பையனே ஒத்தக் காலில் நிற்கிறானாம்' என்று அதையே மாற்றிச் சொல்வார் கண்ணாயிரம். காரியம் ஆவதற்கு எதை வேண்டுமானாலும் செய்யக் கூடியவர் அவர். புகழுக்காகவும் பணத்துக்காகவும் மானத்தையும் இழக்கலாம் என்ற எண்ணமும் செயலும் உடையவர்தான் கண்ணாயிரம். அம்மாவின் மிரட்டலுக்குப் பயந்து கீழே வந்திருப்பவர்களைப் பார்ப்பதற்காகப் படி இறங்கிக்கொண்டிருந்தபோது கோவிலில் கிளிக் கூட்டு மண்டபத்துக்குள் அடைபட்டிருந்த அந்தப் பஞ்ச வர்ணக் கிளியின் ஞாபகம் வந்தது மோகினிக்கு. அதையும் விடத் தன் நிலைமை இன்னும் மோசம் என்பதை உணர்ந்து பெருமூச்சு விட்டாள் அவள். கீழே இறங்கிக் கூடத்துக்குப் போனதும் அம்மா அங்கு வந்து காத்திருந்தவரை விட்டுக் கொடுக்காமல் தன் தேர்ந்த சாமர்த்தியத்தைப் பயன்படுத்திச் சாகஸமாகப் பேசினாள்:

''கோயிலுக்குப் போயிட்டு வந்த பொண்ணு மாடியிலே போய்த் தலைவலின்னு சுருண்டு படுத்திருந்துச்சு. நான் போய்ச் சொன்னேனோ இல்லியோ? 'அப்படியா? தேடி வந்தவங்களைப் பார்க்காம அனுப்பறது வழிமொறையில்லே'ன்னு தலைவலியோட எழுந்து வந்திருக்கு...''

அம்மாவும் கண்ணாயிரமும் பச்சைப் பொய்களை வந்திருந்தவருக்கு முன்னால் தாராளமாக வாரி வழங்கினார்கள். கேட்கக் கேட்க மோகினி மனம் கொதித்தாள்; வயிறெரிந்தாள். தாம் ஏதோ மிகவும் செல்லமாகவும் உரிமையோடும் கூப்பிடப் பாத்தியப்பட்டவரைப் போல் கண்ணாயிரம் அவளுடைய பேரைச் சுருக்கி, ''என்ன மோகி! நம்ப... இவர் இருக்காரே... (வந்திருந்த சரிகை அங்க வஸ்திரப் பிரமுகரைச் சுட்டிக் காட்டி) ரொம்பப் பெரிய கலா ரசிகர். பத்து லட்ச ரூபாய் முதலீடு பண்ணி முழுக்க முழுக்க டான்ஸே வருகிறாற்போல ஒரு கலர் சினிமாப் படம் எடுக்கணும்னு இவாளுக்கு ஒரு நெனைப்பிருக்கு. அப்பிடி எடுத்தா நீதான் அந்தப் படத்திலே ஹீரோயின்!'' என்று குழைந்தார். சரிகை அங்கவஸ்திரம் அசடு வழியச் சிரித்துக் கொண்டிருந்தது. மாமிசத்தைக் கொத்திக் கொண்டு போகிற கழுகுப் பார்வை, மரத்தூணில் புடவையைச் சுற்றி வைத்துவிட்டு எதிரே ஒரு நாற்காலியைப் போட்டு உட்காரச் சொன்னால் உட்கார்ந்து மூன்று நாள் வாய் திறந்து வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கத் தயாராயிருக்கிற அளவுக்குச் சரியான பெண் பித்தனைக் கள்ளனாயிருப்பான் போலிருந்தது. இரண்டு நிமிஷம் நின்றுவிட்டு அம்மாவின் வார்த்தைகளையே மெய்யாக்குகிறவளாய்த் ''தலை வலி ரொம்ப அதிகமாயிருக்கு...... நான் வரேன்'' என்று நடைப் பிணமாய் மாடிக்குத் திரும்பினாள் மோகினி. திரும்பினவள் அறைக் கதவைத் தாழிட்டுக் கொண்டு மாடப் பிறையில் கிடந்த பழைய டைரி ஒன்றிலிருந்து அரைத் தாளைக் கிழித்துப் பென்சிலால் அதில் ஏதோ எழுதலானாள். அப்போது அந்தக் காரியத்தைச் செய்யாவிட்டால் அவளுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போல் இருந்தது.


சில வாழைத் தோட்டங்களில் வாழைக் காய்க் குலை முற்றியவுடன் தாறு வெட்டிக் காய்களைச் சுற்றி வேப்பிலைக் கொத்துக்களால் மூடிக் களிமண்ணால் மூட்டம் போட்டுச் சூடும் வெம்மையும் உண்டாக்கிப் பழுக்கச் செய்வார்கள். அதைப் போல் அந்த வீட்டின் கசப்பிலும் வெம்மையிலும் அவள் மனம் பழுத்து இனிமை கண்டிருந்தது. கசப்பான அனுபவங்களிலும் வெம்மையான சூழ்நிலைகளிலும் வெந்து தவித்துக் கொண்டிருந்தவளுக்குக் கிடைத்த ஒரே ஒரு நல்ல ஞாபகம் சத்தியமூர்த்தியாயிருந்தான். அன்றிரவு மோகினி அந்தப் பென்சிலையும் காகிதத்தையும் வைத்துக் கொண்டு நீண்ட நேரமாகப் போராடும் மனத்தோடு இருந்தாள். படுக்கையில் விழுந்து குமுறிக் குமுறி அழுதாள். வாழ விரும்பாத போதும் வாழ்க்கையையே ஒரு கனமான சுமையாக உணரும்போதும் சாவது கூடச் சுகமான காரியமாயிருக்கும்போல் தோன்றியது. கசப்புக்கும் வெம்மைக்கும் அப்பால் வாழ்க்கையின் இனிமைகள் பழுக்கலாம். ஆனால் அவளுடைய வாழ்க்கையில் இனிமை பழுக்கவே யில்லை. யாரோ ஒரு சத்தியமான மனிதனுடைய நல்ல கைகள்


இந்த வாரத்துப் 'பொன்விலங்கு' தொடர்கதையில் வரும் ஒரு காட்சியை இவ்விதழ் அட்டைப்படமாக ஓவியர் விஜயா வழங்கியிருக்கிறார்.

சாவிலிருந்து தன்னைக் காப்பாற்றிய ஞாபகத்தை மதிப்பதற்காக வாழ வேண்டுமென்றுதான் அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள். நீண்ட நாழிகை அழுத பின்பு அந்தக் காகிதத்தில் பென்சிலால் எழுதியதை ஒரு பழைய உறையில் இட்டு நன்றாக ஒட்டி மேலே யும் பென்சிலால் ஏதோ எழுதினாள். வரவு செலவு பணம் காசு எல்லாம் அம்மா கையில்தான். ஸ்டாம்புக்குக் காசு வேண்டும். விடிந்ததும் அம்மா விடம் என்ன சொல்லி எப்படிக் காசு கேட்பது? ஸ்டாம்ப் ஒட்டின கடி தத்தை விட ஸ்டாம்ப் ஒட்டாத கடி தம் கண்டிப்பாகப் போய்ச் சேரும் என்று அவளுக்குத் தெரியும். விடியற் காலையில் மூன்றரை மணிக்குத் தெருக் கதவைத் திறந்து கொண்டு சந்தின் கோடியில் இருந்த பொதுத் தபால் பெட்டியில் அதைக் கொண்டு போய்ச் சேர்த்தபோதே அறுபது எழுபது மைலுக்கு அப்பால் இருக்கும் மலை நாட்டு நகரத்தில் தன்னுடைய தெய் வம் அதைக் கையில் வாங்கிப் பிரித் துப் படிப்பது போல் கற்பனை செய்து பார்த்துக் கொண்டாள் மோகினி. மாணவ மாணவிகள் புடைசூழ அந் தத் தெய்வம் கல்லூரிக்குள் நடந்து போவது போலவும், திரும்பி வருவது போலவும், தன்னுடைய தப்புத் தப் பாக எழுதிய பென்சில் எழுத்துக் கடி தத்தை வாங்குவது போலவும் கற்பனை யில் நினைப்பதே சுகமான அநுபவமாக இருந்தது அவளுக்கு. அன்றைய வாழ்க் கையில் ஏதோ போதுமான பெரிய காரியத்தைச் செய்தது போன்ற திருப் தியை அடைந்திருந்தாள் அவள்.

காலையில் எழுந்ததும் அம்மா வேறு ஒரு செய்தியைச் சொன்னாள். "கண்ணா யிரம் யாரோ பத்திரிகைக்காரங்களைக் கூட்டிக்கிட்டு வரேன்னிருக்காரு. உன் படத்தையும் போட்டு ஏதோ பேட் டியோ, போட்டியோ — வெளியிடப் போறாங்களாம்.... குளிச்சு நல்லா டிரஸ் பண்ணிக்கோ. பளிச்சுன்னு தெரியறாப்பலே இரு. அழுது வடி யாதே. படம், கிடம் பிடிச்சாலும் பிடிப்பாங்க...."

'இந்த வீட்டுக்கு யாரையாவது கூட் பிட்டுக் கொண்டு வருவதும் போவதும் வெற்றிலை பாக்குப் போடுவதுமாக வாழா விட்டால் கண்ணாயிரத்துக்குத் தலை வெடித்துப் போய்விடுமோ?' என் றெண்ணி மோகினி மனம் குமுறி னாள். அப்படி எண்ணிக் குமுறுவ தைத் தவிர வேறென்ன செய்ய முடியும் அவளால்? (தொடரும்)





ஆச்சரியம்!


ஆனால் உண்மை!

போல்ட்,

ரிவெட்,

வெல்டிங் தேவையில்லை!

ஒன்றோடு ஒன்று சேர்த்து இணையும் முன்கூட்டித் தயாரித்த பாடி



உடையும், நகைகளும் அதை அணிந்து கொண்டிருக்கும் பாணியும் உங்களுக்கு மிகவும் பழக்கமான எதையோ நினைவுபடுத்துகிறதல்லவா? நமது அண்டை நாடான இலங்கையிலுள்ள 'கண்டி' மாகாணத்தைச் சேர்ந்த பெண்தான் இவள். உங்கள் ! ஆல்பத்துக்காகவே அலங்காரமாக நிற்கிறாள்.

காட்டுக்குள்ளே


மலாயா டாபிர்



இது நீங்கள் சாப்பிடும் 'டாபி' இல்லை! 'டாபிர்' என்பது ஒரு வகைப் பிராணி. பன்றி யானையாக ஆசைப்பட்டு வளர ஆரம்பித்துப் பாதியில் நின்று போனது போல் இருக்கும் இதன் தோற்றம். மலாயா வாசிகள் இதைப் பற்றி ஒரு கதை கூறுகிறார்கள். ஆண்டவன் எல்லா மிருகங்களையும் படைத்தானபின் கொஞ்சம் களி மண் கையில் பாக்கி இருந்ததாம். அதை வீணாக்க மனமில்லாமல் இந்த டாபிரின் நீண்ட மூக்காக வைத்து விட்டானாம்!

மிருகங்களிலேயே மிகப் பழமையான காலம் தொட்டு வாழ்ந்து வருபவை இந்த டாபிர்கள். இவைகளில் பல வகைகள் இருக்கின்றன. தென் மத்திய, அமெரிக்காவிலும் மலாயாவிலும் இதன் இனங்கள் வாழுகின்றன. அறுநூறு பவுண்டு நிறையுடைய டாபிர்களும் இருக்கின்றன. நீங்கள் மேலே காண்பது மலாயாவில் வாழும் டாபிர். ஏதோ சட்டை போட்டுக் கொண்டிருப்பது போல் இருக்கிறதல்லவா? டாபிர்கள் பார்வைக்கு விநோதமான பிராணிகள். யானைத் துதிக்கை போன்ற மூக்கும் தலை, தோள், கால்களும் கருஞ்சிவப்பான நிறத்துடனும் உடலின் பின்பாகமும், வயிறும் பழுத்த வெளுப்பாகவும் இருக்கும். இந்த நிற விநோதம் மலாயாவில் வாழும் டாபிர்களுக்குத்தான். அமெரிக்க டாபிர்கள் கறுப்பாகவோ, வெந்த கறுப்பாகவோ இருக்கும். இதன் உயரம் மூன்றரை அடி. குட்டி டாபிர்கள் வரிக் குதிரையைப் போல உடலின் குறுக்கே நீள வாட்டத்தில் பழுத்த மஞ்சள் நிறக் கோடுகளோடு காணப்படும்.

காடுகளில் நதியோரங்களில் வசிக்கும் இது. நீரில் மூழ்கி விளையாடி, சேற்றில் புரளுவதில் இதற்கு ரொம்ப ஆனந்தம். வேகமாக இயங்கக் கூடிய பிராணியல்ல. தாக்கும் சுபாவமும் இதற்குக் கிடையாது. மிகவும் சங்கோஜப் பிராணி இது. ஆனால் தற்காப்புக்காக எதிரியைக் கீழே தள்ளிக் கடிக்க முயற்சி செய்யும். இதன் ஆகாரம்; இலை, புல், நீர்த் தாவரங்கள், உலர்ந்த பழங்கள் முதலியவை. இதன் இறைச்சி சுவையற்றதாக இருப்பதால் இதை மலாயாக் காரர்கள் உணவுக்காகக் கொல்லுவதில்லை. இதன் விரோதி புலிகள்.



செய்து பாருங்கள்

காகிதக் கிண்ணத்தில் கொதிக்கும் நீர்

நல்ல கெட்டியான காகிதத்தை எடுத்துக் கொண்டு தோன்றும் தைப்பதைப் போலக் குண்டூசியின் உதவியால் ஒரு தொட்டி செய்து கொள்ளுங்கள். இனி அதில் முக்கால் பாகத்துக்கு மேல் குளிர்ந்த நீரை நிரப்புங்கள். காகிதம் கிழிந்து போகாதபடி இவைகளைச் செய்ய வேண்டும். இனி ஸ்டவ்வை நிதானமாக் எரிய விட்டு அதன் மீது இந்தக் காகிதத் தொட்டி நீரைத் தூக்கிப் பிடித்துக் கொள்ளுங்கள். காகிதத்தை ஸ்டவ் ஜ்வாலை எரித்துச் சாம்பலாக்கி விடும் என்றுதானே நினைப்பீர்கள். ஆனால் அதுதான் இல்லை. காகிதத் தொட்டியிலுள்ள நீர் சூடேறிக் கொதிக்க ஆரம்பிக்கும் அதிசயத்தைக் கண்டு வியந்து போவீர்கள். இது எப்படி? காகிதம் எரிய அதில் அந்த நிலைக்குச் சூடு ஏற வேண்டும். ஆனால் அதில் ஏறும் உஷ்ணத்தை எல்லாம் தண்ணீர் எடுத்துக் கொண்டு தான் கொதிக்க ஆரம்பித்து விடுகிறது. இதுதான் ரகசியம்.



உலகத்தின் கதை-8

மனிதன் தோன்றினான் !

உலகத்து வடகோடியின் வாட்டி எடுக்கும் குளிரைத் தாங்க மாட்டாமல் 'மம்மத்' என்ற அந்தக் காலத்து யானைகள் பனி மூடிய சைபீரியப் பாலைவனத்தில் அலையலாயின. அடர்ந்து வளர்ந்து தொங்கிய அதன் ரோமத்தினால்கூட அந்தக் கடும் குளிரைச் சமாளிக்க முடிய வில்லை. அவைகளின் பூத உடல் பனியில் புதையுண்டன.

இதே போன்று குகைகளில் வாழ்ந்த கரடிகளும், கழுதைப் புலிகளும் உறைபனியின் கொடுமை தாங்க மாட்டாமல் பூமியின் மத்திய பாகத்தை நோக்கி ஓடலாயின. கலை மான்கள் கூட்டம் கூட்டமாக மேய்ச்சல் நிலங்களை நாடிக் கிளம்பின. வடக்கிலுள்ள புல்வெளிகள் பனிப் போர்வையைக் கழற்றிய போது மறுபடியும் அவை வடக்கே திரும்பின.

தென் பகுதியிலோ காண்டாமிருகம், நீர்யானை, யானைகள் முதலியன உஷ்ணப் பிரதேசக் காடுகளைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்டு வாழலாயின. குகையிலிருந்து சிங்கம் கம்பீரமாக வெளிப்பட்டுத் தன் மனைவியோடு வேட்டையாடக் கிளம்பியது. மிருகங்கள்தான் இந்தக் காலத்து உலகின் பிரஜைகளாக இருந்தன. இன்னமும் மனிதன் தோன்றவில்லை. இந்தப் பூமி மிருகங்களின் உடைமையாக இருந்த காலம் அது.

ஆனால் இவை அதிக நாள் நீடிக்க வில்லை. இயற்கை ஓர் அதிசயத்தை ஏற்படுத்தியது. ஒரு நாள் யானைகள் தங்கள் துதிக்கையை உயரத் தூக்கிக் காற்றை மோப்பம் பிடித்தன. ஏதோ ஒரு விநோதமான மிருகத்தின் புது மணத்தை அதன் துதிக்கை உணரலாயிற்று. யானைக்கு மட்டுமா இந்தப் புதிய அனுபவம் ஏற்பட்டது? இல்லை.

தங்களை ஒத்த ஆனால் உருவத்தில் தங்களை விடப் பெரிய ஜந்துக்கள் இரண்டு காலால் நிமிர்ந்து கைகளை வீசியபடி நடந்து செல்வதைக் குரங்குகள் மரத்தின் பின்னால் ஒளிந்திருந்து காணலாயின. இப்படி எல்லா மிருகங்களின் கவனத்தையும் கவரும்படியான அந்தப் புதிய ஜீவன் வேறு யாருமல்ல. மனிதன்தான். ஆடையே இல்லாத ஆதி மனிதன் உணவு தேடி உஷ்ணப் புல்வெளியை நோக்கி நடக்கலானான். மம்மல்களின் யுகத்தில் முன்னங் கால்களைக் கைகளாகக்கொண்டு நிமிர்ந்து நிற்கும் சிந்திக்கும் திறன் படைத்த ஜீவன்கள் தோன்றலாயின. மனிதக் குரங்குகளைப் போலவே ஆனால் அவைகளுக்கு இல்லாத பேசும் திறன் ஞாபக சக்தி இரண்டையும் கொண்ட ஒரு புதிய உயிர் தோன்றியது. மனிதன் தோன்றி விட்டான். மிருகங்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. காலப் போக்கில் அவன் தோற்றத்தில் உடலமைப்பில் பழக்க வழக்கங்களில் மாறுதல்கள் தோன்றலாயின. வெட்ட வெளியில் வாழ்ந்தவன் வெயில், மழை, பனி இவைகளிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள, குகையை நோக்கி ஓடினான். குகை வாழ் மனிதன் குடிசை வாழ் மனிதனாகி நகரங்கள் அமைத்து நாகரீகத்தை வளர்த்த கதை இருக்கிறதே, அது மிகப் பெரியது. அது மனிதனின் கதை. அதைப் பற்றித் தனியாகத்தான் சொல்ல வேண்டும். உலகம் தோன்றிய கதையை அதில் மனிதனின் தோற்றம் வரை உங்களுக்குச் சுருக்கமாகச் சொல்லி விட்டேன். இன்னும் விளக்கமாக நீங்கள் கல்லூரிக்குச் செல்லும் போது படிக்கப் போகிறீர்கள்.






பட்டினத்தார்

மறக்க முடியாத திரைப்படங்கள்

காதல் காட்சிகள் இல்லாமல், பிரமாதமான ஹாஸ்யவிருந்து இல்லாமல், ஒரு நடனக் காட்சிகூட இல்லாமல் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ரசிகப் பெருமக்களின் பேராதரவுடன் ஒரு தமிழ்ப் படம் அமோகமாக ஓடியது என்றால் யாரும் நம்ப மாட்டார்கள். ஆனால் நான் கூறுவது முற்றிலும் உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை!

இசைப் பேரறிஞர் திரு எம். எம். தண்டபாணி தேசிகர் பாடி, நடித்து, சென்னையில் பல மாதங்கள் தொடர்ந்து ஓடியது வேல் பிக்சர்ஸ் 'பட்டினத்தார்' படம்.

காவிரிப் பூம்பட்டினத்தில், குபேர சம்பத்துடன் வாழ்ந்திருந்த திருவெண்காடர் என்னும் சிவநேசச் செல்வர் ஆலமுண்ட நீலகண்டனையே அருமை மகனாக அடைந்து அவன் அருளால் அருட்செல்வம் பெற்று, பொருட்செல்வம் அனைத்தையும் துறந்து பட்டினத்தாரென்னும் சிறப்புப் பெயருடன் ஞானப் பெருமகனாக விளங்கி அருட்பெருஞ் சோதியுடன் கலந்த வரலாறு எல்லாருக்கும் தெரிந்ததுதான்.



''பட்டினத்தார்'' படத்தைப் பற்றிய அனுபவத்தைத் திரு தேசிகரிடம் கேட்கலாம் என்று அவரிடம் போனேன்.

அந்தக் காலத்தில் நடந்த படப் பிடிப்பு அனுபவத்தைப் பற்றிக் கூறும் முன் திரு தேசிகர் சற்று நேரம் மௌனமாயிருந்தார்.

'''பட்டினத்தார்' படத்தில் நீங்கள் நடிக்க நேர்ந்தது எப்படி?'' என்று ஒரு கேள்வியைப் போட்டு அவரை நினைவுக்குக் கொண்டு வந்தேன்.

''அது ஒரு கதை. 1934ம் ஆண்டு நிகழ்ந்த சம்பவம் அது. அப்பொழுது நான் மதுரையில் தேவார இசைப் பள்ளி நடத்தி வந்தேன். பல மாணவர்கள் பக்தியோடு தேவாரம் பயின்று வந்தனர். ஒரு நாள் பகல் ஒரு மணி இருக்கும். நான் சற்றுக் கண்ணயர்ந்திருந்தேன். அப்பொழுது சென்னையிலிருந்து யாரோ இருவர் என்னைப் பார்க்க வந்திருப்பதாகக் கூறி என்னை எழுப்பினான் ஒரு மாணவன். நான் எழுந்து வந்து அவர்கள் இருவரையும் வரவேற்று அமரச் செய்தேன். என்னைக் கண்டதும் முக மலர்ச்சியோடு இருவரும் வணக்கம் செலுத்தினர். அவர்கள் இருவரும் மிகவும் ஆவலோடு தேவாரப் பாடல்களை நான் பாட வேண்டும் என்று விரும்பினர். நான் மறுப்புக் கூறாமல் தேவாரப் பாடல்களைப் பாடிக் காட்டினேன். வெகு நேரம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்து விட்டுச் சென்னைக்குப் புறப்பட்டனர். அவர்களில் ஒருவர் வேல் பிக்சர்ஸ் ஸ்டுடியோவின் உரிமையாளரான திரு எம். டி. ராஜன்; இன்னொருவர் மேற்படி ஸ்டுடியோவில் டைரக்டராக இருக்கும் டி. சி. வடிவேல் நாயக்கர் என்று தெரிந்து கொண்டேன். 'பட்டினத்தார்' படத்தில் நடிப்பதற்கு என்னை இருவரும் வற்புறுத்தினர். நானும் ஒப்புக் கொண்டேன். அடிகளின்பால் எனக்கு என்றுமே ஓர் ஈடுபாடு இருந்து கொண்டிருந்ததால் படத்தில் நடிக்க இசைந்தேன். பாடலுடன் கூடிய ஒரு காட்சியைப் படம் பிடித்துத் தியேட்டரில் போட்டுப் பார்த்துத் திருப்தியடைந்தார்கள். அதன் பிறகுதான் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. எனக்கு அவர்கள் கொடுக்க இசைந்த தொகை எவ்வளவு தெரியுமா? ரூபாய் தொள்ளாயிரம்! என்ன அசந்து போய்விட்டீர்கள்? அந்தக் காலத்தில் அது பெரியதொகை இல்லையா?'' என்று கேட்டார் தேசிகர்.

''உண்மைதான்'' என்று ஒப்புக் கொண்டேன்.

''இன்றைய சினிமாப் பாடல்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

தவறி விழுந்து காலில் எலும்பு முறிவு உண்டாகி வேதனை அடைந்து வந்ததையும் பொருட்படுத்தாமல் தேசிகர் நிமிர்ந்து உட்கார்ந்தார். வேகத்தோடு பேசினார்: ''விசனிக்க வேண்டிய நிலையில் இருப்பதாய்க் கருதுகிறேன். சாகித்தியங்கள், இசை அமைப்பு இரண்டும் மோசமாகி வருகின்றன. 'மக்கள் விரும்புகிறார்கள்' என்று கூறுவதை ஒப்புக் கொள்வதற்கில்லை. அந்நாளைய திரைப் படங்களில் கேட்ட தூய கர்நாடக சங்கீதத்தை எத்தனை ஆயிரம் மக்கள் வாய் விட்டுப் பாடி மகிழ்ந்தார்கள்! இல்லை என்று கூறிவிட முடியுமா?''

இன்றைய சினிமா சாகித்தியங்கள் பல வற்றில் ஆபாசமான தொனிப் பொருள்கள் விரவிக் கிடப்பதைக் கண்டித்தார் தேசிகர். மக்களின் சங்கீத ரசனையைக் கெடுத்து வரு கிறார்கள் என்பதற்கு ஆதாரமாக ஓர் அனுப வத்தைக் குறிப்பிட்டார்.



ஏதோ காரியமாக இளம் நண்பர் ஒருவரைக் காணச் செல்கையில் தனம்மாளைப் பற்றிப் பேச்சு வந்தது.

"எந்தத் தனம்மாள்?" என்று வினவிய நண்பர் திடீரென்று நினைவுக்கு வந்தவர் போல, "ஓ. எஸ்! தனம்மாள்! ஐஸீ! தனம்மாள்!" என்றபடியே நாகஸ்வரம் ஊதுவதுபோல் தமது இரு கரங்களாலும் சைகை காட்டினாராம்.

"எனக்குச் சிரிப்பு வரவில்லை; ரொம்பவும் துக்கமாக இருந்தது" என்றார் தேசிகர்.

தேசிகர் கூறுவதில் உள்ள உண்மைகளை நம் படாதிபதிகள் நன்கு சிந்தித்துப் பார்த்து உணர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவெண்காடரின் மனைவி சிவகலையாக நடித்த டி. ஆர். முத்துலக்ஷ்மி திருநீறும், குங்குமப் பொட்டும் துலங்கப் பதிக்கேற்ற பத்தினியாகத் தோன்றி, "தாண்டவம்புரி கூடலம்பதி சம்புவே சிவ சங்கரா" என்று பாடிச் சிவபெருமானைப் பிரார்த்தித்தது இன்னும் என் நெஞ்சை நெகிழச் செய்கிறது.

காலஞ் சென்ற பி. ஜி. வெங்கடேசன் என்ற நடிகர் அற்புத சாரீரத்துடன் அழகாகப் பாடும் திறன் வாய்ந்தவர். அவர் பாட்டைக் கேட்டால் வடநாட்டு ஸைகாலின் நினைவு வரும். அவர் பண்டாரமாக வந்து, உருக்கமாகப் பாடி ரசிகர்களின் உள்ளங்களில் இடம் பிடித்துக் கொண்டு விட்டார்.

திருவெண்காடரின் தாயார் ஞான கலாம்பையாக வந்தது ஜெயலக்ஷ்மி. வேஷப் பொருத்தம் தத்ரூபமாயிருந்தது. திருவெண்காடரின் மகன் மருதவாணனாக வந்து அவரது அகக் கண்களைத் திறந்து வைத்தவர் மாஸ்டர் வி.என். சுந்தரம். டைரக்டர் டி.சி. வடிவேல் நாயக்கரின் திறமை படம் முழுவதும் பரிமளித்தது.


திருவெண்காடரே திருவாய் மலர்ந்தருளிய பாடல்கள் அதியற்புதமானவை. தண்டபாணி தேசிகர் அப்பாடல்களுக்கு மெருகேற்றிப் பாடித் தமிழ்கூறும் நல்லுலகமெல்லாம் கவர்ந்து விட்டார்.

பெருந் தனவந்தராக விளங்கிய திருவெண்காடர் அகக் கண் திறக்கப் பெற்று அனைத்தையும் துறந்து வீட்டை விட்டு வெளியேறிய காட்சி எல்லாரையும் பரவசப்படுத்தி விட்டது; அன்னையின் சடலத்துக்குத் தீ மூட்டிய காட்சி கண்ணீர் வடிக்கச் செய்தது. விஷமிட்டுக் கொல்ல முயன்ற தமக்கையின் இல்லத்துக்கு, "தன்வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்" என்ற வாக்குடன், தீ மூட்டிய காட்சி மிகவும் நன்றாயிருந்தது. "வாளால் மகவு அரிந்து ஊட்ட வல்லேனல்லன்" என்ற பாடலை விளக்கும் காட்சி அருமையாகப் படமாக்கப்பட்டிருந்தது. 'ஒரு மடமாதும் ஒருவனுமாகி'' என்ற பாடலின் விளக்கமும் காட்சி ரூபமாகக் காட்டப்பட்டது அருமையாயிருந்தது.

திருவொற்றியூரில் பட்டினத்தார் சமாதியாகும் கட்டம் யாருமே மறக்க முடியாதபடி அமைந்து விட்டது. துணி வெளுக்கும் சாலுக்குள் புகுந்து வேறிடங்களில் மாறி மாறி வெளிப்பட்டுச் சிறுவர்களுடன் விளையாடுகிறார்; கடைசியில் சாலுக்குள் சமாதியடைந்து சிவலிங்கவடிவம் பெற்று விடுகிறார். அந்தச் சந்தர்ப்பத்தில், சால் தானாகவே மேலே எழுவதையும், சாலுக்குள்ளிருந்த பட்டினத்தார் சிவலிங்கமாகவும், சிவகலை ஒரு வில்வமரமாகவும் மாறும் காட்சியையும் எல்லாரும் வியந்து பாராட்டினர்.

பட்டினத்தார் 'ஷூட்டிங்' நடந்ததைப் பற்றி அதிகமாக ஏதும் ஞாபகமில்லை என்று தேசிகர் கூறிய போதிலும் அந்தப் படத்தைப் பார்த்திருக்கும் என்னால் இன்றுவரை அதை மறக்கவே முடியவில்லை. ஒவ்வொரு காட்சியையும் இன்றும் என் மனத் திரையில் காண்கிறேன். ஒரு படத்தின் சிறப்புக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?

- விஜயம்







அத்தியாயம் பத்தொன்பது

'கவலை வேண்டாம்!'

பழையாறைச் சோழரா அவர்? நம்பவே முடியவில்லையே! அவருடைய பழைய கம்பீரக் களை பொருந்திய தோற்றத்துக்கும் இப்போதைய நிலைக்கும் தான் எவ்வளவு வித்தியாசம்! இளைத்துக் கறுத்துக் குரூரமே வடிவாக மாறிப் போய் விட்டிருக்கிறாரே!

அன்று எரித்த வெயிலையெல்லாம் தம் தலையில் தாங்கிக்கொண்டு எங்கெங்கோ சுற்றியலைந்தவர்போல் கருகிக் காய்ந்து வந்துகொண்டிருந்த அவர், பெருவளநல்லூர் சிற்றாற்றங் கரையோரமாகத் தமது இல்லத்தை நோக்கித் தயங்கித் தயங்கி நடந்துகொண்டிருந்த பரவாதி மல்லரைப் பார்த்து வியப்புற்றவராய் நின்று. ஒரு கண யோசனைக்குப் பின் அவரைப் பின்தொடர்ந்து விரைந்து போய், ''கலைஞர் அவர்கள் இன்னமும் இந்த ஊரை விட்டுப் புறப்படவில்லையா? நேற்றுக் காலையே காஞ்சிக்கு அண்மையில் உள்ள திருப்பருத்திக் குன்றத்துக்குப் பயணமாகப் போவதாகச் சொன்னீர்களே!'' என்று வறண்ட குரலில் மெல்லச் சிரித்துக் கேட்டுக்கொண்டே அவரெதிரில் சென்று நின்றார்.

கவலையே உருவாகத் தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்த பரவாதிமல்லர் திடுமெனத் தலைதூக்கி, ''ஓ, நீங்களா?.... வாருங்கள் நண்பரே!'' என்றார் கலவரம் கலந்த புன்னகையுடன்.

அந்த ஆற்றங்கரையோரம் நீரோட்டத்தால் வேர் பறிந்து சாய்ந்து நின்ற ஒரு வெண்ணாவல் மரத்தடியில் சோர்வுடன் பெருமூச்சு விட்டு அமர்ந்த பழையாறைச் சோழர் தாம் கேட்ட கேள்விக்குப் பதிலை எதிர்பார்ப்பவர் போல் பரவாதிமல்லரின் முகத்தை ஏறிட்டு நோக்கினார்.

''நேற்று விடியற்சாமப் போதில் நாம் இருவரும் நமது நிலவறையில் தங்கிப் பேசிக்கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டபோது, நேரே திருப்பருத்திக் குன்றத்துக்குப் பயணமாகி விட வேண்டும் என்றுதான் திட்டமிட்டேன். தங்களிடமும் அவ்வாறே சொல்லி விடைபெற்றுச் சென்றேன். ஆனால் அந்தத் திட்டப்படி செல்ல முடியாதவாறு ஒரு சிறு தடங்கல் ஏற்பட்டு விட்டது....'' என்று தணிந்த குரலில் கூறிக்கொண்டே அவரருகில் வந்து அமர்ந்தார் பரவாதிமல்லர்.

ரத்தினக் கோட்டம்

ஜெகசிற்பியன்

இதைக் கேட்டுக் கலக்கமடைந்தவர்போல் புருவங்களை நெரித்துக் கொண்டு நிமிர்ந்த பழையாறைச் சோழர், ''தடங்கலா? என்ன தடங்கல்?.... ஓ, அந்த நிலவறைக் கதவை நாம் சாத்தாமல் மறந்து வந்து விட்டதை நடு வழியில் நினைத்துக்கொண்டு திரும்பி விட்டீர்களா? உங்களை அனுப்பியபின் எனக்கும் அந்த நினைவு வரவே, ஓடிப் போய் அவ்வறைக் கதவை நன்றாக இழுத்துத் தாழிட்டுவிட்டு அப்புறம்தான் வெளியே புறப்பட்டேன்!'' என்றார் இளநகையுடன்.

''இல்லை, அன்பரே! அதற்காக நான் வரவில்லை!'' என்று தயக்கத்துடன் சொன்ன பரவாதிமல்லர் ஒரு விநாடி மௌனமாயிருந்து விட்டுப் பின் மெல்லத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு கேட்டார்: ''பெருவளநல்லூருக்கும் ஆலம்பாக்கத்துக்குமிடையே ஆதுர சாலையொன்று இருக்கிறதே. நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?''

''திரமிள சமண சங்கத்தார் நடத்தும் ஆதுர சாலைதானே? அந்தச் சங்கத்தின் தலைவர் சமந்தபத்திரரைப் பற்றியும் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்!''

''சளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனுக்கு அந்தச் சமண முனிவரும் அவரது சகாக்களும் ஆதரவு தரவேண்டும் என்று வில்வேலி கேட்டுக் கொண்டதற்கு அவர் ஒப்புதல் அளிக்கவில்லை என்னும் விவரத்தை மட்டுமே நீங்கள் அறிந்திருப்பீர்கள், இல்லையா?''

''ஆமாம். அதற்கு மேலும் விவரம் உள்ளதா?''

''இருக்கிறது, நண்பரே! கங்க நாட்டுச் சிரவண பெள்குளத்துச் சமண சங்கத் தலைவரான அகளங்க அடிகள் என்பவரை இங்கே விஜயம் செய்யுமாறு சளுக்கிய விக்கிரமாதித்தன் அழைப்பு விடுத்திருந்தான்......''

''அதாவது, ஆந்திர இளவரசி உத்தமசீலி எதற்காக இந்நாட்டுக்கு வரவழைக்கப்பட்டாளோ அதே காரணத்துக்கு அவரும் வரவழைக்கப்பட்டார் என்ற விஷயம்தானே? அந்தத் திட்டமெல்லாம் தவிடு பொடியாகிப் பல நாட்களாகி விட்டனவே!'' என்று அலட்சியமாகச் சொன்ன பழையாறைச் சோழர் அடித் தொண்டையில் மேலும் கூறினார்: ''உண்மைதான், கலைஞரே! பல்லவ நாட்டில் தனது ஆட்சியதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் பொருட்டுச் சமண சமயத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம் என்று கருதிச் சளுக்கிய விக்கிரமாதித்தன் அவ்வாறு திட்டமிட்டான். அந்தத் திட்டம், கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்க முயல்வது போன்றதென்று கூறி அவனது கவனத்தை நான்தான் வேறு திசையில் திருப்பி விட்டேன். அதாவது, பல்லவ நாட்டில் அவனுடைய ஆட்சி நிலைக்க வேண்டுமானால், பாண்டிய நாட்டின் மேல் போர் தொடுக்க வேண்டும் என்று யோசனை கூறினேன். நானே எதிர்பார்க்காத விதமாக அவன் அந்த யோசனையை ஏற்றுக்கொண்டு அதைச் செயல்படுத்தவும் முனைந்து விட்டான்.''

வியப்புடன் அவரை நிமிர்ந்து நோக்கிய பரவாதிமல்லர், ''அப்படியானால் நீங்கள் சளுக்கிய மன்னனை நேரில் சந்தித்தீர்களா?'' என்று இரகசியக் குரலில் கேட்டார்.

''இன்றுவரை அப்படியொரு சந்திப்புக்கு நான் இடம் வைத்துக் கொள்ளவில்லை. தளபதி வில்வேலியைக் கொண்டே என் நோக்கங்களை ஒவ்

"சுத்த கருமிடா நீ! ஆடை அணிகள் விஷயத்திலாவது நீ உன் அப்பாவைப் பின்பற்றக் கூடாது?"

"நன்றாகக் கேட்டியே! இப்போ நான் அணிந்து கொண்டிருக்கிற உடைகள் யாருடையது என்று நினைக்கிறே? சாக்ஷாத் எங்க அப்பாவினுடையதுதான்!".



வொன்றாக நிறைவேற்றி வருகிறேன்!" குறும்பாகக் கூறிப் பெரிதாக நகைத்தார் பழையாறைச் சோழர்.

சிறுபொழுது பேசாதிருந்த பரவாதிமல்லர், "அது சரி, நண்பரே! நான் சொல்ல வந்த விஷயம் இதுவல்ல...." என்று தயங்கியபடி இழுத்தார்.

"அகளங்க அடிகளைப் பற்றித் தானே? அவர் விஷயம்தான் முடிவாகி விட்டது என்கிறேனே! இன்னும் என்ன சொல்லப் போகிறீர்கள்?"

"நண்பர் எந்த முடிவைச் சொல்கிறார்?" என்று திருப்பிக் கேட்டார் சேதியக் கலைஞர்.

"ஸ்ரவண பெள்குளத்திலிருந்து வரவழைக்கப்பட்ட அகளங்க அடிகளை நடு வழியிலேயே மடக்கித் தீர்த்துக் கட்டிவிட வில்வேலிக்கு விக்கிரமாதித்தன் உத்தரவு இட்டுவிட்டுப் போனதைப் பற்றித்தானே கேட்கிறீர்கள்?"

"அவ்வாறே நடந்தும் விட்டது என்கிறீர்களா?"

"ஆமாம், கலைஞரே! காஞ்சிக் கோட்டையைக் காவல் காத்துக்கொண்டிருந்த சளுக்கிய இளவரசனைக்கொண்டு அந்தக் காரியத்தை நிறைவேற்றி விட்டதாக, வில்வேலியை நான் கடைசியாகச் சந்தித்தபோது சொன்னான்."

"நீங்களும் அதை நம்பி விட்டீர்களா ?"

"ஏன்?.... அப்படி நடக்க வில்லை என்று உங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறதா என்ன?"

"வில்வேலியும் விநயாதித்தனும் சேர்ந்து அந்தக் கொலை பாதகச் செயலை நிறைவேற்றத்தான் செய்தார்கள்; ஆனால், அவர்களுக்கே தெரியாமல் ஸ்ரவணபெள்குளத்துச் சமண சங்கத் தலைவர் உயிர் பிழைத்து விட்டார்!"

"உண்மைதானா, கலைஞரே?"

"முற்றிலும் உண்மை. அந்த அகளங்க அடிகள் உயிர் தப்பி இங்குள்ள திரமிள சமண சங்கத்தில் போய்ச் சேர்ந்தும் விட்டார்."

"பிறகு?...."

"இந்த விவரத்தைச் சளுக்கிய வில்வேலி அறிந்தால் மீண்டும் அதே கொலை முயற்சியில் இறங்கி விடுவான் என்று அறிந்த சமந்தபத்திரர், தமது ஆதுர சாலையையும் திரமிள சமணப் பள்ளியையும் மூடிவிட்டு, அகளங்க அடிகளையும் மற்றச் சமண முனிவர்களையும் அழைத்துக்கொண்டு அங்கிருந்து வெளியேறி விட்டார்."

"அவர்கள் எங்கே போவதாக உத்தேசம்?"

"தற்போதைக்குத் திருப்பருத்திக் குன்றத்தில் போய்த் தங்கியிருக்கலாம் என்று புறப்பட்டிருக்கிறார்கள்."

"சமந்தபத்திரரை நீங்கள் நேரில் சந்தித்தீர்களா?"

"நேற்று நான் பயணப்பட்ட வழியில் அவரைச் சந்திக்க நேர்ந்ததால் தான் இத்தனை விவரங்களும் எனக்குத் தெரிய வந்தன."

சற்று நேரம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்த பழையாறைச் சோழர், சட்டென்று தலை தூக்கி, "அது சரி, கலைஞரே! இந்த விஷயத்துக்கும், நீங்கள் திருப்பருத்திக் குன்றத்துக்குப் போகாமல் திரும்பி வந்ததற்கும் என்ன சம்பந்தம்? இதனால் உங்களுக்கு என்ன தடங்கல் ஏற்பட்டது?" என்று அவசரமாகக் கேட்டார்.

"சளுக்கிய விக்கிரமாதித்தனின் உத்தரவுப்படி வழிமறித்துத் தாக்கப்பட்ட அகளங்க அடிகள் உயிர் பிழைக்கக் காரணமாக இருந்தவர் நமது பல்லவ மன்னர் பரமேசுவரவர்மர்தானாம்! அவர்தான் அந்தச் சமணத் துறவியைக் காப்பாற்றிக் கொண்டு போய்த் திரமிள சமண சங்கத் தலைவரிடம் சேர்ப்பித்தாராம்!"

ஆச்சரியத்தால் கண்கள் அகல விரிய, "அப்படியா?" என்று அடைத்த குரலில் வினவிய பழையாறைச் சோழர், "பல்லவபுரம் இலவந்திகைப் பள்ளிக்குப் போன பரமேசுவரவர்மர் அங்கிருந்து தப்பி வந்து விட்டாரா? எனக்கும் தெரியாமல் வில்வேலி அவரைச் சிறைப் பிடித்து எங்கோ அடைத்து வைத்திருக்கிறான் என்றல்லவா இத்தனை நாட்களும் எண்ணிக் கொண்டிருக்கிறேன்!" என்று குமுறியவர் மீண்டும் கேட்டார்: "ஆமாம்; அதற்காக நீங்கள் ஏன் உங்கள் பயணத்தைத் தடைப் படுத்திக் கொண்டு திரும்பி விட்டீர்கள்?"

"பல்லவபுரத்துக்குப் போன பரமேசுவரவர்மர் அங்கிருந்து புறப்பட்டு



Negative Rights Controlled by; பாலகிருஷ்ணா பிலிம்ஸ், சென்னை-1

விட்டதால் அவர் எப்படியும் என் இல்லத்துக்குத்தானே வந்தாக வேண்டும்? எனவேதான்...'' என்று மலர்ந்த முகத்துடன் மெல்லிய குரலில் இழுத்தார் பரவாதிமல்லர்.

''ஓ!... உங்களுடைய இல்லம் சாத்திக் கிடப்பதால் அவர் வந்து பார்த்துவிட்டுத் திரும்பிப் போய் விடுவாரோ என்று பயந்து, நீங்களே அவரை வரவேற்க வந்துவிட்டீர்கள், அப்படித்தானே...?''

''ஆம், அன்பரே! முன்னேற்பாடாக என் இல்லத்தில் அவருக்குப் பழக்கப்பட்ட ஒரு சிறு கதவைத் தாழிடாமல் வெறுமனே சாத்தி வைத்திருக்கிறேன். என்றாலும், அதோடு திருப்திப்பட்டுக் கொண்டு போய்விட என் மனம் இடம் தரவில்லை....''

''அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம், கலைஞரே! அப்படி அவர் வந்தால் அவரைக் கவனித்துக்கொள்ளத்தான் கடந்த ஒரு வாரமாக நான் இங்கு பேயாகச் சுற்றிக் கொண்டிருக்கிறேனே!'' என்று கூறிக் கடகடவென நகைத்தார் பழையாறைச் சோழர்.

அத்தியாயம் இருபது

கொள்ளிப் பார்வை

சிறு பொழுது மௌனமாக இருந்த பரவாதிமல்லர் மெல்லத் தலை நிமிர்ந்து, ''நண்பரே! உங்கள் மகள் இளங்கோப்பிச்சி....'' என்று ஏதோ கேட்க வாய் திறந்தார்.

திடுக்குற்று எழுந்த பழையாறைச் சோழர், ''எங்கே?... எங்கே என் செல்வ மகள்?'' என்று ஆவல் செறிந்த அங்கலாய்ப்புடன் கேட்டுக்கொண்டே அங்குமிங்குமாகப் பார்த்தார்.

''இல்லை, அன்பரே! தங்கள் செல்வியின் விஷயம் என்ன ஆயிற்று, அவரைப் பற்றி ஏதேனும் தகவல் கிடைத்ததா என்றுதான் கேட்டேன்.''

பழையாறைச் சோழரின் முகம் வெளுத்தது. கண்கள் கலங்கி நீர் கோத்தன. ''என் அன்பு மகளின் பெயரைக் கேட்டதுமே அவள்தான் வந்துவிட்டாளோ என்று பரபரத்துப் போனேன்!... அவளைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் என் நெஞ்சம் இப்படித்தான் பேதலித்துவிடுகிறது!... இன்னும் சில நாட்கள் இதே கவலைகள் நீடித்தால் நான் மேற்கொண்ட காரியங்களையெல்லாம் அப்படியப்படியே விட்டு விட்டு எங்காவது போய்த் தற்கொலைதான் செய்துகொள்வேன் போல் தோன்றுகிறது!'' என்று துயரம் கப்பிய குரலில் முணுமுணுத்தார்.

மகளின் பிரிவாற்றாமையால் அவர் எவ்வளவு மனம் நொந்து வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறார் என்பதை நன்கு புரிந்துகொண்ட சேதியக் கலைஞர் ஏதும்பேசத்தோன்றாமல்மௌனமானார்.

''சோழ பூபதி அவர்களுக்கு வணக்கம்.''

கண் கலங்கித் தலை குனிந்திருந்த பழையாறைச் சோழர் சடாரென்று நிமிர்ந்தார்.

''சோழ இளவரசியார் நலமாக இருக்கிறார் அரசே!'' என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் குழறிக் கூறிக்கொண்டே அங்கு ஓடிவந்தான் அவரது ஆபத்துதவி வீரனான சம்புவராயன்.

தம் காதுகளையே நம்பாதவர்போல் ஒரு கணம் அலங்க மலங்க விழித்துப் பார்த்த பழையாறைச் சோழர், சட்டெனத் துள்ளி எழுந்து வான் நோக்கி அண்ணாந்தவாறு, ''இறைவனுக்கு நன்றி!'' என்று பரவச விம்மலுடன் கூறிக்கொண்டே நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார். பிறகு அவசரமாகத் திரும்பி, ''சம்புவராயா! என் மகளை எங்கே கண்டாய்? அவள் இப்போது எங்கே இருக்கிறாள்?'' என்று துடிப்பேறிய குரலில் வினவினார்.

''மதுரை அரண்மனையில் தங்கள் தமக்கையார் பாண்டிமா தேவியாரின் பாதுகாப்பிலே நம் இளவரசி இளங்கோப்பிச்சி இருந்து வருகிறார் அரசே!''

''ஓ! ... நான் நினைத்தபடியேதான் நடந்திருக்கிறது, இல்லையா கலைஞரே?'' என்று பரவாதிமல்லரின் பக்கம் திரும்பி சந்தோஷப் பெருமிதத்துடன் தலையாட்டினார் பழையாறைச் சோழர்.

''ஆமாம், அன்பரே! ஆலம்பாக்கம் அநந்தமதியின் இல்லத்திலிருந்து தங்கள் அருமைச் செல்வி காணாமற்போன சேதி கேட்டதுமே அவர் மதுரைக்குத்தான் போயிருப்பார் என்று என்னிடம் சொன்னீர்கள்; அந்த ஊகம் சரியாகவே ஆகிவிட்டது!'' என்று பரவாதிமல்லரும் மகிழ்ச்சிப் புன்னகையுடன் பதிலிறுத்தார்.

''அப்படி இல்லை, ஐயா! சோழ இளவரசியார் காணாமற் போன சேதியை நான் முதலில் வந்து தெரிவித்தபோது அவர் போயிருந்த இடம் வேறு; மீண்

டும் ஆலம்பாக்கத்துக்கே திரும்பி வந்து சேர்ந்த அவர், மறுநாள் இரவுதான் அநந்தமதியிடம்கூடச் சொல்லிக்கொள்ளாமல் மதுரைக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறார்....'' என்று சேதியக் கலைஞரைப் பார்த்துத் தயக்கத்துடன் சொன்னான் சம்புவராயன்.

அவன் சொன்னதைப் 'புரிந்து கொள்ள முடியாமல் இருவரும் அவனை ஏறிட்டு நோக்கினர். அதைப் புரிந்து கொண்ட சம்புவராயன் மேலும் கூறினான்: ''அந்த விஷயத்தை விளக்கிச் சொல்லுமுன் அதிமுக்கியமான இன்னொரு சேதியை அரசரவர்களிடம் தெரிவித்தாக வேண்டும்.''

''சீக்கிரம் சொல்!'' என்று அதட்டினார் பழையாறைச் சோழர்.

''தாங்கள் விரும்பியபடியே சளுக்கியருக்கும் பாண்டியருக்கும் நெல்வேலி என்னும் இடத்தில் போர் மூண்டுவிட்டது!''

''அப்படியா!'' என்று உற்சாகத்துடன் உரத்த குரலில் கேட்ட பழையாறைச் சோழர், ''வெற்றி! என் சூழ்ச்சித் திட்டத்துக்கு முதல் வெற்றி!'' என்று கூறிக் கடகடவெனச் சிரித்தார்.

''அத்துடன் இன்னொரு நற்சேதியையும் கொண்டு வந்திருக்கிறேன், அரசே! தாங்கள் எதிர்பார்த்தபடியே நம் பல்லவ இளவரசர் கோவிந்த வர்மர், பாண்டியப் பேரரசரிடம் படையுதவி கோரிப் போயிருக்கிறார்!....''

இதைக் கேட்டு மேலும் மகிழ்ச்சியடைந்தவராய் இடி முழங்குவது போல் சிரித்த பழையாறைச் சோழர், ''கேட்டீர்களா, கலைஞரே! என்னுடைய திட்டங்கள் அணுவும் பிசகாமல் நடந்தேற ஆரம்பித்துவிட்டன!'' என்றவாறு மீண்டும் உடல் குலுங்க நகைத்துக் கொண்டே, ''இன்னும் ஏதேனும் சேதி இருக்கிறதா, சம்புவராயா?'' என்று ஆவலுடன் வினவினார்.

''ஆம், அரசே!...'' என்று தயக்கத்தோடு சுற்றுமுற்றும் பார்த்து விழித்தான் சம்புவராயன்.

''சரி; நீ என்ன சொல்லப் போகிறாய் என்பதை நான் அறிவேன். அதையெல்லாம் இங்கிருந்து கேட்கவோ, பேசவோ கூடாது. கலைஞரே, நீங்களும் என்னுடன் வாருங்கள். நம் நிலவறைக்குப் போவோம்'' என்று கூறிக் கொண்டே மிடுக்கு நடை போட்டு முன்னால் நடந்தார் பழையாறைச் சோழர். அவருடன் சேதியக் கலைஞரும் செல்ல, அவர்களைப் பின் தொடர்ந்து சென்றான் சம்புவராயன்.

இரத்தக் கோளமாகச் சிவந்திருந்த மாலைச் சூரியன் மேற்கு வானில் சரியத் தொடங்கின நேரத்தில் சேதியக் கலைஞரின் இல்லத்துப் பின்புறத் தோட்ட வழியே வெகு எச்சரிக்கையுடன் அங்குமிங்கும் பார்த்தவாறு வந்துகொண்டிருந்த பழையாறைச் சோழர் எதையோ கண்டு அதிர்ச்சியுற்றவர் போல் சட்டென்று நின்று, தமக்குப் பின்னால் வந்த பரவாதிமல்லரையும் சம்புவராயனையும் தமது இரு கரங்களால் வேகமாகப் பின்னுக்குத் தள்ளித் தாமும் அவர்களோடு ஒரு செடிமறைவில் மறைந்து நின்று கொண்டு நோக்கினர்.

அங்கே, அந்த இல்லத்துப் பின்புறமாக அமைந்த சிறிய வாயிலின் கதவைத் திறந்து கொண்டு மகிழ்ச்சி நிலவும் முகத்தினனாய் வெளியே வந்தான் பல்லவ மன்னன் பரமேசுவர வர்மன். அவனுடைய வலக் கரத்தைப் பற்றிக் கொடிபோல் தவழ்ந்து சாய்ந்தவாறு ஆந்திர இளவரசி உத்தமசீலியும் வந்தாள். அவர்களிருவரும் சிற்றாற்றங் கரையை நோக்கி உல்லாசமாக நடக்க ஆரம்பித்தனர். (தொடரும்)

எழுத்தும் தொழிலும்





மனிதப்போக்கின் விசித்திரம்..

ஆங்கிலக் கவிஞன் மில்ட்டனுக்குத் திடீரென்று கண் கெட்டு விட்டது. கண் இழந்த சோகத்தைச் சொல்லிலே தேக்கிக் கவிதையாக வடித்தெடுத்தார். ''இறைவனே! நீ கொடுத்த கண்ணை நீயே திரும்பி வாங்கிக் கொண்டாய். அதனால் என்ன? மிஞ்சியிருக்கும் புலன்களைக் கொண்டு நான் உன்னை வழிபடப் போகிறேன். குருடன் என்ற காரணத்தால் என் பக்தியின் மாற்று குறைந்துவிடவா போகிறது! அரசனுக்கு எத்தனையோ வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். காடும் கடலும் தாண்டி, தொலைவில் உள்ள நாட்டிலே அரச தூதனாகப் பணி செய்கிறான் ஒருவன். இன்னொருவன், இருந்த இடத்திலேயே இருந்து, அரண்மனை வாசலில் நின்று வாயில் காப்போனாகப் பணி செய்கிறான். இரண்டு விதமான சேவையையும் உகந்து ஏற்றுக் கொள்கிறான் அரசன். அதைப் போலவே எனது குருட்டுப் பணியையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் நீ'' என்று இறைவனை நோக்கிப் பாடுகிறார் மில்ட்டன். பாடலின் கடைசி வரியிலே அவர் சொன்னார், ''வாசலில் நின்று காத்துக் கிடப்பவனும் பணி செய்யத்தான் செய்கிறான்'' என்று. (He also serves who stands and waits) ஆங்கில இலக்கிய





நீதியை நிலைநாட்டுவதற்காகச் சட்டம் என்ற கருவியை மனிதன் கண்டுபிடித்தான். ஆனால் அந்தக் கருவியைப் பயன்படுத்துகிறவர்களுடைய இதயத்திலே பொறுமையும், அன்பும், கருணையும், நேர்மையும் இல்லை என்றால் நீதிக்குப் பதில் அநீதி விளையும். இந்த இனிய இயல்புகளை நீதித் துறையில் உள்ளோர் பெற இலக்கியம் எவ்வாறு உதவுகிறது என்பதை அழகாக எடுத்துக் கூறுகிறார் திரு எஸ். மகராஜன். தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அருமையான தொண்டாற்றி வருகிற திரு மகராஜன் ஏழு ஆண்டுகள் வழக்கறிஞராக இருந்து பின்னர் இருபது ஆண்டுகளாக நீதிபதியாக இருந்து வருபவர்.



எஸ். மகராஜன்


நயத்தை உணர்ந்தவர்கள் இந்த வரியைச் சொல்லிச் சொல்லி உருகுவார்கள்.

இப்படி உருகியவர்களுள் ஒருவர் வார்ட் பர்க்கென்ஹெட் என்ற ஆங்கிலப் பிரபு; அரசியல், இலக்கியம், சட்டம் என்ற மூன்று துறைகளிலும் புகழ் பெற்றவர்; இங்கிலாந்து நாட்டின் உயர் நீதி மன்றங்களிலே புகழ் நீதிபதியாக இருந்தவர். மில்ட்டனுடைய பாடலை அவருடைய தீர்ப்பிலே எப்படி இழைக்கிறார் என்று பார்ப்போம்.

பர்க்கென்ஹெட் தலைமை தாங்கிய நீதி மன்றத்திலே ஒரு கொலை வழக்கு விசாரணைக்கு வந்தது. வீட்டினுள் புகுந்து ஒருவனைக் கொலை செய்துவிட்டான் குற்றவாளி; கொலை செய்யும்போது அவனுக்கு உதவியாகச் சென்றவன், வீட்டு வாசலில் நின்று கொண்டு, ஒருவரும் வந்து கொலையைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டான். கொலை முடிந்ததும், இருவரும் ஒன்றாக ஓடி மறைந்துகொண்டார்கள். சில நாட்களுக்குப் பின், இருவர் பேரிலும் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு விசாரணை நடந்தது. கொலை செய்தவனுக்கு மரண தண்டனை விதிப்பது தான் சட்டம். ஆனால் கொலைக்கு உடந்தையாயிருந்தவனுக்கு என்ன தண்டனை கொடுப்பது என்ற கேள்வி பிறந்தது. இந்தக் கேள்விக்கு முதன் முதலாகப் பதில் சொன்னவர் நீதிபதி பர்க்கென்ஹெட். கொலைகாரனுக்கும், அவனுக்கு உடந்தையாயிருந்தவனுக்கும் ஒரே விதமான தண்டனையைக் கொடுப்பதுதான் நியாயம் என்ற முடிவுக்கு அவர் வந்தார். அவருடைய தீர்ப்பின் கடைசி வாக்கியம் இலக்கியச் சுவை ததும்புவதாய், மில்ட்டனுடைய மொழியில் அமைந்திருக்கிறது. (He also serves who stands and waits)

"வாசலில் நின்று காத்துக் கிடப்பவனும் (கொலைபுரிவதிலும் சிறைவாசத்திலும்) பணி செய்யத்தான் செய்கிறான்" என்று முடிகிறது தீர்ப்பு. ஆங்கிலத்தில் (Serve the Sentence) என்னும்போது தண்டனையை அனுபவித்தல் என்ற பொருளில் பிரயோகிக்கப்படுகிறது. Serve என்ற வார்த்தையில் இரண்டுவித அர்த்தங்களும் கைதிக்குப் பொருத்தமாக அமைந்த அழகைப் பாருங்கள்!

ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ், லேர்னட் ஹாண்ட் (Learned Hand) முதலிய தலைசிறந்த அமெரிக்க நீதிபதிகளும் இவ்வாறே இலக்கியப் புலமை படைத்தவர்களாக இருந்தார்கள். இலக்கிய இன்பத்திலே தோயும்



புகைப் படங்கள் - இடமிருந்து வலம்:
1. மில்ட்டன் 2. வெண்டல் ஹோம்ஸ்
3. லேர்னட் ஹாண்ட்.

போது, குறுகிய மனம் விரிகிறது; மனித வாழ்க்கையைப் பரிவோடு பார்க்கும் திறமை பெருகுகிறது; தன்னை மறந்து, மற்றவர்களுடைய இதயத்தில் புகுந்து, அவர்களுடைய துன்பங்களையும், கோபதாபங்களையும் மனிதச் செயலுக்கு அடிப்படையாக இருக்கும் மூல காரணங்களையும் உணர்ந்து ஆராயும் வல்லமை வளர்கிறது. எனவே, பர்க்கென்ஹெட்டும், வெண்டல் ஹோம்ஸும், லேர்னட் ஹாண்டும், நீதித் துறையில் மாத்திரமல்ல, இலக்கியத் துறையிலும் சிறந்த வெற்றி கண்டார்கள். இலக்கியப் பயிற்சியால் பெற்ற பரிவும், கற்பனையும், நீதித் துறையில் அவர்களுக்கு ஊட்டம் கொடுத்தது; நீதி மன்றத்திலே அவர்கள் பெற்ற அனுபவ ஞானம், அவர்களுடைய இலக்கிய எழுத்துக்கு வன்மையை ஊட்டியது. இலக்கிய விளக்கு நீதிக்கு ஒளி கொடுத்தது, நீதி விளக்கு இலக்கியத்துக்கு உள்ளொளி கொடுத்தது போல.

இலக்கியத்திலோ, கலையிலோ, சமயத்திலோ நம்பிக்கையும் பயிற்சியும் இல்லாத ஒரு பேர்வழி அயர்லாந்து நாட்டிலே நீதிபதியாக இருந்தார். கர்ரன் என்பது அவருடைய பெயர்; ஈவிரக்கமில்லாத கடுமூஞ்சி. கட்சிக்காரர்களையும், வக்கீல்களையும் மட்டம் தட்டுவதே அவருடைய குறிக்கோளாக இருந்தது. அவருடைய கோர்ட்டுக்குப் பேர்பெற்ற வழக்கறிஞர் எர்ஸ்கின் வழக்காட வந்திருந்தார். விஷ நாக்குப் படைத்தவர் எர்ஸ்கின்; சமயோசிதமாகக் கொட்டும் ஆற்றல் படைத்தவர்; சென்னை கவர்னராக இருந்த எர்ஸ்கின் பிரபுவின் பாட்டனார். எர்ஸ்கின் பேசத் தொடங்ியதும், அவரை அவமானப்படுத்துவதற்காக நீதிபதி ஒரு வழியைக் கண்டுபிடித்தார். தம் பக்கத்திலேயுள்ள நாற்காலி மேல் தம்முடைய நாயை உட்கார வைத்துக் கொண்டு அதோடு பேசுவதும், குலாவுவதும், தட்டிக் கொடுத்துச் சீட்டியடிப்பதுமாக இருந்தார் நீதிபதி. இந்த அலங்கோலத்தைப் பார்த்துக் கொண்டிருந்த வழக்கறிஞர் எர்ஸ்கின் திடீரென்று தம் பேச்சை நிறுத்தி விட்டு மௌனமாக நின்றார்.

"நீங்கள் பாட்டுக்குப் பேசுங்கள், ஐயா! எதற்காக உங்கள் பேச்சை நிறுத்தினீர்கள்?" என்று கேட்டார் நீதிபதி.

"இல்லை, பிரபு! கோர்ட்டார்கள் கலந்து ஆலோசனை செய்யும் போது, நான் குறுக்கிட்டுப் பேசக் கூடாதல்லவா?" என்றார் வழக்கறிஞர்.

நீதிபதி அவமானப்பட்டதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அவருடைய புளிப்பேறிய உள்ளத்தால் சமுதாயத்துக்குக் கேடு விளைகிறது; மனிதப் பண்போடும், நேர்மையோடும் வழக்குகளைத் தீர்க்கும் ஆற்றல் கெட்டு விடுகிறது. புளிப்பை எடுப்பதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது: இலக்கியத்திலும், கலையிலும், சமயத்திலும் ஊறினால், உள்ளத்திலே உள்ள புளிப்பு மாறி இனிப்பு பிறந்து விடுகிறது.

நீதியை நிலைநாட்டுவதற்காக, சட்டம் என்ற கருவியை மனிதன் கண்டுபிடித்தான். ஆனால் அந்தக் கருவியைப் பயன்படுத்துகிறவர்களுடைய இதயத்திலே, பொறுமையும், அன்பும், கருணையும், நேர்மையும் இல்லையென்றால், நீதிக்குப் பதில் அநீதிதான் வளரும். விவாகரத்து வழக்குகளில் இந்த உண்மையைக் கண்கூடாகக் காணலாம்.

இல்லறமே நல்லறம் என்று நம் நாட்டில் அதை நெடுங்ாலும் போற்றி வளர்த்து வந்திருக்கிறோம். ஆனால் அந்தக் கோட்பாட்டை அழிப்பதற்கென்றே பல சக்திகள் கச்சை கட்டிக் கொண்டு நிற்கின்றன. தகுந்த காரணமில்லாமல், மனைவிமார் கணவர்கள் பேரிலும், கணவர்கள் மனைவியர் பேரிலும் இல்லறப் பூட்டை உடைத்து விடுதலை கொடுக்க வேண்டும் என்று நாள்தோறும் வழக்குத் தொடரத் தொடங்கி விட்டார்கள். அவர்களுக்காக வழக்கு நடத்தும் வழக்கறிஞர்களும், இல்லறத்தின் தூய்மையை மறந்து, வறட்டுச் சட்டம் பேசிச் சண்டப் பிரசண்டம் செய்கிறார்கள். இந்த நிலைமையில், பொறுமையோடும், கருணையோடும், மனிதப் பிரச்னைகளைத் தீர்த்துவிட வேண்டிய பொறுப்பு நீதி மன்றங்களைச் சார்ந்தது.

ஓர் அச்சகத்தில் வேலையிலிருந்தான் கணவன். இரவெல்லாம் விழித்திருந்து அச்சுக் கோக்க வேண்டும். காலை ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்து பகலெல்லாம் தூக்கத்தில் கழிப்பான். வீட்டிலிருக்கும் குழந்தைகளோ இரவு முழுவதும் உறங்கி விட்டுப் பகலெல்லாம் கொக்கரித்துக் கூத்தடிப்பார்கள். இந்த இரைச்சலைத் தாங்க முடியாமல் கணவன் மனைவியைப் பார்த்து, "நீயும் உன் குழந்தைகளும் எங்கேயாவது தொலைந்து போங்கள்" என்று சொல்லிச் சடைத்துக் கொண்டான். இதைக் கேட்ட மனைவிக்கு மனம் கசந்து விட்டது. "நானெல்லாம் இந்தக் குடும்பத்துக்கு உழைத்தும், எனக்குக் கிடைக்கிற பரிசு இதுதானா!" என்று சொல்லி விட்டுக் குழந்தைகளோடு தாய் வீட்டுக்குக் கிளம்பிப் போய்விட்டாள். பிரிந்தவர்களைச் சேர்த்து வைக்க முயற்சி செய்வார் ஒருவரும் இல்லை. அண்டை வீட்டுக்காரர்களோ, இருவரையும் கிள்ளிவிட்டு வேடிக்கை பார்த்தார்கள். வீம்பு வளர்ந்தது. சண்டை சச்சரவும் பெருகிக் கொண்டே போயிற்று. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காமல் தம்பதிகள் இருவரும் ஏழாண்டுகள் பிரிந்திருந்தார்கள். கடைசியாக, விவாகரத்துச் செய்ய வேண்டும் என்று கணவன் மேல் மனைவி வழக்குத் தொடர்ந்தாள். வழக்கு விசாரணைக்கு வந்ததும், மும்முரமான வாதப் பிரதிவாதங்கள் தொடங்கின. நல்லவேளையாக வழக்கை விசாரித்த நீதிபதி கருணை நிறைந்தவர், இலக்கிய ரசிகர், தம்பதிகள் இருவரையும் பார்த்து, இந்த வழக்கை ராஜி செய்வது எவ்வளவு நல்லது என்று எடுத்துச் சொன்னார்.

"ஐயோ, இந்தப் பாவியோடு வாழமாட்டேன், என்னைக் கொலை செய்துவிடுவான்" என்று முறையிட்டாள் மனைவி.

"இது பெண் இல்லிங்க, பிலிங்க (புலி)" என்று புகார் செய்தான் கணவன்.

"இந்தப் புலியோடு ஒரு வாரம் வாழ்ந்து பாருங்கள். வாழ முடியவில்லை என்றால் அடுத்த வாரம் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்கிறேன்" என்று சொல்லி




நாள் முழுவதும் புத்துணர்ச்சி
SANDAL SOAP
OK
சந்தன
சோப்
ஆக்டமர்
லாஞெலின்
அதிகப்படியான கிளிசரின்
சேர்க்கப்பட்டது.
திஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட்.
சென்னை-1
OK பரிசுக் கூப்பன்களை சேகரியுங்கள்
EP-EAC-8

கல்யாண காலங்களுக்கு

- பட்டுச் சேலைகள்
- பாவாடைத் துண்டுகள்
- சோளி பீஸ் ரகங்கள்

தென்னிந்தியாவிலேயே பட்டுச் சேலைகளுக்கு
நற்கியாதி பெற்ற ஸ்தாபனம்...



நல்லி சின்னசாமி செட்டி

பனகல் பார்க்

டெலிபோன்
நெ. 4-1115

தியாகராயநகர்
சென்னை-17

ரேணுகா டால்கம் பவுடர்

ஆக்டமர் சேர்க்கப்பட்டது

ஆக்டமர் சேர்ந்திருப்பதால் இது தனித்தன்மை வாய்ந்தது

ஆக்டமர் — சருமத்தைப் பாதிக்கும் கிருமிகளி
லிருந்து காப்பாற்றுகிறது

ஆக்டமர் — சரீரத்தில் ஏற்படும் துர்நாற்றத்தை
எளிதில் போக்குகிறது

ஆக்டமர் — வேர்க்குரு உபாதைகளிலிருந்து
பூரண பாதுகாப்பளிக்கிறது



மணத்திற்கு இனிமையான நறுமணம் கொண்ட
ரேணுகா டால்கம் பவுடர் தான் முழுவதும்
உங்களை நீடித்த புதுமையுடனும் குளுமையுடனும்
திகழச்செய்து மகிழ்விக்கிறது.

சிறிய (ஜேபி சைஸ்) டின்களிலும் இப்போது கிடைக்கின்றன

கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட், கல்கத்தா-29

தென்னிந்திய ஆபீஸ் : 5/149, பிராட்வே, சென்னை - 1

விட்டு, இருவரையும் ஒரே ஜட்கா வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டு, வழக்கை வாய்தா போட்டார் நீதிபதி. அடுத்த வாரம் வாதி பிரதிவாதிகளைக் கூப்பிட்டபோது, இருவரும் மணக் கோலத்தோடு உல்லாசமாக வந்து நின்றார்கள். ''நாங்கள் இனிமேல் ஒன்றாக இருக்கப் போகிறோம். வழக்கைத் தள்ளிவிடுங்கள்'' என்று இருவரும் சேர்ந்து கேட்டுக் கொண்டார்கள். ஏழு வருஷங்களாகக் கசப்பாக இருந்த வாழ்க்கையில் ஓர் இனிப்பு தட்டிவிட்டது. இவ்வளவுக்கும் காரணமாக இருந்தது நீதிபதியின் கருணை.

இலக்கியத்தால் நீதித் துறை வளம் பெறுகிறது என்பது ஒருபுறம் இருக்க, நீதி மன்ற நிகழ்ச்சிகள் எவ்வாறு இலக்கிய எழுத்தாளருக்கு உதவுகின்றன என்பதைப் பார்க்கலாம்.

எழுத்துக்கு ஆற்றலும், உணர்ச்சியும், அழகும் சுவையும் இருக்க வேண்டுமென்றால், அனுபவத்தோடும், உண்மையோடும் அது ஒட்டி நிற்க வேண்டும். இல்லையென்றால், வெற்றுரைதான் மிஞ்சும்.

சாமெர்செட் மாம் (Somerset Maugham) போன்ற சிறந்த இலக்கியக் கலைஞர்களும், நாவலாசிரியர்களும் ஜாவா, ஸுமத்ரா என்று நாடு நாடாகச் சென்று மனிதப் பண்புகளையும், வாழ்க்கை முறைகளையும் கூர்ந்து கவனித்து, இவ்வாறு திரட்டிய ஞானத்தை நூலெழுதுவதில் பயன்படுத்துகிறார்கள்.

''செம்மீன்'' என்ற உயர்ந்த மலையாள நாவலை எழுதியிருக்கிறார் தகழி சிவசங்கரம் பிள்ளை; செம்படவர் வாழ்க்கையை மையமாகக் கொண்டு எழுதிய நாவல். ஆசிரியரோ நாயர் வகுப்பைச் சேர்ந்தவர். ஆனாலும் ஆண்டுக் கணக்காகச் செம்படவர்களோடு பழகி, அவர்களோடு ஒன்றியவர். கருமீன்களோடு புரண்டு, புயல் காற்றிலே தோணிகளோடு அமிழ்ந்து, கடல் கன்னியோடு குலாவியவர். ஆகவே, அவருடைய நாவலிலே சுவானுபவத்தின் அதிகார முத்திரையைக் காண்கிறோம்; கருவாட்டுச் சிப்பமும், உப்பங் காற்றும் நாவல் முழுவதும் கலை மணத்தை வீசுகின்றன. எழுத்துக்கு உரம் போட விரும்புவோர், தகழியைப் போல், அனுபவத்தை நாடிப் பெற வேண்டும்; வெறுங் கையால் முழம் போடக் கூடாது.

மனிதப் போக்கின் விசித்திரத்தை அறிய விரும்பும் எழுத்தாளர்கள் அனுபவத்தை நாடி, ஊர் ஊராய் அலைந்து திரிய வேண்டும் என்பதில்லை. வழக்கு மன்றங்களில் நடக்கும் தினசரி நிகழ்ச்சிகளில் மனித நாடகத்தின் பல பட்டங்களையும் காணலாம். வாழ்க்கையில் ஏற்படும் முண்டு முடிச்சுகள், மனிதனுடைய போலி டம்பம், வறுமையின் கொடுமை, செல்வந்தர்களின் வஞ்சகம், காதலர்களின் நிறைவேறாத கனவுகள், பொருந்தாத திருமணத்தின் பொல்லாத விளைவுகள், கயமை, சோகம், ஹாஸ்யம், கருணை — எல்லாவற்றையும் கண்டு, நிதானமும், பக்குவமும் அடைவதற்கு ஏற்ற இடம் நீதிமன்றம்.

நீதி மன்றத்துக்கு அப்பாலிருந்து வாழ்க்கையை ஆராய்ச்சி செய்யும் எழுத்தாளர்கள் காலத்தை மிதமிஞ்சிச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. பொருளற்றது போலத் தோன்றுகிறது, இன்று நடக்கும் ஒரு நிகழ்ச்சி. ஆனால்



வண்டு: என்ன 'பூ' வாரே! உடம்புக்கென்ன? ரொம்ப வாடி இருக்கீங்களே!

பூ: நான் நேற்றுப் பூவோன்னோ? அதனாலே வாடியிருக்கேன்.

அதன் விளைவுகளையும், முழுப் பொருளையும் உணர்வதற்கு எத்தனையோ வியாழ வட்டங்கள் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. வாழ்க்கையோ மூலைக்கு மூலை சிதறிக் கிடக்கிறது. இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறிக் கிடக்கும் துண்டுகளைப் பொறுக்கி இணைத்துப் பார்க்கும்போதுதான், வாழ்க்கையின் உட்பொருள் என்ன, நோக்கமென்ன என்று அறிய முடிகிறது. இந்த நோக்கத்தைப் புலப்படுத்துவதே எழுத்தாளர்களின் பொறுப்பு; மறைந்து கிடக்கும் காரிய காரணத் தொடர்புகளை எடுத்துக் காட்டுவது அவர்களது தொழில்; வாழ்க்கை யென்ற அரிய பூம்பட்டாடையை விதி எவ்வாறு நெசவு செய்கிறது என்ற அதிசயத்தை விளக்குவது எழுத்தாளர் கடமை.

நீதிமன்றத்தினுள்ளிருந்து வாழ்க்கையைப் பார்க்கும்போது எழுத்தாளர்களுக்கு ஒரு பெரிய வசதி கிடைக்கிறது. நாற்பது ஆண்டுகளாக நடந்த வரலாற்றை வடிகட்டி நான்கு நாட்களிலே வழக்கறிஞர்கள் காட்டி விடுகிறார்கள். வேண்டாத நிகழ்ச்சிகளை, ஒதுக்கிவிட்டு, சாராம்சமான செய்திகளை மாத்திரம் பத்திரங்கள் மூலமும், சாட்சிகள் மூலமும் எடுத்து விளக்குகிறார்கள். அதன் பயனாகக் காரிய காரணத் தொடர்புகள் எளிதில் நமக்கு விளங்கி விடுகின்றன. நாற்பது ஆண்டுகள் வாழ்ந்து பெறக்கூடிய அனுபவத்தை நான்கே நாட்களில் பெற்று விடுகிறோம்.

இந்த மர்மத்தை நன்றாக உணர்ந்தவர் ஆசிரியர் ''கல்கி''. அவர் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் 'உங்கள் நீதிமன்றத்தில் நடந்த சுவையான நிகழ்ச்சி ஒன்றைச் சொல்லவேண்டும்' என்று கேட்பார். ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளைக் கேட்டவுடன், அவருடைய கற்பனையும், படைப்புத் திறனும் இயங்கத் தொடங்கி விடும். அற்புதச் சிறுகதை அவர் உள்ளத்திலே கருத் தரித்து உருவாகிவிடும். அடுத்த 'கல்கி' இதழிலே நீதிமன்ற நிகழ்ச்சி கலையுருவம் பெற்று வெளிவந்துவிடும்.

எழுத்துக்கும் (நீதிமன்றத்) தொழிலுக்கும் இருக்கும் உறவு அவ்வளவு நெருக்கமானது.



அஜந்தாவின்

சில வருஷங்களுக்கு முன் நமது பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு அமெரிக்கா சென்றிருக்கிறார். அங்கே ஸ்ரீமதி கோல்ட் (இவர் 22 காரட் தங்கத்தையோ அல்லது 14 காரட் தங்கத்தையோ சேர்ந்தவர் அல்ல) என்ற அம்மையாரை ஒரு விருந்தில் சந்திக்கிருக்கிறார். 'நான் இந்தியா வருவதாக இருக்கிறேன். அங்கு வந்தால் நான் முக்கியமாக முதன் முதல் பார்க்க வேண்டியது என்ன?' என்று அவர் நேருவிடம் கேட்டிருக்கிறார். 'நிச்சயமாக அஜந்தா, எல்லோராவைத்தான்' என்றே நமது பிரதம மந்திரியின் பதில் இருந்திருக்கிறது. இப்படி ஒரு தகவல், ஒரு பிரபல அமெரிக்க மாதர் பத்திரிகையில். ஆம். உண்மைதான். இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டுக்காரர்களிடம் நாம் காட்ட வேண்டியது இமயத்தின் சிகரத்தையும் அகன்று பரந்த கங்கை நதியையும் அல்ல. அவையெல்லாம் இறைவனின் அருளால் இயற்கையில் அமைந்தவை. இல்லை; சலவைக் கல் கனவு என்று புகழப்படும் தாஜ்மகாலைக் காட்டக் கூடாதோ? காட்டலாம். அது இந்திய கலாசாரத்துக்கோ இந்திய மண்ணில் ஊறிய கட்டடக் கலைகளுக்கோ சான்றாக அமையாது; அதனால் இந்தியனது சிந்தனையில் பிறந்து இந்திய நாகரீகத்திலே தவழ்ந்து, இந்தியப் பண்பாட்டிலே வளர்ந்து, இந்திய மண்ணிலே சிறப்புடன் கொலுவீற்றிருக்கும் கலைக்கோயில்களைத்தானே காட்ட வேண்டும். அதிலும், சிற்பக் கலை எல்லாம் கிரேக்கர்களிடையேதான், சித்திரக் கலை எல்லாம் இத்தாலியர்களிடையேதான் என்று படித்து அதே எண்ணத்தில் ஊறி இருக்கும் மேலை நாட்டு ரஸிகர்களையும் மூக்கில் விரலை வைத்து அதிசயித்து நிற்கும்படி செய்யவல்ல கலைக் கூடங்களைத்தானே காட்ட வேண்டும். அத்தகைய கலைக் கூடங்களில் தலையாய கலைக் கூடங்கள்தான் அஜந்தாவும் எல்லோராவும். எல்லோராவை நாம் பார்த்து விட்டோம். சிற்பக்கலை அங்கு எப்படிப் பூரணத்துவம் பெற்றிருக்கிறது என்பதையுமே தெரிந்து கொண்டோம்.

ஆயிரம் வருஷங்களுக்கு முன் இந்திய நாட்டில் சித்திரக் கலை எவ்வளவு வளர்ச்சி பெற்றிருக்கிறது என்று தெரிய விரும்பும் எவரும் சென்று காண வேண்டியது அஜந்தாவைத்தான். சிற்பக் கலைகளின் சிகரத்தில் ஏறி இருந்த தமிழர், சித்திரக் கலையில் அவ்வளவு சிறப்புற்றிருக்க வில்லைதான். தமிழர்களாகிய நாம் பெருமைப்படுவதற்குரிய சித்திரங்கள் எல்லாம் சித்தன்ன வாசல் குடைவரையிலும், தஞ்சைப் பெருவுடையார்க் கோயில் கருவறையைச் சுற்றிய பிராகாரத்திலும், இன்னும் காஞ்சி கைலாச நாதர்கோயில், பனைமலைக் கோயிலிலும் உள்ளவைதானே. இவற்றையெல்லாம் விட அஜந்தா சித்திரங்கள் எவ்வளவு உயர்ந்தவை என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா; அதற்காகவே சென்றோம், அஜந்தாவுக்கு. அங்குள்ள குடைவரைகளில் இரண்டையும் பார்த்தோம். இனி மற்றக் குடைவரைகள் எல்லாவற்றையும் பார்க்க முடியா விட்டாலும் முக்கியமான குடைவரைகளையாவது பார்த்து விட வேண்டாமா? அஜந்தா பெண்கள் அழகிகள். அவர்கள் கட்டியிருக்கும் கொண்டையும் அணிந்திருக்கும் ஆடையும், அணிகளும் மிகமிக நேர்த்தியானவை என்று கேள்விப்பட்டிருக்கிறோமே, அவற்றின் உண்மையையும் தெரிந்து கொள்ளுவோம் இன்று.

மூன்றாவது முதல் பதினைந்தாவது குடைவரை வரை விறுவிறு என்று பார்த்து விடலாம். இவைகளில் மூன்றாவது, ஐந்தாவது குடைவரைகள் பூர்த்தியாகாதவை. ஐந்தாவது குடைவரையில் அவலோகிதேசுவரர் சிலை ஒன்று உண்டு. புத்தரும் அவருக்கு இருபுறத்திலும் வஜ்ரபாணியும் பத்மபாணியும் சிலை உருவில் உருவாகி யிருப்பார்கள். இந்த விகாரத்தில் அறுபது அடி சதுரமுள்ள பெரிய ஹாலும், அதைத் தாங்கி நிற்கும் 28 தூண்களும் உண்டு. 6வது குடைவரை மாடியோடு கூடியது. இங்கும் ஒரு புத்தர். இக்குடைவரையில் ஒரே ஒரு பக்கத்துச் சுவர் மட்டுமே சித்திரம் தீட்டப்பெற்றிருக்கிறது. 7வது குடைவரையில் முன்பு நல்ல சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்க வேண்டும். இன்று எஞ்சியிருப்பவை குறிப்பிடக் கூடியதாயில்லை. 8–வது குடைவரை மற்றக் குடைவரைகளைவிடத் தாழ்ந்த இடத்தில் இருப்பதால், அதில் பெரும் பகுதி தூர்ந்து போயிருக்கிறது. 9வது குடைவரை 10வது குடைவரை இரண்டும் சைத்தியங்கள். இவை இங்குள்ள குடைவரைகளில் காலத்தால் முற்பட்டவை என்று கணக்கிடுகிறார்கள். இங்கு முதலில் சுவரில் தீட்டிய சித்திரங்கள் மேலேயே திரும்பவும் சித்திரம் தீட்டியிருக்கிறார்கள். இங்கு நாக

அந்தப்புரம்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்


மன்னர்களும், அவர்கள் மீது விரிந்திருக்கும் பாம்புக் குடைகளும் தீட்டப்பட்டிருக்கின்றன. இவைதான் முதன் முதல் தீட்டிய சித்திரங்கள். பின்னரே புத்தரது சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. 10வது குடைவரை அளவில் பெரியதுதான். அங்கு ஜாதகக் கதைகள் சித்திரங்களாக உருவாகி இருக்கின்றன. இந்தக் கதைகளில் உள்ள காட்சிகளும் தொகுத்துக் கூறும் வகையில் இருக்கவில்லை; மிகவும் சிதைந்து போயுமிருக்கும். இப்படியே 11, 12, 13, 14, 15 குடைவரைகள் எல்லாம். ஆதலால் விறுவிறு என்று 16வது குடைவரைக்கே போகலாம். இக்குடைவரையின் வராந்தாவில் உள்ள விதானத்திலே இரண்டு கந்தர்வக் காதலர்கள் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு வானவெளியில் பறக்கின்ற காட்சி சிற்ப வடிவில் இருக்கும். ஆடவனது தோளில் ஒயிலாகச் சாய்ந்து கொண்டு அந்தக் கந்தர்வப் பெண் பறந்து செல்வதே, அவர்கள் புதியதொரு காதல் உலகத்தில் சஞ்சரிக்கின்றவர்கள் என்பதைக் காட்டும். இங்குதான் நந்தன் முடி துறந்து பௌத்த பிக்ஷு ஆன கதை முழுவதும் சித்திரிக்கப் பட்டிருக்கிறது. நந்தன் துறந்த முடியை ஏந்தி வரும் அரண்மனைச் சேவகர்களைக் கண்டு மயங்கி விழும் நந்தன் மனைவி சுந்தரி அழகாக உருவாகியிருக்கிறாள். இன்னும் பல ஜாதகக் கதைகள் சித்திரங்களாக உள்ளன.





இவற்றை விட்டு, 17வது குடைவரையில் நுழைந்தால்தான் அஜந்தா பெண்கள் பலரைக் காணும் வாய்ப்புக் கிடைக்கும். சுருக்கமாகச் சொன்னால் இக்குடைவரையே அஜந்தாவின் அந்தப்புரம் ஆகும். இக்குடைவரையின் வாயிலிலே நின்று கொண்டிருக்கும் நிலையிலுள்ள இரண்டு அப்சரஸ்களை நாம் சந்திப்போம்.

இந்தக் குடைவரை வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்தால், இங்குதான் அஜந்தா சித்திரங்கள் அழியாத நிலையில் காக்கப்பட்டு வந்திருக்கின்றன என்று தெரியும். இங்குள்ள சித்திரங்களில் சிறப்பானவை பல. ஓர் அரசிளங் குமரனும் குமரியும் இணைந்து உட்கார்ந்திருப்பர் ஒரு பக்கத்தில். அந்த இளங் குமரி உட்கார்ந்திருக்கும் கோலமே மிக்க கவர்ச்சியாக இருக்கும். குமரனே கையில் ஒரு மதுக் கிண்ணத்தை ஏந்தி அதைக் குமரியிடம் கொடுத்து அருந்தும்படி சொல்லிக் கொண்டிருக்கும் பாவனை. இச்சித்திரத்தை அடுத்து இந்த அரசிளங்குமரனும் குமரியுமே அரண்மனை வாயிலை நோக்கிச் செல்லும் காட்சியும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. அந்த வாயிலில் அரசிளங்குமரி பிச்சைக்காரர்களுக்குப் பிச்சை இடுகிறாள். இக்கூட்டத்தில் உள்ள பிச்சைக்காரி கூட அழகுடையவளாகத்தான் இருக்கிறாள். இதே குடைவரையில் அஜந்தா சித்திரங்களில் பிரசித்தி பெற்ற அலங்காரக் கலையில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் நால்வரையும் பார்க்கிறோம். மத்தியில் நிற்பவள் குறைந்த உடையையும், நிறைந்த அணிகளையும் அணிந்து நிற்கும் அலங்காரவல்லி. கையிலே ஒரு பெரிய கண்ணாடியை ஏந்தி நிற்கிறாள். அவள் நிற்கிற ஒயிலே மிக்க கவர்ச்சியாக இருக்கிறது. அவள் ஓர் அரசிளங் குமரி என்பதை அவள் தலையில் அணிந்துள்ள கிரீடம் சுட்டிக் காட்டுகிறது. அவள் தன் அலங்காரத்தையெல்லாம் முடித்துக்கொண்டு பொட்டிட முனைந்து நிற்பவளாகத் தோன்றுகிறாள். இவளைச் சுற்றி நிற்கும் தோழியர் சாந்து ஏந்தி நிற்கிறார்கள் போலும். இவர்கள் எல்லாருமே கருநிறத்து அழகிகள். எல்லாரும் சேர்ந்து ஒரு சொப்பன உலகத்தையே சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறார்கள் அங்கே. இன்னும் இங்கேயே ஒரு கந்தருவன் இசை மீட்டிக் கொண்டு விண்ணில் பறந்து செல்கிறான். அவனுடன் செல்கிறார்கள், மூன்று பெண்கள், தாளம் போட்டுக் கொண்டு. இவர்களது தலை அலங்காரம் எல்லாம் பிரமாதமாக இருக்கிறது. 'தன்னையும் தாங்கலாதார் துகில் ஒன்றும் தாங்கி நின்றார்' என்று கவிச் சக்கரவர்த்தி கம்பர் பாடினதற்கொப்ப விழுந்து சரியும் துகிலையும் தாங்கிக் கொண்டு பறப்பவர்களாகவே தெரிகிறது. இந்தச் சித்திரங்களிலேதான் பிம்பிசார மன்னனும் அவனது பட்டத்து அரசியும் கொலுவிருக்கிறார்கள். இன்னும் இங்கேயே, சிங்கள



''டேய் மணி ஏண்டா அவனே அடிக்கிறே?''

''பின்னே என்ன மாமா? நாம் இரண்டு பேரும் சிநேகமா இருக்கலாம் வாடான்னு, மாட்டேங்கிறான்!''

நாடாகிய இலங்கைக்கு விஜயன் வரும் காட்சியும், அதை ஒட்டிய ஜாதகக் கதைகளும் உருவாகியிருக்கின்றன. இந்தப் பெண்களையும், அரசிளங் குமரர்களையும் குமரிகளையும் காணும் கண்ணுலேயே ஓர் அற்புத சித்திரத்தையும் இங்கே காண்கிறோம். தன் மனைவியான யசோதரையையும், ராகுலனையும் பிரிந்து சென்ற சித்தார்த்தர் திரும்பவும் தன் நாட்டுக்கு வந்து தன் மனைவியிடமே பிக்ஷை பெறும் காட்சி, மிகப் பெரிய அளவில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. ஆம். சிறிய வடிவிலே நிற்கும் யசோதரை, ராகுலன் முன்பு பெரியதொரு வடிவோடு புத்தர் நிற்கிறார் பிச்சைப் பாத்திரத்துடன். ஆம், அவர்கள் உள்ளத்திலே அவர் எவ்வளவு உயர்ந்திருக்கிறார் என்று காட்டவே இப்படி ஒரு கற்பனை பண்ணிச் சித்திரம் தீட்டியிருக்கிறான் ஓவியன்.

இனி நாம் காண வேண்டியது அதிகம் இல்லை. 19ம் நம்பர் குடைவரை ஒரு சைத்தியம். அதன் முன் முகப்பு இருக்கிறதே அது ஒரு பெரிய அரண்மனை முகப்பு போலவே இருக்கும். அழகான உருட்டுத் தூண்கள் தாங்கும் மண்டபம் ஒன்று முன்னுலே நீண்டு கொண்டிருக்கும். அதற்கு மேலே கிட்டத்தட்ட துவாதசிச் சந்திரன் வடிவில் ஒரு பெரிய வாயில் இருக்கும். அதைச் சுற்றி எண்ணிறந்த சிற்ப வடிவங்கள் வேறே. ஏதோ செங்கல்லும் சுண்ணும்பும் கொண்டு இன்றைய கொத்தர்கள் கட்டி அமைத்த கட்டடமோ என்றே தோன்றும். கூர்ந்து நோக்கினுல்தான் அது மலையையே குடைந்து, கற்களையே வெட்டிச் செதுக்கி அமைத்த குடைவரை என்று காண்போம். இங்கும் வெளிப்புறத்திலேயே ஒரு நாக அரசன். அவன் தலைக்கு மேலே ஏழு தலை நாகம் ஒன்று குடை பிடிக்கும். மன்னன் மனைவியும் அரசன் பக்கத்தில் அந்த அரியணையிலேயே இருப்பாள். இருவரும் ஒரு காலைத் தொங்கவிட்டு ஒரு காலைத் தூக்கி வைத்து ஒய்யாரமாகவே உட்கார்ந்திருப்பர். இருவர் தலையையும் மணிமகுடம் அலங்கரிக்கும். உள்ளே நுழைந்தாலோ, எல்லோராவில் கண்ட விஸ்வகர்ம குடைவரை போலவே இருக்கும்; வானளாவிய விதானங்கள்.

இந்தப் பத்தொன்பதாவது குடைவரையைக் கண்டபின் இன்னும் நேரத்தைப் போக்கிக் கொண்டிருக்க வேண்டாம். நேரே 26வது குடைவரைக்கே நடந்து விடலாம். அங்குதான் புத்தர் மகாபரிநிர்வாணமடைந்த காட்சி செதுக்கப்பட்டிருக்கிறது. 24 அடி நீளத்தில் புத்தர் படுத்திருக்கிறார். அவர் பக்கலில் அவரது சிஷ்யர்களெல்லாம் துயரம் தேங்கிய முகத்தினராய் அமர்ந்திருக்கிறார்கள். இங்குதான் புத்தரை மயக்க முனைந்த மாரா ஜாதகக் கதையும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இக்குடைவரை முழுவதும் சிற்ப வடிவங்கள். எல்லாம் ஒரே புத்தமயம். இங்கு மத்தியில் ஒரு ஸ்தூபமும், அதில் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் புத்த விக்கிரகம் ஒன்றும் இருக்கின்றன. இந்தப் புத்தரை நீங்கள் எங்கு வேண்டுமானாலும் நின்று பார்க்கலாம். எங்கு நின்றாலும் பார்க்கிறவர்களைப் பார்க்கும் பாவனை உடையவராகவே புத்தர் காணப்படுகிறார். இக்குடைவரைக்கு மேல்புறத்தில்தான் 28, 29-வது குடைவரைகள் இருக்கின்றன. இவைகளுக்குச் செல்ல நல்ல பாதை இல்லை. மேலேயுள்ள குடைவரையிலிருந்து வாகூரா நதிக்குள் இறங்கி அதன் பின்னும் மலைப் படியில் தத்தித் தத்தி ஏறினால்தான் சென்று காணலாம். அப்படிச் சிரமத்துடனே சென்று காண்பதற்குத் தகுந்த சிற்பங்களோ, சித்திரங்களோ அங்கு இல்லை.

அஜந்தாவில் உள்ள இந்த வண்ண வண்ண ஓவியங்கள் எழுதி எவ்வளவு காலம் ஆயிற்று, தெரியுமா? திட்டமாகச் சொல்ல முடியா விட்டாலும் 1800 வருஷங்களுக்குக் குறைவில்லை என்று தெரிகிறது. இது என்ன, சென்ற வருஷம் எழுதிய படம் இந்த வருஷம் மங்கி விடுகிறது. அப்படி இருக்க இச்சித்திரங்கள் மட்டும் எப்படி அழியாமல் இருக்கின்றன? ஆம், அதுதானே அஜந்தா ரகசியம்? அந்த ரகசியத்தை அறியத்தானே பல்லவ சாம்ராஜ்ய சிற்பச் சக்கரவர்த்தியான ஆயனர் முயன்றார் என்று அமரர் கல்கியின் சிவகாமியின் சபதம் என்ற நவீனம் கூறுகிறது. வெட்டிச் செதுக்கிய பாறையில் இந்த வர்ணங்களை எப்படித் தீட்ட முடிந்தது என்று ஒரு கேள்வி. இதற்கும் விடை சொல்லுகிறார்கள் இன்றைய சிற்ப வல்லுநர்கள். பாறையை வெட்டிச் செதுக்கியபின் அதன் பேரில் சுண்ணும்பு கொண்டு பூசிச் சமதளம் ஆக்கிக் கொண்டு அதன் பேரில் பச்சிலைச் சாற்றையும் வண்ணக் கற்களின் பொடியையும் சேர்த்து அறைத்த கலவையைக் கொண்டு இச்சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்க வேண்டும். அப்படித் தீட்டப்பட்டதன் காரணமாகத்தான் அவை அழியாதிருக்கின்றன, பல இடங்களில் கூரை பெயர்ந்து விழுந்தபின்னும்கூட.

இன்னும் எவ்வளவு காலம் இச்சித்திரங்கள் நிலைத்து நிற்கும் என்று சோதிடம் சொல்ல நம்மால் இயலாது. ஆனால் ஒரு தடவை பார்த்தவர்கள் உள்ளத்தில்தான் என்றும் அழியாத வண்ண ஓவியங்களாக அவை நிலைத்து விடுகின்றனவே, இது போதாதா என்ன?

வெகு காலத்துக்கு முன்பு ஒரு தைரியசாலி, கொடிய சிங்கத்தைக் கூட அடக்கக் கூடியவன் இருந்தான். ஆனால் அவனுக்கு மனைவியிடம் அளவற்ற நடுக்கம். இரவில் அவன் வெகு நேரம் கழித்து வந்தானென்றால் அன்று வீடு இரண்டுபடும். அன்று ஏதோ முக்கிய காரணத்தால் வெகு நேரம் வெளியே தங்கும்படியாகி விட்டது. அவன் வீட்டுக்குப் போகப் பயப்பட்டான். ஹோட்டலில் போய்த் தங்கலாம் என்றால், அவன் மனைவி அவன் கையில் காசு கொடுத்து வைக்கவில்லை. கடைசியில் தான் பணி புரியும் மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்று சிங்கக் கூண்டினுள் புகுந்து ஒரு பெரிய சிங்கத்தின் மீது சாய்ந்து அயர்ந்து தூங்கி விட்டான் அந்தத் தைரியசாலி.

மறு நாள் காலையில் அவன் மனைவி அவனைச் சல்லடை போட்டு ஊரெல்லாம் தேடினாள். கடைசியில் மிருகக் காட்சிச் சாலைக்கு வந்து அவன் சிங்கக் கூண்டினுள் தூங்குவதைக் கண்டாள். உடனே அவள், ''வீட்டுக்கு வரப் பயந்து இங்கே தூங்கிக் கொண்டிருக்கிறாயே, கோழை!'' என்று கத்தினாள்.

அன்பில்லாத மனைவியைப் பற்றி இப்படியொரு கதை. பெண் பெண்ணாக இருந்தால், அன்போடு இருந்தால் அவள் தெய்வம். பேராசையும், சந்தேகமும் அவளைப் பிடித்து விட்டால் குடும்பத்தில் அமைதி குலைந்து விடும். 'ஆசை அலைகள்' படத்திலும் கணவன் வெகு நேரம் வீட்டை விட்டுத் தங்கி விடுகிறான். வந்து விடுகிறது ஆபத்து!

கதாநாயகன் துரை, இருப்பது போதுமென்ற மனத்தோடு பிறருக்கு உதவி புரியும் சிந்தை படைத்தவன். நாகநாதனாக வரும் பாலாஜி சீக்கிரமே மண்டையைப் போட்டு விட்டுத் துரையை வேண்டிய சோதனைகளுக்கு உள்ளாக்குகிறார்: தன் நண்பனுக்கு மரணப் படுக்கையில் அளித்த வாக்குறுதிக்காகத் தன் மனைவிக்குத் தெரியாமல் காரியாலயத்தில் 'ஓவர் டைம்' உழைத்துத் தன் நண்பனின் குடும்பத்தைக் காப்பாற்ற முனைகிறான் துரை. அப்பாவி அமுதா அதை அறியாது. ஆசை அலை மோத, பேராசை அலைக்கழிக்க அண்ணன் மாணிக்கத்தின் தூபத்தினால் கணவன் மீது கோபக் கனலை அள்ளி வீசுகிறாள். கணவன் குறுகுறுத்து விட்டு வீட்டை விட்டு வெளியேற, அண்ணன் பணத்தை அடித்துக் கொண்டு போக, அமுதா நடுத் தெருவில் நிற்கும் நிலைக்கு வந்து விடுகிறாள்.

எம். ஆர். ராதா அண்ணன் மாணிக்கமாக வருகிறார் என்றால் அவரது வழக்கமான அட்டகாசச் சிரிப்பும், நையாண்டிப் பேச்சும் அவரைத் தொடர்ந்து வருவதிலே என்ன வியப்பு?

இலட்சிய நடிகர் ராஜேந்திரன் அன்புக்காகவும் தம் கடமைக்காகவும் வீட்டை விட்டு வெளியேறியவர், பிறகு பணக்காரனாகவும், விருந்தனாகவும் வந்து விஜய குமாரியைப் பாடாய்ப் படுத்துகிறார். இவ்விருவரது நடிப்பும் படத்தைக் கொஞ்சம் ஓட வைக்கும்!

கடைசியில் அநாதை ஆசிரமத்தில் அனைவரும் ஒன்று சேருகின்றனர். கொடுமை உள்ளம் படைத்த மாணிக்கம் கூடத் திருந்திவிடுகிறான்.

இந்தப் படத்தில் ஹாஸ்யம் எடுபடவில்லை, அந்தக் காலத்திய 'அம்மாஞ்சி' படத்திலிருந்து இந்தக் காலத்து 'ஆசை அலைகள்' வரை சிரஞ்சீவியாகத் தொடர்ந்து வந்துள்ள ஓட்டை மோட்டார் ஹாஸ்யத்தைத் தவிர.

'ஆசை அலைகள்' ஓசைப்படுத்தாமல் கம்பி நீட்டி விடாது என்றாலும் அதிக ஆசைப்பட்டோர் மோசம் போவார்கள். —குண்டுமணி

ஆசை அலைகள்





'ஹேஸலின்' டால்க்



மழமழப்பான வெல்வெட் போன்ற பவுடர்! நீலம்-வெள்ளை-மற்றும் பொன்னிறமான, 'ஹேஸலின்' டப்பாவை எடுத்துக்கொள்ளுங்கள். அதிலுள்ள மழமழப்பான வெல்வெட் போன்ற வெள்ளைப் பவுடரை உங்கள் சருமத்தின் மேல் தூவிக்கொள்ளுங்கள். ஆகா, எத்தனை சொகுசான பராமரிப்பு உங்களுக்கு! என்ன குளுமை! என்ன புதுமை! எத்தனை நறுமணம்! எல்லாம் 'ஹேஸலின்' டால்கின் அருள். வியந்து பாராட்ட வேண்டிய பொருள்!

ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு

3WY 9 TAM



மூட்டு வலி, கீல் வாதம், கடின உழைப்பு, இதர வலிகள்...

வலி
எதுவாயினும்
நிவாரணம்
பெற



ஸ்லோன்ஸ் பாம்

"எந்த வலிக்கும் ஏற்ற மருந்து"

ஸ்லோன்ஸ் லினிமெண்ட்-
டையும் உபயோகிக்கலாம்.
செறிந்து தடவினால் போதும்;
இதமான அதன் வெப்பம்
உடனடி நிவாரணம் தரு
வதை உணரலாம்.



வார்னர்-லாம்பர்ட் பார்மசூடிகல் கம்பெனி (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது.

பயந்தாங்கொள்ளி



காளத்திநாதன்

போர்த்துப் படுத்திருக்கும் தாயின் முக்காட்டைக் குழந்தை மெல்ல விலக்கிப் பார்ப்பது போல், பிராட்வே பஸ் ஸ்டாண்டில் படித்திருந்த இருளை மின் விளக்குகள் விலக்கிக் கொண்டிருந்தன. இன்னும் கொஞ்ச நேரம் போனால் பிராட்வே பளபள வென்று சிரிக்கத் தொடங்கி விடும்.

குழாயில் முகத்தைக் கழுவிக் கொண்ட டிரைவர் மாணிக்கம் நேராக நாயர் கடையை நோக்கி நடந்தான். ஆறு பைசாவை எடுத்துக் கொடுத்து விட்டு ஒரு 'சிங்கிள் சாயா'வை வாங்கி உறிஞ்சிக் குடித்தான். பையில் கையை விட்டு ஒரு பீடியை எடுத்து, நாயரிடம் நெருப்புக் கேட்டு வாங்கி அதைப் பற்ற வைத்தான். பீடியை நிம்மதியாக இழுத்து வாய் நிறையக் 'குப்'பென்று புகை விட்டபடி நிமிர்ந்து ஆகாசத்தைப் பார்த்தான். நீலம் படர்ந்து வானம் அழகாகக் காட்சி தந்தது.

டிரைவர் மாணிக்கம் உற்சாகத்துடன் நடை போட்டான்.

''என்ன தம்பி? இன்னைக்குக் காலையிலே ஒன் வண்டிதானே மொதல்லே போவுது?'' என்று கேட்டுக் கொண்டே எதிரே வந்தான் டிரைவர் ரங்கசாமி. அவன் மாணிக்கத்தை விட மூத்தவன். அதனால் அவனைக் கண்டதும் பீடியை அணைக்க எத்தனித்தான் மாணிக்கம். ''நமக்குள்ளே இந்த மரியாதை யெல்லாம் எதுக்குத் தம்பி? நான் ஒங்கிட்டே நெருப்புக் கேக்கத்தான் வந்துக்கிட்டு இருக்கேன்....'' என்றான் ரங்கசாமி.

அவனுக்குப் பீடி நெருப்பைக் காட்டிக்கொண்டே, ''இன்னைக்கு 5-20க்கு நான்தான் பொறப்படறேன்'' என்றான் மாணிக்கம்.

''நீ எப்பவும் நிதானமா போறப் புள்ளெ. ஒனக்குச் சொல்ல வேண்டியது இல்லேதான். ஆனாலும் போராத காலம்னு ஒண்ணு இருக்குல்லே? அதனாலே சொல்றேன். நேத்து நடந்த 'ஆக்ஸிடென்'டாலே 'டிராபிக்' இன்ஸ்பெக்டருங்க ரொம்ப ஜரூரா இருக்காங்க. 'ஸ்பீட்' எடுத்து மாட்டிக்காதே!''

''நல்லது ரங்கசாமியண்ணே! நான் வரேன்...'' என்று திரும்பினான் மாணிக்கம்.

சரியாகக் காலை 5-20க்குப் பஸ்ஸில் ஏறித் தன் இடத்தில் உட்கார்ந்தான் மாணிக்கம். எதிரே மாட்டியிருந்த முருகன் படத்துக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு, வழக்கம் போல் காலண்டர் தேதியைக் கிழித்து விட்டுக் 'கிர்' போட்டான். பஸ் நிறைந்து வழிந்தது.

ரவுண்ட் டாணா திரும்பி நீண்ட மவுண்டு ரோட்டில் பஸ் நிதானமாக வந்து கொண்டிருந்தது.

''என்னடா, மாணிக்கம்! சுரத்தே இல்லையே! கொஞ்சம் வேகமாப் போடா!'' என்றான் கண்டக்டர்.

''இவன் என்னமோ பொம்பளே நடந்து போகிறாப் போல பஸ் ஓட்டறானே! இந்த நேரத்தில் இப்படிப்பட்ட ரோட்டுலே எவ்வளவு வேகமாக ஓட்டணும்!'' என்று சிரித்தான் 'செக்கிங்.'

''நீங்கள்ளாம் இப்புடித்தான் பேசுவீங்க; டிராபிக்கிலே மாட்டிக்கிட்டா நான்தானே கைகட்டிப் பதில் சொல்லணும்....'' என்று 'முகத்தைக் காட்டினான்' மாணிக்கம்.

இப்பொழுது பிரயாணிகளும் பேச்சில் கலகலப்பாகக் கலந்து கொண்டார்கள்.

''என்ன உலகத்திலே இல்லாத டிராபிக்? நீ சும்மா போப்பா!''

''அதுக்கில்லீங்க! நேத்து இங்கே ஒரு 'ஆக்ஸிடெண்டு' அதனாலே இங்கே டிராபிக் கண்ட்ரோல் இருக்கும்னு சொன்னாங்க...'' டிரைவர் திரும்பிப்பார்த்தபடி பதிலளித்தான்.

''இன்னு நீ எங்கிட்டயே புளிப்புக்குத்தறே? நான் இந்த வயசிலே எத்தனை டிராபிக் பார்த்திருக்கிறேன் தெரியுமா? அப்புடித்தான் வந்து உன்னை மடக்கட்டும். நீ ஏன் கவலைப் பட்டுக்கிறே? நான் கவனிச்சுக்கிறேன்! 'அடாடா! ஒன் வண்டியாப்பா'ன்னு பேசாமல் விட்டுட மாட்டாங்க?'' என்று கண்டக்டர் சுயபுராணம் படித்தபடி விரலை 'வி' மார்க்கில் உதட்டில் அழுத்திக் கொண்டு 'இசுக்' என்று வெற்றிலை எச்சிலைத் துப்பினான்.

கிண்டி திருப்பத்தில் பஸ்ஸை உடைத்துத் திருப்பி ஜிவ்வென்று வேகம் எடுத்தான் டிரைவர் மாணிக்கம்.

திடீரென்று விசில் சத்தம் கிர்ர் என்று கேட்டது. மாணிக்கம் வெலவெலத்துப் போனான். 'சடக்' என்று பிரேக் போட்டு விட்டுத் திருதிரு வென்று விழித்தான்.

மர நிழலில் நின்றிருந்த டிராபிக் இன்ஸ்பெக்டர் மாணிக்கத்தைக் கடுமையாகப் பார்த்தபடி, ''என்னமேன் இது, பஸ்ஸுன்னு நெனைச்சியா, இல்லே ஏரோப்ளேன்னு நினைச்சியா? நீதான் எதுக்கும் துணிஞ்ச கட்டை. பிரயாணிங்க கதி என்ன? டிரைவிங் லைசென்ஸை எடு....' என்று அதட்டினார்.

''சார்.... வந்து சார்...'' என்று உள்ளம் பதறி நடுங்கிய மாணிக்கம் ஒத்தாசைக்குக் கண்டக்டரையும் செக்கிங்கையும் திரும்பிப் பார்த்தான். அவர்கள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டிருந்தார்கள். பஸ் பிரயாணிகளில் ஒருவராவது வாயைத் திறக்க வேண்டுமே?

''இந்த மொரீனியிலே வந்துதான் சார், வேகம் எடுத்தேன். நீங்க வேணுமின்னு பாஸஞ்சருங்களைக் கேட்டுப் பாருங்க சார்.... இந்த ஒரு தடவை மட்டும் என்னை மன்னிச்சிடுங்க சார்!''

''சும்மா வேஷம் போடாதே. நான் இதுக்கெல்லாம் இரங்குகிறவன் இல்லே. ஒங்களையெல்லாம் கடுமையா தண்டிச்சால்தான் சரிப்பட்டு வருவீங்க. ஒன் டிரைவிங் லைசென்சைக் கொடு!''

நாற்பது மைல் வேகத்தில் வந்ததாகக் குறித்துக் கொண்டு, மாணிக்கத்தின் டிரைவிங் லைசென்ஸைப் பறித்துக் கொண்டு புகார்க் குறிப்பின் ஒரு பிரதியை அவனிடம் கொடுத்துக் கையெழுத்து வாங்கிக் கொண்டார் இன்ஸ்பெக்டர்.

கையும் காலும் தடதட வென்று நடுங்கப் பஸ்ஸில் ஏறினான் மாணிக்கம். அவனால் ஆக்ஸிலேட்டரைச் சரியாக மிதிக்கவே முடியவில்லை. வண்டி நத்தையாக நகர்ந்தது.

''இவரு புது இன்ஸ்பெக்டர் போலிருக்கு. நம்ப ஆளுன்னு மொதல்லே எனக்கு வணக்கம் போட்டிருப்பாரே. இந்த ஆளுகிட்டே என்ன பேச்சு, நாம பார்க்கிற இடத்துலே பார்த்துக்குவோமின்னுதான் பேசாமல் இருந்துட்டேன். அந்தக் கம்ப்ளெயின்டை இப்படிக் காட்டுடா மாணிக்கம்!'' என்றான் கண்டக்டர். பஸ் பிரயாணிகளும் அந்தக் காகிதத்தை உற்றுப் பார்த்தார்கள். ''நாற்பது மைலா? என்ன சார் அநியாயம்? இருபத்தஞ்சிகூட இருக்காதே!''

மாணிக்கம் மௌனமாகத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான். ''எம் புத்தியெ செருப்பால் அடிக்கணும். மவுண்ட் ரோடு எல்லாம் மெதுவா வந்துகினு இருந்தவன், இங்கே வந்து வேகம் எடுக்கணுமா? கண்டவங்க பேச்சைக் கேட்டா இப்படித்தான் அகப்பட்டுக்கினு முழிக்கணும்.'' பட் பட் என்று தலையில் அடித்துக் கொண்டு பரிதாபப்பட்டான்.

''ஏன்டா, இப்படி உடம்பை அலட்டிக்கிறே? ஒவர் ஸ்பீடுன்னு தலையைச் சீவிட மாட்டாங்க. நீ வேலையைப் பாரு. டிரைவருன்னு இது மாதிரி சமாசாரங்களைச் சாதாரணமா சீரணிக்கணும்....'' என்று உபதேசம் செய்தபடி காம்பை முறித்து வெற்றிலைகளை வாயில் போட்டுத் திணித்தான் கண்டக்டர்.

''என் லைசென்சை வேறே புடுங்கிக்கினாரே'' என்று குமுறினான் மாணிக்கம்.

''புடுங்கிக்கிட்டாமேடா! ஒன் பொழைப்பே போயிடுமா? நாளைக்கே நான் வாங்கித் தர்றேன்.... அந்த ஆப்பிஸிலே எல்லாரும் எனக்குத் தெரிஞ்சவங்கதான். நீ பயப்படாமல் வேகமா போ!''

பத்து மைலுக்கும் குறைந்த வேகத்தில் பஸ் சண்டியாக நகர்ந்து கொண்டிருந்தது.

''பின்னே என்னப்பா? வேகமாத்தான் போயேன். இனிமே யாரும் இருக்க மாட்டாங்க. நீ தைரியமா மிதி. ஒவர் ஸ்பீடுக்கு என்னு ஒரு அஞ்சி, பத்து அபராதம் போடுவாங்க. அவ்வளவுதான்....'' என்றார் பஸ் பிரயாணிகளில் ஒருவர்.

''நீங்க ஒண்ணு! இப்பல்லாம் புள்ளாமெ நூறு ரூபாய் போடுறாங்க. இதுக்கல்லாம் பயந்தா நடக்குங்களா? ஏதோ ஒரு சமயத்துலேதானே மாட்டிக்கிறோம்....'' என்று காவிப் பற்களைக் காட்டிக் கலகல வென்று சிரித்தான் கண்டக்டர்.

மாணிக்கத்தின் உள்ளத்தில் இடி விழுந்தது. ''ஐயையோ! நூறு ரூபாயா?'' என்று அலறினான். 'மரகதம்! மூணு மாசமா சேலை கேட்டுக்கினு இருக்கியே. இந்த மாசம் எடுத்துக் கொடுக்கலாம்னு இருந்தேன்...'

''சரிதான், உங்க முதலாளி கட்டிடுவாரு. நீ ஏன் கவலைப்படறே?'' என்றார் இன்னொரு பிரயாணி.

'எங்க முதலாளியா?' மாணிக்கத்தின் அடி வயிறு கபீர் என்று சுருங்கிக் கருகியது.

'' எங்க முதலாளிகிட்டே அதெல்லாம் நடக்காதுங்க. விஷயம் தெரிஞ்சாலே எரிஞ்சி விழுவாரு. யாரைக் கேட்டு ஒவர் ஸ்பீடு போனேன்னு கேப்பாரு!'' என்றான் செக்கிங்.

''அட, பாவமே! அதான் டிரைவர் வெயில்லே போட்ட கீரைத் தண்டு போல வாடிப் போயிட்டான். பாவம்!''

''பாவம் என்ன செத்தெ பாவம்? இதுக்கெல்லாம் பயப்படுகிறவன் பேசாம கிராமத்திலேயே ஏர் புடிச்சிருக்கணும். இங்கே பஸ் ஓட்ட வந்திருக்கக் கூடாது.'' பச்சாத்தாபம் இன்றிக் கழுத்தை முறிப்பது போல் பேசினான் கண்டக்டர்.

''ஏர் புடிச்சவனு? அதான் பஸ்ஸை இப்படி ஓட்டறான்....''

''நான் கிராமத்திலே ஏர் பார்த்திருக்கேன் சார்....அதுவாவது ஜல்தியா நகரும். இது பஸ்ஸா, சார், ஆமை கெட்டது போங்க.''


''இப்படிப் போனால் காஞ்சிபுரம் போய்ச் சேரப் பொழுது விடிஞ்சிடும் போ!''

''ஏன்டா, மாணிக்கம்! இவ்வளவு பேரு இப்படிப் பேசறுங்களே ஒனக்குத் துளியாவது ரோஷம் இல்லையாடா? நமக்குப் பின்னாலே பொறப்பட்ட பஸ்ஸுங்களெல்லாம் முன்னாலே போயிடுச்சி பார்த்தியா? இப்படிப் போனா எப்பத் திரும்பறது? இன்னைக்கு ரெண்டு டிரிப் அடிக்கணுமே! உன்னாலே எல்லாருக்கும் என்ன அவஸ்தை பார்த்தியா?'' என்று சிடுசிடுத்தான் கண்டக்டர்.

சாட்டையடி பட்ட சிங்கம் போல் சிலிர்த்துச் சீறினான் மாணிக்கம். 'வேகமாத்தானே போவணும்? இதோ ஓட்டறேன். ஒங்களை



ஸேப்டி பின்களில் யூனிடிக்கு பதில் வேறொன்றுமேயில்லை



- ★ நேர்த்தியான தரம்
- ★ திருத்தமாக அமைக்கப்பட்ட தலைப்பாகம்
- ★ கூரான முனை
- ★ கனமான நிக்கல் பூச்சு
- ★ உன்னத தயாரிப்பு

'யூனிடி'யே ஜார்ஜ் குட்மேன் லிமிடெட்டின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்காகும்;
ரிஜிஸ்டர் செய்யப்பட்ட உபயோகிப்பாளர் :

கெஸ்ட், கீன், வில்லியம்ஸ், லிட்.,
கல்கத்தா பம்பாய் மதராஸ் புது டில்லி

GKW5187A

வெல்லாம் ஒரு நிமிஷத்திலே காஞ்சிபுரத்திலே கொண்டு போய்த் தள்ளிடறேன்.... என் மானத்தைச் சதை சதையாகக் கூறு போட நீங்களே, பார்ப்போம்!'

காற்றைக் கிழித்துப் பஸ் கன வேகமாய்ச் சீறிச் சினந்து பாய்ந்தது. 'ஹோ, ஹோ' என்ற எதிர்க் காற்று பிரயாணிகளின் முகத்தில் அறைந்து தடிப்பான உணர்ச்சியைத் தேகத்தில் பாய்ச்சியது.

''இப்பத்தான் டிரைவருக்குச் சூடு பிடிச்சிருக்கு....''

''ஜோர்! இதுவல்ல வேகம்!''

''அப்பப்பா! பல்லு கிட்டிப் போவுது. ஒடம்பே ஆடுது. கொஞ்சம் மெதுவாத்தான் போவேம்மா!''

'மெதுவாவா? ஒங்களை ஆகாயத்திலேயே தூக்கிப்போறேன் பார்! என்னைப் பைத்தியக்காரன்னு நெனைச்சா இஷ்டம் போல் ஆட்டிப் படைக்க மூடமாக்குறீங்க? ஹ ஹா!'

விநாடிக்கு விநாடி பஸ்ஸின் வேகம் உறுமிக் கொண்டு அதிகரித்தது.

''டே, மாணிக்கம்! கொஞ்சம் கொறைச்சுக்கோடா.... கொழந்தைங்க பயப்படுது!'' என்று நடுங்கிய குரலில் கூறினான் கண்டக்டர்.

''மெதுவா போப்பா!''

''டிரைவர் வேகத்தைக் குறைச்சுக்கோ. எனக்கு வாந்தி வருது....''

''இப்புடிப் போனா எதிலேயாவது மோதிடுவேப்பா.... வேகத்தைக் குறை!''

பிரயாணிகளின் அழுகுரலும் அலறலும் அவனுடைய காதில் விழுந்தால்தானே? அவன் எத்தனை மூர்க்கமாக ஓட்டுகிறான்? இதன் முடிவு என்ன ஆகும்? எல்லாரும் கிலி பிடித்தது போல் நடுநடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று என்ன? 'லொடக்' என்று மாணிக்கத்தின் இருதயம் கழன்று உருண்டோடிற்று.

அது அவனுடைய இருதயம் அல்ல; பஸ்ஸின் முன் சக்கரங்களில் ஒன்று என்பது முன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சில பிரயாணிகளுக்கு உடனே தெரிந்து போயிற்று. உருண்டோடும் அந்தச் சக்கரத்தையே வெறித்து நோக்கிக் கூக்குரலிட்டார்கள்.

'நட..... நட..... நிறு.... நிறு....''

பஸ்ஸோடு சேர்ந்து ஒவ்வொருவருடைய உள்ளமும் ஆடியது; அடித்தது.

''அம்மா!'' என்று அலறி ஒரு குழந்தை தாயைக் கட்டிக் கொண்டது. அவள், ''கடவுளே! என் குழந்தையைக் காப்பாற்று'' என்று கேவி அழுதாள்.

''அட பாவி! சக்கரம் கழன்று ஓடுது. இவன் பாட்டுக்குக் கண்ணை மூடிக்கிட்டு ஓட்டுறானே.....''

''இவன் நம்மை இன்னைக்குக் கொன்னுத் தள்ளிட்டுத்தான் மறு வேலை பார்க்கப் போறான்....''

''நிறுத்தேண்டா! உன்னைக் கட்டிடவே வெக்க....''

''இவனை நம்பிப் பிரயோசனம் இல்லே சார். நம்ம உசிரைக் காப்பாத்திக்கணுமின்னு நாம பஸ்ஸை விட்டுக் குதிச்சாத்தான் முடியும்....''

''இப்படித் தெறிகெட்டு ஓடறே பஸ்ஸிலிருந்து குதிச்சா பாளுத்த ஒரு எலும்பு கிடைக்காது.''



''இந்த மர்ம நாவலைக் கொஞ்சம் ருசி பார்க்கலாம் என்று திறந்தேன். அதை எடுக்க வந்து விட்டான். எது! நம்மை விடப் பெரிய புத்தகப் புழுவா இருப்பான் போலிருக்கே இவன்!''

''ஐயையோ! பிரேக் போடேண்டா, மரம் மரம்.... மோதப் போறது.....''

கண்டக்டருக்கும் செக்கிங்கிக்கும் குடலை இழுத்து நடு ரோட்டில் போட்டது போல் ஆகிவிட்டது. ''அடே, மாணிக்கம்! என்ன அநியாயண்டா? சட்டுனு பிரேக் போடுடா... நம்ம நலை விதிப்படி ஆவுது!'' என்று அலறினார்கள்.

ஸ்டியரிங்கைக் கெட்டியாகப் பிடித்தபடி மாணிக்கம் திரும்பிப் பார்த்தான். வெளிறிப் போன முகம். அதை வேதனை குதறியெடுத்திருந்தது. ''கூச்சல் போடாதீங்க! எனக்கு இப்பவே கைகால் ஒதறுது. சடார்னு பிரேக் போட்டா வண்டி கவுந்திடும். இந்த வேகத்திலேயே போய் வண்டி நிக்கற இடத்திலே நிக்கட்டும்....'' உயிரைப் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு வார்த்தையாக உச்சரித்தான் டிரைவர்.

டமார்!

உருண்டோடிய சக்கரம் ஒரு மரத்தில் மோதிக் கழித்துக் கொண்டு கீழே சாய்ந்தது. பஸ் கவிழ்வதற்கு அது பிள்ளையார் சுழி என்று பிரயாணிகள் கதிகலங்கி விட்டார்கள்.

அத்தனை பேரிலும் அந்த ஒரே ஒருவன் மட்டும் நெஞ்சத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு பஸ்ஸை ஓட்டிக் கொண்டிருந்தான். இத்தனை நாட்களும் நம்முடைய உயிர் நம்மிடம் இல்லை என்ற நிம்மதியில், காரியங்களின் காரணார்த்தவிகல்பங்களைப் பற்றியோ, பலாபலன்களைக் குறித்தோ கவலைப்பட்டுக் கொள்ளாமல் தன் போக்கில் வாழ்ந்து வந்தவன் டிரைவர் மாணிக்கம். இன்று இவ்வளவு பேருடைய உயிரும் தன் கையிலிருக்கும் பரிதாப நிலையை நினைத்ததும் அவன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது.

ஆயிற்று... பிரயாணிகள் விடுகிற பெருமூச்சில் நேரம் கரைந்து விநாடிகளாக விநிர்த்துக் கொண்டிருந்தது. பஸ்ஸின் வேகமும் தணிந்து கொண்டிருந்தது.

ஆஹா, என்ன ஆறுதல், என்ன இன்பம்!

இந்தப் பிரயாணிகளின் கழுத்தை இறுக்கப் பாசக் கயிறு வீசிய எமதர்ம ராஜன், இன்னும் நேரம் வரவில்லை யென்று தன் தவற்றை உணர்ந்து வீசிய கயிற்றை 'விசுக்' என்று சுருட்டிக் கொண்டுவிட்டானே!

பிரயாணிகள் எல்லாரும் குதூகலப்பட்டார்கள், குதித்தார்கள்! பெட்ரோல் இல்லா



''என்னங்க அந்த இடத்திலே போய்த் தலையில் சொட்டை விழுந்திருக்கு !''

''சின்ன வயசுலே நாகஸ்வர வித்வானுக்குத் தானம் போட்டேன். அவர் அடிக்கடி குட்டிக்குட்டி அந்த இடத்திலே சொட்டை விழுந்துடுத்துங்க!''

மல் மூன்று சக்கரங்களில் உருண்டு வந்த பஸ் மூச்சைப் போட்டு விட்டு நின்று போயிற்று. பிரயாணிகள் ஜயகோஷம் போட்டார்கள்.

கதவைத் திறந்து கொண்டு கீழே குதித்த டிரைவர் மாணிக்கம் கண்டக்டரையும் செக்கிங்கையும் கட்டிப் பிடித்துக் கொண்டான். ''எல்லாம் கடவுள் செயல்! மூணாவது பர்லாங்கில் கழன்று போன சக்கரத்தைப் போய் எடுத்து வந்து மாட்டுங்க. நான் அது வரைக்கும் இப்படிக் கொஞ்சம் நிழல்லே படுக்கறேன். என்னாலே நிக்கவே முடியலே. காலை வெட்டிப் போட்டாப்பலே இருக்குது!''

கண்டக்டரும் செக்கிங்கும் சக்கரத்தை உருட்டி வர ஓடினார்கள்.

ஆகாயத்தை அண்ணாந்து பார்த்த மாணிக்கம், ''தெய்வமே! தெய்வமே!'' என்று கண்ணீர் விட்டுக் கதறினான். பக்கத்து மர நிழலில் அப்படியே சுருண்டு படுத்து விட்டான்.

''நல்ல டிரைவர் சார், இன்னிக்கு நம்ம உயிரையெல்லாம் காப்பாத்திட்டானே!''

''மெதுவா சொல்றேனே, இவன் இடத்திலே இன்னொருத்தன் இருந்திருந்தா நம்ம கதி என்னவாயிருக்குமோ?''

''டிரைவருன்னு இப்படி இருக்கணும் சார். நாமெல்லாம் எப்படிக் கதிகலங்கிக் கூச்சல் போட்டோம்? மனுஷன் பயந்திருந்தான்னு என்ன கதி? தைரியசாலி!''

''எம்டன்னு! நாம ப்ரேக் போடுடான்னு கத்தினோமே, போட்டிருந்தான்னு என்ன நடந்திருக்கும் தெரியுமா?''

''பஸ் கொண்டை சாஞ்சி நம்ம கொடலே விழுந்து வெளியே போட்டிருக்கும்!''

''ஆமான்னு! டிரைவராக்கும் நம்மைக் காப்பாத்தினது! அவனுக்கு நாம மட்டும், இல்லே, நம்ப குடும்பம் எல்லாமே கடமைப் பட்டிருக்கு....''

''வாஸ்தவமான பேச்சு சார். நம் நன்றி விசுவாசத்தைக் காண்பிக்க அவனுக்கு ஏதுவாவது செஞ்சாக் கூட நல்லதுன்னு தோன்றது.''

''ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்திப் பொன்னாடை போர்த்தலாம்....''

''பதினாறு காரட் பொன் மோதிரம் ஒன்று பரிசு குடுக்கலாம்...''

''இதெல்லாம் சரிப்படாது சார். நம்மாலே தான் டிரைவர் 'ஓவர்ஸ்பீடு' எடுத்தான். அதுக்கு நூறு ரூபா வரை அபராதம் போடுவாங்கன்னு சொன்னாங்க....நாம ஆளுக்கு ரெண்டு ரூவா போட்டு அந்தத் தொகையைக் குடுத்திடுவோம். அதுதான் அவனுக்குக் காலத்தில் செய்த உதவியாக இருக்கும். நமக்கும் ஆத்ம திருப்தியை அளிக்கும்!''

''பேஷான யோசனை சார். அப்படியே செய்திடுவோம்.''

''அதான் கரெக்ட் சார்...''

''இதோ கண்டக்டரும் செக்கிங்கும் அந்தச் சக்கரத்தைத் தள்ளிக்கிட்டு வர்றாங்க...''

கண்டக்டர் கையில் ஸ்பானரை எடுத்துக் கொண்டு பஸ்ஸுக்கு அடியில் மல்லாந்து படுத்தான். அவனுக்கும், பஸ்ஸுக்கும், இடையே 'ஜாக்கி' இருந்தது. செக்கிங்கும் சில கருவிகளை எடுத்து வந்து அவனுக்கு ஒத்தாசை செய்தான். அவர்கள் இரண்டுபேரும் அந்தச் சக்கரத்தை மாட்டுவதைச் சின்னக் குழந்தைகளைப் போல் அத்தனை பிரயாணிகளும் கண்களை அகல விரித்து ஆவலோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கால் மணி நேரத்துக்கெல்லாம் சக்கரத்தை மாட்டியாகி விட்டது. ''ஜல்தியா ஏறுங்க. சீக்கிரம் புறப்பட்டுப் போகலாம்'' என்றான் கண்டக்டர். பிரயாணிகள் இடித்துக்கொண்டு பரபரவென்று பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தார்கள். டிரைவர் மாணிக்கம் எழுந்து வருவதற்காகக் கண்டக்டர் 'பூம் பூம்' என்று ஹாரனை அழுத்தினான்.

பதில் இல்லை.

''படுத்தால் பொணத் தூக்கம் தூங்குவானே, எனக்குத் தெரியாதா?'' என்று அலுத்துக்கொண்டே மாணிக்கத்தின் அருகில் போய் அவனை உலுக்கி எழுப்பினான் கண்டக்டர்.

''டேடே! என்னடா இது?'' என்று முகத்தைத் திருப்பி மூக்கில் கைவைத்துப் பார்த்தான் கண்டக்டர்.

மூச்சு இல்லை.

''ஐயோ! மாணிக்கம் போயிட்டானே...'' என்று கண்டக்டர் அலறி அழுதான்.

''என்னது? செத்துட்டானா?'' என்று எல்லாரும் பஸ்ஸை விட்டு இறங்கி ஓடிவந்தனர்.

''பாவம், ஆள் 'ஷாக்' அடிச்சிச் செத்திருக்கான்...''

''இப்போ என்ன நடந்தது? எதுக்கு இவன் இவ்வளவு உணர்ச்சி வசப்பட்டிருக்கணும்?''

''சேசே! சுத்தப் பயந்தாங்கொள்ளி... ரொம்பப் பலவீனமான இதயம்...''

''ஆமான்னு!''


''எனக்கு அப்பவே தெரியும் சார். இது போன்ற பயந்தாங்கொள்ளிக்கெல்லாம் ஹார்ட் ரொம்ப வீக்காகத்தான் இருக்கும். ஏதோ நமக்கெல்லாம் ஆயுசு கெட்டி. அதனாலே தப்பிச்சோம்.''

இதை ஆமோதிப்பது போல் அத்தனைபேர் முகத்திலும் பயப் பிராந்தி நீங்கிய ஓர் ஆறுதல்; அமைதி. ஆனால் இந்த ஆறுதலும் அமைதியும் டிரைவர் மாணிக்கத்தின் முகத்தில் பொன்னொளி படர்ந்து பெருமிதம் பூத்த சாந்திக்கு ஈடாகுமா?

தலை சுழல்வது போல் இருந்தது மாடசாமிக்கு. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. கால்கள் ஒன்றோடொன்று பின்னிக்கொள்ள முயற்சி செய்வது போல் தள்ளாடின. தார் ரோட்டின் சூடு தாங்காமல் இருப்பதற்காகக் கைக்கு அகப்பட்ட கோணிக்கந்தைகளைக் கால்களில் சுற்றிக் கட்டிக் கொண்டிருந்தான். நடந்து நடந்து கிழிந்துபோன பகுதிகளில் சூடு தாக்கும்போது சுரீரென்று உச்சந் தலை வரையில் உறைத்தது. சில இடங்களில் கால்கள் தார் ரோட்டிலேயே ஒட்டிக் கொண்டு எடுக்க வராமல் இருந்துவிடுமோ என்று பயந்தான். அவன் இழுத்துச் சென்ற கை வண்டியின் முன் கயிறு அவனது ஒட்டிய வயிற்றில் இடித்து அதன் வெறுமையை அவனுக்கு உணர்த்தியது. வெயில் வெயிலாகவா காய்ந்து கொண்டிருந்தது? நெருப்பை வாரிச் சொரிந்து கொண்டிருந்தது வானம். எந்த இடத்திலும் ஒரு பொட்டு நிழல்கூட இல்லாத சாலை வழியே இவ்வளவு தூரம் வந்தாயிற்று. இன்னும் கொஞ்ச தூரம் போனால் சாலையின் திரும்பு முனை. அங்கு எந்தக் காலத்திலோ, எந்தப் புண்ணியவானோ நட்டு வைத்த வாகைமரமொன்று தண்ணென்று நிழல் பரப்பிக் கொண்டிருந்தது. இங்கிருந்து அந்த நிழலைப் பார்க்கும்போதே மாடசாமிக்கு உடலெல்லாம் துடித்தது. அனல் பொறி பறந்து கொண்டிருந்த அவன் உடலின் ஒவ்வோர் அணுவும் அந்த நிழலை அடைந்துவிடத் துடித்தது. அந்தத் தவிப்பு அவன் உடலில் ஒரு புதிய வேகத்தைத் தூண்டி விட்டது. ஆவேசம் கொண்டவன் போல் கால்களை எட்டிப் போட்டுக் குனிந்து குனிந்து வலித்து வலித்து வண்டியை இழுத்துக் கொண்டு சென்றான்.

இந்த நிழலில் கொஞ்ச நேரம் உட்கார்ந்து களைப் பாறிக் கொண்டு போலே செல்ல வேண்டும். இன்னும் இரண்டு மைல் தூரம் இந்த வண்டியை இழுத்துக் கொண்டு நடந்தாக வேண்டுமே! இவ்வளவு நல்ல நிழல் இருக்கும் இந்த இடத்தில் ஒரு குழாயை வைத்திருக்கக் கூடாதா நகரசபைக்காரர்கள்? தண்ணீரைக் குடித்து வயிற்றை நிரப்பிக் கொண்டாவது கொஞ்ச நேரத்துக்குப் பசியை மறந்திருக்கலாமே!

இடுப்பில் தடவிப் பார்த்தான். நல்ல வேளை! கன்



அவனுக்கு அவள்

உமாசந்திரன்

ஸங்கரேலென்று ஒரு பாக்குத் துண்டும், சுண்ணாம்புடன் சேர்ந்து காய்ந்து போயிருந்த ஒரு வெற்றிலைச் சருகும் இடுப்பில் முடிந்து வைத்திருந்தவை அப்படியே இருந்தன. பாக்குத் துண்டை வாயில் போட்டுக் குதப்பிக் கொண்டே வெற்றிலைச் சருகில் படிந்திருந்த சுண்ணாம்பைக் கையால் தேய்த்து உதிர்த்து விட்டான். அதை அப்படியே சுருட்டி வாயில் போட்டுக்கொண்டதும் அவனுக்குச் சிறிது தெம்பு வந்தது. ஒரு புகையிலைக் காம்பு இருந்தால் இன்னும் நன்றாயிருக்கும். ஆனால் அதற்கெல்லாம் ஆசைப்பட்டால் நடக்குமா?

அவன் நின்ற நிழல் பகுதியிலிருந்து பத்தடி தூரத்தில் பிரயாணிகளை வெய்யிலில் பொரிய வைக்க வேண்டும் என்பதற்காகவே ஏற்பாடு செய்தது போல ஒரு பஸ் ஸ்டாண்டுக் கம்பத்தை நிறுத்தி வைத்திருந்தார்கள். பஸ் ஸ்டாண்டை நோக்கி வந்து கொண்டிருந்த ஒருவர் அங்கிருந்த வெய்யிலுக்கு அஞ்சி வாகை மர நிழலில் வந்து நின்றார். ஸில்க் ஷர்ட், ஜரிகை அங்கவஸ்திரம், காதில் கடுக்கன் எல்லாம் அவர் ஒரு சங்கீத வித்வான் என்பதைப் பறைசாற்றின. அந்தத் தொழிலுக்கே உரியதான ஒரு வெற்றிலைப் பெட்டியும் அவர் கையில் இருந்தது. பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் நேரத்தை வீணாக்காமல் அவர் வெற்றிலைப் பெட்டியைத் திறந்தார். வறுவல் சீவலை எடுத்து வாயில் நிரப்பிக் கொண்ட பிறகு, துளிர் வெற்றிலையை ஒவ்வொன்றாக எடுத்துச் சுண்ணாம்பு தடவி, நரம்பு கிழித்துச் சுருட்டி வாயில் போட்டுக் கொண்டு மெல்ல ஆரம்பித்தார். அடுத்து அந்த மனிதர் வெற்றிலைப் பெட்டியின் ஓர் அறையிலிருந்து ஒரு கொத்து வாசனைப் புகையிலையை எடுத்துக் கையில் போட்டுக் கொண்டு கண்களால் அதன் அழகை ஒரு முறை ரசித்துப் பிறகு விரல்களால் தட்டி அதன் ஸ்பரிசத்தை ஒரு முறை ரசித்தார். பின்பு பக்குவமாக வாயைத் திறந்து உள்ளங்கையிலிருந்த புகையிலையை வாய்க்குள் கவிழ்த்துக் கொண்டார். வெற்றிலைச் சாறும் புகையிலைச் சாறுமாகச் சேர்ந்து வாயில் நிரம்பியதும் அவர் முகத்தில் மலர்ச்சி தோன்றியது. தம்மையறியாமல் ஒரு ராக ஆலாபனையை வாய்க்குள்ளேயே முனகிக் கொண்டார்.

வாசனைப் புகையிலையின் கம்மென்ற வாசனை மாடசாமியின் மூக்கைத் துளைத்தது. அவனுக்குத் தேவையாயிருந்ததெல்லாம் ஒரு புகையிலைக் காம்புதான்.

அவரைக் கேட்டால் என்ன? கொடுத்தால் லாபம்; கோபித்துக் கொண்டால் நஷ்டம் ஒன்றுமில்லை. இருவரும் ஒரே நிழலில் ஒதுங்கி நிற்பவர்கள். வாகை மரம் அவருக்குமட்டும் அதிக நிழலைக் கொடுத்துவிடவில்லையே? இப்போதைக்கு இந்த உறவு அவர்களிடையே இருக்கிறதல்லவா?

மாடசாமி துணிந்து விட்டான். மெதுவாக ஜரிகை அங்கவஸ்திரக்காரர் எதிரில் போய் நின்று, ''ஸார்..'' என்று விளித்தான்.

''என்ன?''

''கொஞ்சம் போயிலே...''

சங்கீத வித்வான் மாடசாமியை மேலும் கீழுமாகப் பார்த்தார். அவர் முகத்தில் கடுகடுப்புத் தாண்டவமாடியது. ஆனால் அதிகக் கடுமையைக் காட்ட அது சந்தர்ப்பமில்லையென்று நினைத்தாரோ என்னவோ, ஆள் நடமாட்டமில்லாத அந்தத் தனியிடத்தில் அவனுடைய கை ஓங்கிவிட்டால் ஆபத்து என்று நினைத்திருக்கலாம். ஒன்றுமே பேசாமல் வெற்றிலைப் பெட்டியைத் திறந்து கொஞ்சம் புகையிலையை எடுத்து ஒரு வெற்றிலையில் சுருட்டி வேண்டா வெறுப்பாக அவனிடம் எறிந்தார். மாடசாமி அதை லாகவமாகப் பிடித்துக்கொண்டான்.

அப்போது அந்த வழியே ஒரு டாக்ஸி வந்தது. ஜரிகை அங்கவஸ்திரத்தைப் பார்த்ததும் வேகத்தைத் தணித்து நிழலோரமாக ஓட்டிய டாக்ஸி டிரைவர் சங்கீத வித்வானை எட்டிப் பார்த்தவாறு இரண்டு மூன்று முறை ஹார்னை அடித்தான். சங்கீத வித்வானின் மனத்தில் சபலம் தலைதூக்கியது. பஸ் வருகிறதா என்று சாலையில் நோட்டம் விட்டார். ஒரே நிழலில் மாடசாமியுடன் தனித்து நிற்பதை விட டாக்ஸிக்குச் செலவு செய்வது மேல் என்று நினைத்தாரோ என்னவோ, மீட்டரைப் போடச் சொல்லி டாக்ஸியில் ஏறி உட்கார்ந்து கொண்டார். அலட்சியமாக மாடசாமியின் பக்கம் திரும்பி அவர் பார்த்த பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள் தொனித்தன. போதாக் குறைக்கு வாயில் அடக்கியிருந்த புகையிலைச் சாற்றையும் கொப்புளிப்பது போல் வெளியே துப்பிவிட்டுத் தலையை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டார். அதே சமயம் ஒரு பஸ்ஸும் அவரைப் பழி வாங்குவது போல் ஸ்டாண்டில் போய் நின்று நிதானமாகவே அங்கிருந்து கிளம்பியது.

''டாக்ஸியை ஏன்தான் கூப்பிட்டேனோ?'' என்று ஜரிகை அங்கவஸ்திரக்காரர் முணுமுணுத்துக் கொண்டிருக்கும்போதே டாக்ஸியும் பஸ்ஸைப் பின் துரத்தியது.

பசியும் களைப்பும் சேர்ந்து வாட்டிக் கொண்டிருந்த நிலையில் கூட மாடசாமியால் இந்தச் சம்பவத்தின் நகைச்சுவையை ரசிக்காமலிருக்க முடியவில்லை. ஒட்டிய வயிறு குலுங்கிக்கொண்டு விழும்போல் சிரித்துக் கொண்டே கைவண்டியின் முன் சட்டத்தில் போய் உட்கார்ந்து வண்டியில் அடுக்கியிருந்த சிமெண்டு மூட்டைகளில் சாய்ந்து கொண்டான். வெற்றிலையில் சுருட்டியிருந்த வாசனைப் புகையிலை அவன் கையில் அப்படியே இருந்தது. அதைப் பிரித்து வாயில் போட்டுக் கொண்டான். மறு கணம் அவனுக்கு அந்த வாசனையைத் தாங்க முடியாமல் வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது. புகையிலையோடு வெற்றிலை பாக்கையும் சேர்த்து வெளியே துப்பிவிட்டான்.

''சே, சே! இந்த நாத்தம் புடிச்ச போயிலையை எப்படித்தான் போட்டுக்கறாங்க! வாசனைப் போயிலையாமில்லே, வாசனைப் போயிலை! வயத்தை எப்படிக் கொமட்டி எடுக்குது!'' என்று மீண்டும் மீண்டும் காறிக் காறித் துப்பி அந்தக் குமட்டல் உணர்ச்சியைப் போக்கிக்கொள்ள முயற்சித்தான்.

மாடாக உழைப்பதென்றால் மாடாகவே உழைக்கப் பிறந்தவன் மாடசாமி. ஆனால், இரண்டு நாட்களாக அதிர்ஷ்டம் அவன் பக்கம் திரும்பாமலே மோசம் செய்துவிட்டது! அவ

னுக்குத் தெரிந்த சிமெண்டுக் கிடங்குகளிலெல்லாம் என்ன காரணமோ வந்து கேட்டவர்களுக்கெல்லாம் ஸ்டாக்கே இல்லையென்று கையை விரித்துக் கொண்டிருந்தார்கள். சிமெண்டு மூட்டைக்கே தகராறு யிருந்தபோது அவனுடைய கை வண்டிக்கு கிராக்கி ஏது? சொந்தத்துக்காவது கைவண்டி வைத்துக் கொண்டிருந்தானு என்றால் அதுவும் கிடையாது. கிராக்கி எதாவது குதிர்ந்தால்தான் உடனே ராவுத்தரிடம் ஓடிப்போய் வாடகைக்குக் கைவண்டி பிடித்து வருவான். இரண்டு நாட்களாக ராவுத்தரிடம் செல்ல வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. அன்றாடம்காய்ச்சி வாழ்க்கையில் இப்படிப் பள்ளம் விழுந்தால் எப்படிச் சமாளிக்க முடியும்?

இரண்டு நாட்களாக ஏதோ இருந்ததைக் காய்ச்சிக் கால்வயிற்றுக் கஞ்சி குடித்தாயிற்று. இன்னும் மற்ற நாட்களைப் போல் ஏமாற்றமடைய நேர்ந்தால் அந்தக் கால் வயிற்றுக் கஞ்சிக்குக்கூட வழியிருக்காதே என்ற ஏக்கத்தை வயிற்றில் நிரப்பிக்கொண்டுதான் அன்று வேலைக்குப் புறப்பட்டிருந்தான் மாடசாமி. உச்சிப் பொழுது வரை ஓரிடத்திலாவது அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. சரியாக உச்சித் தறுவாய்க்குத்தான் ஒரு கிடங்குக்காரர் அவனைக் கூப்பிட்டார். இருபது மூட்டை சிமெண்டை நான்கு மைல்களுக்கு அப்பால் உள்ள ஓரிடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு இரண்டு ரூபாய் தருவதாகக் கூறினார், அந்தத் தாராள மனம் படைத்தவர். கெஞ்சிக் கதறி அந்தக் கூலியை மூன்று ரூபாயாக்குவதற்குள் மாடசாமிக்குப் போதும் போதுமென்று ஆகிவிட்டது. அந்தப் பணம் கூட சிமெண்டு மூட்டைகளைச் சேர்க்குமிடத்தில்தான் வாங்கிக் கொள்ள வேண்டும். வண்டிக்கார ராவுத்தருக்குரிய வாடகை அரை ரூபாயை முன் பணமாகக் கொடுப்பதற்குக்கூடக் கிடங்குக்காரர் உதவி செய்ய மறுத்துவிட்டார். ராவுத்தர் காலில் விழுந்து கஷ்ட நிலையைச் சொல்லி அழுது, கூலியை வாங்கியதும் முதல் காரியமாக வாடகையைக் கொண்டு வந்து கொடுப்பதாக உறுதிமொழி கூறிய பிறகுதான் உள்ளதுக்குள் மோசமான ஒரு வண்டியை எடுத்துப் போக அனுமதித்தார் ராவுத்தர். ஓர் ஆளாகவே மூட்டைகளை வண்டியில் ஏற்றி ஓர் ஆளாகவே அந்த ஒரு டன் பாரத்தை இழுத்துக்கொண்டு அந்தக் கடும் வெய்யிலில் புறப்பட்டிருந்தான்.

எப்படியோ கஷ்டப்பட்டுப் பாதி தூரத்திற்குமேல் வந்தாயிற்று. இன்னும் ஒரு மைல். மிஞ்சிப் போனால் ஒன்றரை மைல். ஒரு மூச்சுப் பிடித்து இழுத்துச் சென்றால் போதும். கிடங்குக்காரர் கொடுத்த சீட்டைக் காட்டிக் கூலிப் பணத்தை வாங்கிக் கொண்டுவிட்டால் அப்புறம் அவன் ராஜா தான். பன்னிரண்டு காசு செலவு செய்து ஒரு புரை ரொட்டியும் டீயும் சாப்பிட்டுவிட்டு ஒரே ஓட்டமாகத் திரும்பிச் சென்றுவிடலாம். ராவுத்தருக்குக் கொடுத்தது போக மிஞ்சியதை அஞ்சலை கையில் கொண்டு கொடுத்தால் நான்கு நாளைக்கு அவன் வயிறு வாடாமல் பார்த்துக் கொள்வாள்!

அஞ்சலையின் நினைப்பு வந்ததும் மாடசாமியின் எண்ணங்கள் வேறு திசையில் செல்ல ஆரம்பித்தன. நான்கு வருஷங்க



''உனக்கு உங்கம்மா மாதிரி பல் வரிசை அழகா இருக்கு...!''

''ஆனால் ஒரு வித்தியாசம். என் பல் சொந்தப் பல்!''

ளாக அவனுடைய சுக துக்கங்களில் பங்கு கொண்டு வருகிறாள் அஞ்சலை. மேளம் கொட்டித் தாலி கட்டிக் கல்யாணம் செய்யக் கையில் பசை வேண்டாமா? மாரியாத்தாள் கோயிலில் மனப்பூர்வமாக மாலை மாற்றிக் கொண்டதோடு சரி. இத்தனை வருஷங்களில் ஒரு நாளாவது ஒருவருக்கொருவர் உரக்கப் பேசிக்கொள்ளும்சந்தர்ப்பம் நேர்ந்ததுண்டா? அவர்கள் வசிக்கும் நடை பாதையில் கணவன் மனைவி என்று சொல்லிக் கொண்டு இன்னும் எத்தனை பேர் இல்லை! ஓயாமல் ஒழியாமல் சண்டையும், கூச்சலும் வசைமாரியும்! மாடசாமி கையில் மட்டும் கொஞ்சம் பணம் சேரட்டும். அப்புறம் அஞ்சலையை அந்த நடைபாதையிலா விட்டு வைப்பான்? கூவம் நதிக் கரையில் குடிசை போட்டுக்கொண்டு 'ஜாம் ஜாம்' என்று குடித்தனம் செய்யமாட்டானு?

''சரி! கனாப்பார்த்தது போதும். இனிமே மூச்சுப் பிடிச்சு வலிக்க வேண்டியதுதான்!'' என்று சொல்லிக்கொண்டே மாடசாமி இடுப்புத் துணியை இன்னும் நன்றாக வரிந்து கட்டிக்கொண்டு வண்டிச் சட்டங்களுக்கு நடுவே மாட்டின் ஸ்தானத்தில் நின்றுகொண்டான். குனிந்து இரு கைகளையும் சட்டங்களைச் சுற்றிக் கோத்து மூச்சை அடக்கிக் கொண்டு அவன் நிமிர்ந்தபோது அவன் நெற்றி நரம்புகள் தெறித்து விழுந்துவிடுவதுபோல் புடைத்தன.

ஒரு வழியாக அந்தக் குறுகலான பாதையைக் கடந்து விசாலமான சாலையை எட்டிவிட்டான். ஆனால் சாலையில் ஏற்றப் பகுதி தொடங்கியிருந்தது. அதுவரை அவனுடைய முயற்சி இல்லாமலே அவனுடைய இஷ்டப்படியெல்லாம் வந்துகொண்டிருந்த வண்டி இப்போது ஓர் அடி நகர்வதற்குள் உயிரையே வாங்கிவிடும்போல் சண்டித்தனம் செய்தது.

''என்னண்ணே, ஒண்டி ஆளா வலிக்கறியே போறியே. பொறத்தாலே நான் ஒரு கை பிடிச்சுத் தள்ளட்டுமா?'' என்று கேட்டான் அந்த வழியே நடந்து கொண்டிருந்த ஓர் ஆள். நாட்டுப்புறத்தானு யிருக்க வேண்டும். பட்டணத்தான் வாயிலிருந்து இந்த அனுதாப வார்த்தைகள் வந்துவிடுமா என்ன?

''ஒரு கை தள்ளினுப் புண்ணியமாப்போகும். ஏத்தம் முடியறவரையிலேதான். அப்புறம் சுதாரிச்சுக்குவேன்!'' என்ருன் மாடசாமி.

''எம்மாந்தொலை போவணும் அண்ணே?''

''ஆயிருச்சு. அடையாறு பாலத்தைத் தாண்டிட்டா அரைப் பர்லாங்கு.''

''பாலம் தாண்டற வரையிலே நான் கை குடுக்கிறேண்ணே.''

''போய்க்கோ ராசா. இந்த ஒத்தாசை செய்யறியே, இதுக்கே ஒன்னைக் கோயில்லே வச்சுக் கும்பிடணும்!''

''கடவுள் குடுத்த கையி, ஒருத்தருக் கொருத்தர் ஒத்தாசை செய்துக்கிடறதுக்கில்லாமே வேறே எதுக்கு இருக்கு?''

அவன் பின்னாலிருந்து தள்ள, மாடசாமி முன்னாலிருந்து இழுக்க, ஒருவரையொருவர் பாராமலே இருவரும் பேசிக்கொண்டு சென்றனர். திருவான்மியூரைச் சேர்ந்த அந்த ஆள் சைதாப்பேட்டை கலெக்டர் ஆபீசில் நிலத் தீர்வை விஷயமாக ஏதோ மனுக் கொடுக்க வந்திருந்தானாம். கையிலிருந்த சில்லறை கலெக்டராபீசிலேயே தீர்ந்துவிட்டதால் ஊருக்கு நடந்தே போகிறானாம், பாவம்!

பாலத்தைத் தாண்டியதும் திருவான்மியூரான் விடைபெற்றுக்கொண்டு சென்றுவிட்டான். இடுப்பில் செருகியிருந்த விலாசச் சீட்டை எடுத்துச் சுமாராகப் படிக்கத் தெரிந்தவராகத் தோன்றிய ஒருவரிடம் காட்டி விசாரித்தான் மாடசாமி.

''வலது பக்கம், மூணாவது சந்து, நாலாவது வீடு. நெட்டிலிங்க மரங்கள் இரண்டு இருக்கும்'' என்று பதிலை உதிர்த்துவிட்டு நடையைக் கட்டினார் அந்த ஆசாமி.

அந்த அடையாளங்களை வைத்துக்கொண்டு பல தெருக்களைக் கடந்து அந்த வீட்டு வாயிலை எட்டிவிட்டான் மாடசாமி. நெட்டிலிங்க மரங்கள் இரண்டும் அவனை வரவேற்பது போல் வாயிலில் நின்றிருந்தன. உவகை பொங்கும் உள்ளத்துடன் வண்டியை ஒரு பக்கமாக நிறுத்திவிட்டு நிமிர்ந்தான். தன்னோடு சேர்த்துக் கட்டியது போலிருந்த அந்தப் பெரிய பாரத்திலிருந்து விடுபட்டதும் திடீரென்று இறகைப் போல் இலேசாகிக் காற்றில் மிதப்பது போன்ற உணர்ச்சி அவன் உடலெங்கும் பரவியது. வாயிலில் நின்று, ''ஸார்! ஸார்!'' என்று உற்சாகத்துடன் உரக்கக் கூப்பிட்டான்.

நாலைந்து முறை கூப்பிட்ட பிறகு, ''யாரது?'' என்று அதட்டும் குரலில் கேட்டுக்கொண்டே உள்ளிருந்து ஒருவர் வந்தார். அவரைப் பார்த்ததும் மாடசாமிக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவனோடு வாகை மர நிழலில் ஒதுங்கியிருந்த சங்கிலித்தவிக்வான்தான்!

அவனைப் பார்த்து அவருடைய முகத்திலும் வியப்புக் குறி தோன்றியது. மறு கணம் அவர் முகம் கடுமையாக மாறியது. ''என்ன வேண்டும்?'' என்றார் அதே அதட்டல் குரலில்.

''சிமிட்டி கொணாந்திருக்கேன் ஸார்!''

''சிமிட்டியா? யாரு கொண்டு வரச் சொன்னது?''

''டெங்குக்காரர் தான் இருபது மூட்டை போட்டு அனுப்பிருக்க. இந்த விலாசத்துக்குத்தான். இதோ பாருங்க சீட்டு!''

சீட்டைப் பிரித்துக்கூடப் பார்க்காமல் கிழித்தெறிந்தார் அந்த ஜரிகை அங்கவஸ்திரக்காரர். ''சிமிட்டியும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம்!'' என்றார் கோபத்துடன்.

மாடசாமிக்கு சப்தநாடியும் ஒடுங்கிவிடும் போலாயிற்று, அந்தக் கூச்சலைக் கேட்டு.

''ஸார், ஸார், அப்படிச் சொல்லாதீங்க ஸார். நீங்க ஆர்டர் கொடுத்ததாலே ஸார் அவர் அனுப்பி வைச்சிருக்காரு!'' என்றான் துக்கம் நெஞ்சையடைக்க.

''மூணு வாரத்துக்கு முன்னாலே ஆர்டர் குடுத்ததுக்கு இப்போ அனுப்பிவச்சா என்னய்யா அர்த்தம்? எனக்குத் தேவைப்பட்ட சிமிட்டி ஒட்டிக்கு இரட்டி விலை கொடுத்து வாங்கியாச்சு. முடிக்க வேண்டிய வேலையும் முடிச்சாச்சுன்னேன்! இந்தக் கட்டி தட்டின கலப்படச் சிமிட்டி எனக்குத் தேவையே இல்லே!'' என்று ஆத்திரம் பொங்கக் கத்தினார் அந்த மனிதர்.

மாடசாமிக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. ''ஸார், ஸார், இந்த ஏழை மேலே இரக்கம் காட்டுங்க ஸார். அம்மாந் தொலைவிலேருந்து இழுத்து வந்திருக்கேன் ஸார்!'' என்று கெஞ்சினான்.

''அம்மாந் தொலைவிலேருந்து இழுத்து வந்தால் எனக்கென்னய்யா? மறுபடியும் இழுத்துப்போயி அந்தக் டெங்குக்காரர் மூஞ்சிலேயே கொட்டு'' என்று கத்திய அந்தக் கல் நெஞ்சக்காரர் சட்டென்று உள்ளே செல்லத் திரும்பினார்.

''ஸார், ஸார்! உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு ஸார்! நீங்க குடுக்கிற கூலிப் பணத்தை நம்பித்தான் ரெண்டு உயிர்கள் பிழைக்க வேண்டியிருக்கு ஸார்!'' என்று கதறினான் மாடசாமி.

''கூலிப் பணமா கேக்குது உனக்கு? எவரு அனுப்பி வச்சாரோ அவரையே கேளு.''

''ஐயா! இந்த அநியாயம் ஒரு நாளும் அடுக்காதய்யா! இந்த ஏழையோட வயத்தெரிச்சல் உங்களைச் சும்மா விடாதய்யா!''

''ஏய்! வீணு ஆகாத்தியம் பண்ணிக் கூச்சல் போட்டாயோ தெரியும் சேதி! அல்சேஷியனை அவுத்து விட்டா அக்கு அக்காப்பிச்சுப் போட்டுடும்!'' என்று நாய் குரைப்பது போலவே குரைத்தார் அவர். அல்சேஷியனும் அவரோடு சேர்ந்து குரைத்தது.

''நீ வா, டாமி! பாவம், எத்தனை நேரம் தான் பட்டினியா யிருப்பே!'' என்று அந்த நாயைக் கொஞ்சியவாறு உள்ளே சென்றுவிட்டார் அந்த இதயமற்றவர்.

அப்புறம் என்ன நடந்ததென்ற உணர்வே மாடசாமிக்கு இல்லை. வண்டியை எப்படி இழுத்துக் கொண்டு எந்த வழியாக நடந்தான் என்ற நினைவும் அவனுக்கு இல்லை. அலறித் தவிக்கும் உள்ளத்துடன் ஆவேசம் கொண்டவன் போலத்தான் அவன் அந்தப் பார வண்டியை இழுத்துச் சென்றான். உலகம் முழுதும் தனக்கெதிராகச் சதி செய்கிறது என்ற எண்ணம் அவனை வெறி பிடித்தவன் போலாக்கியது. பசி, தாகம், களைப்பு, சோர்வு எல்லாவற்றையும் விரட்டிவிட்டது அந்த வெறி. குமுறலும், கோபக் கொந்தளிப்பும் தான் மேலோங்கி நின்று அவனைப் பிடித்துத் தள்ளிக் கொண்டிருந்தன.

''அந்தக் டெங்குக்காரரிட்டேயே கேக்கிறேன்: இந்த ஏழை வயத்திலே மண்ணை அள்ளிப் போடறியே, இது நியாயமான்னு? என்ன பதில் சொல்றாருன்னு பாத்திடறேன்!'' என்று மனத்துக்குள் கறுவிக் கொண்டே நடந்தான்.

> ஒருவனேயான கடவுளை வழிபடுவதற்காக நான்—மீண்டும் மீண்டும் பிறப்பேனாக! பிறந்து ஆயிரமாயிரம் இன்னல்களை அநுபவிப்பேனாக! அந்த ஒரே கடவுள்—நான் நம்பும்—ஒரே கடவுள்—எல்லா மக்களும் சேர்ந்தவனேயாவான். தீயோனாக உள்ள அந்த என் கடவுளை, துயருற்று நிற்கின்ற அந்த என் கடவுளை, எந்தெந்த நாட்டிலும் ஏழையாக ஏங்கி நிற்பவன் யாரோ அந்த என் கடவுளை வழிபடுவதற்காக நான் மீண்டும் மீண்டும் பிறப்பேனாக!
>
> —ஸ்வாமி விவேகானந்தர்

பிரேதக் களையுடன் தள்ளாடித் தள்ளாடி அந்த சிமெண்டுக் கிடங்கை நெருங்கியபோது மாலை வெயில் மறைந்து எங்கும் அந்தியின் சாம்பல் படர ஆரம்பித்தது. கிடங்கின் எதிரே வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே சென்றான் மாடசாமி. கல்லாப்பெட்டியருகே கிடங்குக்காரர் இல்லை. அவர் மகன்தான் உட்கார்ந்திருந்தான்.

"ஐயா எங்கே?" — அடிவயிறே குழிய மாவிவிட்டது போன்ற திகிலுடன் கேட்டான் மாடசாமி.

"அவசர வேலையாக வேலூருக்குப் போயிருக்காங்க. திரும்ப நாலு நாளாகும்."

"என்னை மோசம் பண்ணிட்டுப் போயிட்டாரே! என் வயித்திலே மண்ணை அள்ளிப் போட்டுட்டுப் போயிட்டாரே!"

"ஏன் இப்படிக் கூச்சல் போடறே? என்ன நடந்தது இப்போ?"

"நாலு மைல் தொலைவிலே ஒரு எடத்துக்கு இருபது மூட்டை சிமிட்டி எடுத்துப் போகச் சொன்னாரய்யா. அவங்களுக்குத் தேவையில்லையாம். அவ்வளவையும் திருப்பி அனுப்பிட்டாங்கய்யா!" — மாடசாமியின் விழிகளிலிருந்து கண்ணீர் பெருகியது.

"அதுக்கு ஏனய்யா ஒப்பாரி வைக்கிறே? மூட்டையைக் கணக்குப் பாத்து எறக்கிவச்சிட்டு வீட்டுக்குப் போக வேண்டியதுதானே!"

"எனக்குச் சேர வேண்டிய கூலியைக் குடுத்திடுங்கய்யா..."

"அந்த வெவகாரமெல்லாம் எனக்குத் தெரியாது. அப்பா வந்ததும் பேசிக்க."

"அப்பா வந்ததுமா? நாலு நாள் பொறுத்தா? ரெண்டு நாளா நான் பட்டினி அய்யா! என் பொஞ்சாதியும் பட்டினி. இந்தக் கூலி கைக்கு வரலேன்னு உயிரையே விட்டுடுவோம்!"

"விடுங்களேன். யாருக்கென்ன நஷ்டம்?" — கேலியாகச் சிரித்தான் சின்ன முதலாளி.

மாடசாமி ரௌத்ராகாரமாக மாறினான். "போக வரக் கூலி ஆறு ரூபா வந்தாகணும். குடுக்கப் போறியா இல்லியா?"

"எடுத்துப் போன சரக்கை அப்படியே கொண்டு வந்த மூஞ்சிக்குக் கூலி வேறு கேக்குதோ? போடா!"

"குடுக்கப் போறியா இல்லியா?" என்று கல்லாப் பெட்டியருகே பாய்ந்து சின்ன முதலாளியின் சட்டையைப் பிடித்துக்கொண்டான் மாடசாமி.

"திருடன், திருடன்!" என்று கத்தினான் சின்ன முதலாளி.

கிடங்கில் மூட்டை தூக்கும் முரடனொருவன் சின்ன முதலாளியின் கூச்சலைக் கேட்டு அங்கே ஓடி வந்தான். மாடசாமி நிற்கும் நிலையைப் பார்த்ததும் அவன் மீது பாய்ந்து அவன் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான். தள்ளாடிப் பின்னடைந்த மாடசாமி ஆக்ரோஷத்துடன் முன்னே தாவி அந்த முரடனைத் தாக்கக் கையை ஓங்கினான். அந்தக் கையை அப்படியே பிடித்து முறுக்க ஆரம்பித்த முரடன், மீண்டும் நாலைந்து குத்துக் குத்தியதும் மாடசாமி சுருண்டு விழுந்தான்.

"அடபாவி! என் புருஷனைக் கொல்றியே!" என்று அலறிக்கொண்டே அங்கே ஓடிவந்தாள் அஞ்சலை.

அஞ்சலையின் குரல் கேட்டதும் மெதுவாகத் தலையைத் தூக்கினான் மாடசாமி.

"மச்சான்!" என்று கத்தியபடியே அஞ்சலை அவனருகே மண்டியிட்டு உட்கார்ந்து அவன் தலையைத் தன் கைகளால் தாங்கிக் கொண்டாள்.

"அஞ்சலை, உலகமே நமக்கு எதிரியாயிட்டுது அஞ்சலை! உழைச்ச உடம்புக்கு உதையும் குத்தும்தான் கிடைக்குது இந்த உலகத்திலே. வாழ்ந்தது போதும் அஞ்சலை, இந்த மோசக்கார உலகத்திலே வாழ்ந்தது போதும்!" என்று விம்மினான் மாடசாமி.

"அப்படிச் சொல்லாதே மச்சான். உலகமே உனக்கு எதிரியாயிட்டாலும் நான் உன் பக்கத்திலே இருக்கேனே, அதை மறந்திட்டியா?"

"மறக்கலே அஞ்சலை....ஆனா ...ஆனா..."

"எயிந்திரி. வூட்டுக்குப் போகலாம்."

"வெறுங் கையோடே எப்படி வருவேன் அஞ்சலை? எத்தினி நாளைக்கு நீ பட்டினியாயிருக்கிறதைப் பார்த்துக்கிட்டிருப்பேன்?"

"பட்டினி கிடக்க வேண்டாம். வவுறு ரொம்பச் சாப்பிடலாம் வா."

"எரியற கொள்ளியிலே எண்ணெயை ஊத்தாதே புள்ளே."


"மெய்யாத்தான் சொல்றேன். இன்னிக்கு எனக்குச் சித்தாள் வேலை கெடைச்சுது. கைமேலே ஒண்ணரை ரூவா கூலியும் கெடைச்சிது. சோறாக்கி வச்சிட்டுத்தான் ஒன்னைத் தேடி வந்தேன். எயிந்திரி."

அன்பு ததும்ப அஞ்சலையின் முகத்தைப் பார்த்தான் மாடசாமி. "அஞ்சலை, உனக்குக் கிடைச்ச அதிர்ஷ்டம் எனக்கு இல்லையே!"

"ஒனக்கு நான் கெடைச்சிருக்கேனே, அந்த அதிர்ஷ்டம் போதாதா?" என்று கண்களிலே நீர் ததும்பக் கேட்டாள் அஞ்சலை.

"ஆமாம் அஞ்சலை, எனக்குக் கைகுடுக்க நீ இருக்கே. ஒலகத்தையே எதிர்த்து நிக்க இந்தத் தெம்பு போதும் எனக்கு" என்று கூறிய மாடசாமி அஞ்சலையின் கையைப் பிடித்துக் கொண்டு எழுந்தான்.

Printed & Published by R Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.







REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

